ஸ்ரீ மஹா பக்தவிஜயம்

நாமதேவர் சரித்திரம்.

தமிழ்ப்பண்டிதர்

டி. வி. பார்த்தஸாரதி அய்யங்கார்

எழுதியது.

OFFICE OF THE
6-JAN 1936
MADRAS

3533

சென்னை:

R. இராஜகோபால் நாயுடு

அவர்களால் செல்வரங்கன் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1935.

922.945

OFFICE OF THE R... 6-JAN 1936 MADRAS

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நமஃ

ஸ்ரீமஹா பக்தவிஜயம்

நாமதேவர் சரித்திரம்

334

இது

பக்திக்களஞ்சியமே என்னும்படியாக,

பல்நூலாசிரியரும், பல்லுரை யாசிரியருமாகிய,

தமிழ்ப்பண்டிதர்

டி. ஸி. பார்த்தஸாரதி அய்யங்கார்

எழுதியது.

சென்னை:

R. இராஜகோபால் நாயுடு

அவர்களால் செல்வரங்கன் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1935 [விலை 0—5—0

—: அணிந்துரை :—

ஓ! ஆர்யோத்தமர்களும் பரம பவித்திரர்களுமான என் பிரிய சகோதரி சகோதரர்களே! இக்காலமகிமையினுல் ஸமஸ்தமான ஜாதியிலிருக்கும் ஸ்திரீ புருஷர்களுக்கு ஆத்மஞான விஷயத்தில் ஒரு உயர்ந்த ஜிக்ஞாசை இருதயத்தில் தோன்றியசங்கதி லோக முழுமையும் காணப்படுகிறது. அருணோதயம் சூரியோதயத்திற்கு முன் உதயமாவதுபோல், ஆத்மஞானத்திற்கு முன்னே ஸூபேச்சை உதயமாகும். இந்த நிலைமைக்கு வந்தவர்களெல்லோரும் தன்யர்களே. இதற்குச் சந்தேகமேயில்லை. இப்படி இருந்தாலும் வைராக்கிய பக்தி ஸதாசாரங்கள் பூர்த்தியாக இல்லாத காரணத்தினுல். பூர்ணுனந்த சுகத்தை யடையாமல் ஜனங்கள் பூர்வநிலைமையிலிருந் உயர்ந்த நிலைமையை அடையாமலிருக்கின்றுர்கள். ஏனென. போஷிப்பு இல்லாத பயிர்போல, பிரமானந்த சுகமானபலத். அனுபவிக்காமல், தாழ்ந்த நிலையிலிருக்கும் காரணத்தினுல்மோக்ஷத்தைக்கோருகிறவர்களுக்கு வைராக்ய போத உபரதி பூர்த்தியாவதற்கே இச்சரித்திரம் எழுதக்காரணமானது. அன்றியும்,

" ஹரேர்நாமைவ நாமைவ நாமைவ மமஜீவனம்
கலௌ நாஸ்த்யேவ நாஸ்த்யேவ் கதிரந்யதா "

என்னும்படி இக்கலிகாலத்தில் ஞானயோக மார்க்கங்கள் துஸ்தரமா யடையத்தக்கதாயிருப்பதால் ஸ்ரீஹரிசரணு விந்தத்தில் அநவரதம் அநந்யபக்தி செய்வதைவிட மோக்ஷஸாதனம் வேறில்லையென மஹனீயர் கூறியிருப்பதாலும், எனது நண்பரான, சென்னை. R. இராஜகோபால் நாயுடு, அவர்கள் என்னைப்பல்காலும் பக்திரஸங்கனியும் உத்தம பக்தர்களின் சரிதங்களை எழுதித்தரும் படிக்கேட்டுக் கொண்டபடியால், நான் அவரது வேண்டுகோளுக் கிணங்கி, இதுவும் நாம்செய்த பாக்கியமேயாகுமென்றுன்னி, ஜீவன் முக்தர்களுடைய சரித்திரங்கள் பேதஞான ரோகத்தோடு வருந்து கின்ற ஜனங்களுக்கு ஞானரஸம் ததும்புகின்ற பிரம்மானந்த தேவாம்ருதத்தைப்புகட்டி அவ்வியாதியை நீக்கியழிவில்லா ஸாயுஜ்ய மளித்தலால் இதனை எழுதலாயினேன்.

இச்சரிதத்திலிருக்கும் சப்ததோஷங்களைப் பாராமல், இதன் முக்கியமான நோக்கத்தை மாத்திரம் தெரிந்துகொள்ளப் பிரார்த்திக்கிறேன்.

" கரும்புவளைவாக யிருந்தாலும் அதன் மாதுர்யம் கெடாது " என்பதாக நான் நிச்சயித்திருக்கிறேன்.

இங்ஙனம்:

டி. ஸி. பார்த்தஸாரதி அய்யங்கார்

ரிஜிஸ்டர் அறிக்கை

1935ஞ ஜூலைமீ 31உ சென்னை பெத்துநாய ...ன் பேட்டை, பெருமாள் கோவில் தெருவு, 26-வது நெம்பர் வீட்டில் இருக்கும் புத்தக வியாபாரம் செய் ...யும் R. இராஜகோபால் நாயுடு அவர்களுக்கு யானுகிய செய்யார் தாலூகா பூதேரியிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர், டி. ஸி. பார்த்தஸாரதி அய்யங்காரால் எழுதப்பட்ட நாமதேவர் சரிதத்தை ஷையார்க்கு சர்வசுதந்தரத்தையும் அடையுமாறு கொடுத்து விட்டேன். இனி இதே சரிதத்தை இதுபோலவே எழுதிப்பிறருக்கு என் பெயரால்கொடுப்பதில்லை. கொடுத்தால் நஷ்டம் என்னைச் சார்ந்ததென்பதைத்தெரிவித்துக்கொண்டேன். இதைப் பிறர் அச்சிட்டால் இதனுல் ஏற்படும் நஷ்டத்திற்கு உட்படுவீர் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்:

டி. ஸி. பார்த்தஸாரதி அய்யங்கார்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீ மஹா பக்தவிஜயம்

நாமதேவர் சரித்திரம்

திருமால் துதி

“ இரவிதன் குலத்திற் பிறந்து தாடகையை மடித்தேதிர்
சுவாகுவை யெற்றிச்
சரியிலாச் சகனகன் மகடனைமணந்து சரத்தினால்
விராதனை வீட்டிக்
கரன்முதன் மூவர்கவந்த னிந்திரன்சேய் கந்தேசனி
வர்களை வதைத்துத்
திருவுடன யோத்தி நகரிடை மீளுந்தேச ரதராம
னைத்து திப்பாம் ”

நாமதேவர் அவதாரம்

இவ்வுலகின் நிலையை நன்குணர்ந்து உண்மை ஞானத்தைக் கடைப்பிடித்து ஒழுகும் சித்தர்கள் ஒருநாள் அதிகாலையிலெழுந்து அனுஷ்டானத்தைப்பூர்த்தி செய்துகொண்டு, நாபாஜி சித்தரை வணங்கி, சுவாமி! தேவரீர் கிருபையாலே இது வரையில் அநேக பக்தர்களின் கதைகளை எல்லாங்கேட்டு ஆனந்த மடைந்தோம். அவைகள் ஒவ்வொன்றும் அடியோங்களுக்குத்தேவர்கள் உண்ட தெள்ளமுதமாகவே இருந்தன. இன்னும் அப்படிப் பட்ட கதைகளைக் கேட்டுய்யவே தேவரீரை நாடி வந்தோமெனச் சொல்லுகையில், நாபாஜி சித்தர், சுவாமிகாள்! பக்தர்கள் சரித்திரங்கள் மெத்த தித்திக்குமென்பதில் சந்தேகமில்லை. அவைகளைச்

சித்த சுத்தியுடன் கேட்பவர்கள் இக்கலிகாலத்திலே மிகவும் துர்லபம். ஆயினும் நீங்கள் வைராக்கிய சீலர்களாய் விடாமல் கேட்டு வருவதால் இன்று நாமதேவரது சரிதத்தைச் சொல்லலாமென நினைத்தேனென்றார். அதற்குச்சித்தர்கள் 'கும்மிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல' நாங்கள் நினைத்தமையே தேவரீர் திருவாக்கிலும் உதித்தது. அதுவே ஸர்வஸிலாக்யமானதென, நாபாஜியும் சந்தோஷத்துடனே அவர்களை நோக்கி, சித்தர்களே !

எவ்வுலகவாசிகளும் போற்றிப்புகழும் சந்திரபாகாநதியின் கரையின் மேல் கண்டவர் கண்களைக்கவரும் அழகுடன் விளங்குவது பண்டரீபுரம். அப்பண்டரீபுரத்தின் பான்மையோ ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனாலும் சொல்லுவதற்கு அருமையானது. ஸதாஸர்வகாலமும் பக்தர்கள் நீங்காத பெருமையால் விளங்குவது, ஸர்வ ஜகதகாரண பூதனாகிய திருமால் வீற்றிருக்கும் புகழுடைய புண்ணியதலம். வைகுந்தம் புக்க விமலரும் மீண்டு தொழக்காதலிக்குங் காக்ஷியையுடையது. இவ்வளவு மகிமை பொருந்திய பண்டரீபுரத்திலே வஸ்திரம் நைந்து பிழைக்கும் வணிகர் குலத்திலே தாம்ஸேஷ்டி என்று பெயருடையவர் இருந்தார். அவர்கல்வி கேள்விகளின் அவ்வளவு திறமையில்லாதவராக விருந்தாலும், நமது மூதாதையர்கள் வழிபட்டு வந்த திருமாலினிடம் நீங்காத பக்தியுடையவர். தாம் திருமாலின் அடியவர் என்பதை எல்லாரும் நன்றாய் அறிந்துகொள்ள ஸதாஸர்வ காலமும் நெற்றியில் புண்டரத்தோடு பொலிபவர். கெட்ட குணத்தைக் கனவிலும் கருதாதவர். தேகத்தை அநித்திய மென நினைத்து ஸதா பகவத் பாகவத கைங்கரியமே செய்துகொண்டிருப்பதில் மிகவும் திருப்தி யுள்ளவர். இகவாழ்வில் கைப்புள்ளவராக விருந்தாரேனும் ராமநாமத்தை மறவாமல் தையல் வேலையைத் துறவாமல், தன்னிடம் வேலை தருபவர்களைக் கடியாமல் இருந்துவந்தார். இவரது மேன்மைக்குணத்தை அறிந்த அப் பண்டரீபுர வாசிகள் எல்லோரும் அவரிடமே ஆடை தைக்க வருவார்கள். அவரும் தன்னிடம் வரப்பட்டவர்களை மரியாதையுடன் பேசி நேசிப்பார். இவ்வாறு தாம்ஸேஷ்டியார் யாவராலும் சிலாகிக்கப்பட்டு வந்தமையால், அவ் வூரரெல்லாம் தத்தம் ஆடைகளை அவரிடமே தையலுக்கனுப்பலானார்கள். தாம் ஸேஷ்டியாருக்கோ ஒரு கணமும் ஓய்வில்லை. ஆனால் பகவான் நாமத்தை அவர் மறப்பதுவுமில்லை. அவருக்கு வருப்படியோ மேன்மேலும்

தோண்டிய மணற்கேணியின் ஊற்றைப் போல் வளர்ந்துகொண்டே யிருந்தது.

இவ்விதம் எவ்வகையினும் குறைபாடில்லாதவருக்கு மகா சீலையாயும், ஸத் குணவதியாயும், ஸர்வ லக்ஷண முள்ளவளாயு முள்ள குணபாய் என்னும் மங்கை நல்லாள் மனைவியாயினள். இவள் மாமியார், மாமனார் முதலிய சகலருக்கும் கண்ணுக்குக் கண்ணா யிருந்தாள். இவள் பத்தரை மாற்றுத் தங்கம். பதிவிருதா சிரோமணி. அவள் தீண்டா நெருப்பு.

> " பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்பும்
> புத்தேளிர் வாழு முலகு "

என்கிறபடி, இம்மையில் கணவனைப் பூசித்த பெண்கள் மறுமையில் சுவர்க்கத்தில் தேவர்களால் பூஜிக்கத் தக்க பெருஞ் சிறப் புடையராவர் என்பதற்கு அவளே தக்கவளாகி விளங்கினள். இன்ன தன்மையினையுடையாளை மனைவியாகக் கொண்ட தாம் ஸேஷ்டியார் இல்லற வாழ்க்கையை இன்பமாய் நடத்தி வருங் காலத்திலும் ஸ்ரீ பரந்தாமனைக் கனவிலும் மறவாமல் ஸத் ஜனரோடு கூடி அல்லும் பகலும் இடைவிடாமல் பஜனை செய்துகொண் டிருந்தார். பிரதி தினமும் பண்டரீபுர நாதனுக்கு நைவேத்தியங் கொண்டு போய்ச் சமர்ப்பித்து வந்தார். இவ்விதமே பயபக்தியோடு சரியை கிரியைகளைச் செய்து வருங் காலையில் அவருக்கு வயது அறுபதிற்கு மேலாயிற்று. அவரது மனைவியும் ஏறக்குறைய ஐம்ப தாண்டுகள் வயதுடையவளாக விருந்தனள். தம்பதிக ளிருவரும் இவ்வாறு வயது முதிர்ச்சியுடையவர்களாக விருந்தும் இந்த இம்மை யாசையால் கவிப்புண்டு பாண்டுரங்கனை அடிக்கடி நினைந்து கஷ்டப்படுவர். தாம் ஸேஷ்டியோ இல்லற வாழ்க்கையிலிருந்தாரேனும் தன் மனைவியைப் போல அவ்வளவு இம்மையாசையில் மனதை விட்டவரன்று. பஜனை செய்யாத பக்தர்களின் நேசத்தை மறந்தும் தொட்டவரன்று. ஆயினும், 'அபுத்ரஸ்ய கதிர் நாஸ்தி' என்னும் தர்மத்தை நினைத்து மாத்திரம் மனம் வேதனை செய்துகொண் டிருந்தமையால் ஒவ்வொரு நாளும் பாண்டுரங்கனைப் பணியும்போதெல்லாம்,

" ஏகோ பிக்ருஷ்ண ஸ்சஸக்ருத் ப்ரணுமோ
தஸாஸ்வ மேதேன பலேன துல்யா
தஸாஸ்வ மேதேன புனரேவ ஜன்மா
க்ருஷ்ணத் ப்ரணுமோ நபுனர்ப் பவாயா "

என்று துதித்து எனக் கொரு புத்திரன் பிறக்கும்படி அநுக்கிரகஞ் செய்வாய் என மனங்கசிந்து கேட்பார்.

குணுபாய் பதிவிரதைகளில் சிறந்தவளாகையால் காலையில தன் கணவன் படுக்கையை விட்டெழுந்திருப்பதற்கு முன்னமே எழுந்து வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு, கணவனது பாதம் விளக்கிய நீரைக் கங்கா தீர்த்தமாகவும், அவன் உண்ட மிச்சிலைத் தேவதா பிர சாதமாகவும், அவன் பாதஸேவையைப் பரமார்த்த தரிசனமாகவும், அவன் வாய்ச் சொல்லைக் குருபதேசமாகவும் கொள்வதே யன்றி, வேறே தீர்த்தம், பிரசாதம், மந்திரோபதேசம் உண்டென்று மதிப்ப தில்லை யாயினும், தன் கணவன் பண்டரீநாதன் கோயிலுக்கு வருவ தற்கு முன்னமே தான் பண்டரீ நாதன் திருக்கோயில் வலம் வந்து ஸன்னதி முன்னர் நின்று, பஞ்சவர் தூதா! பாண்டுரங்கா! பரமபத நாதா! தேவரீர் இவ்வேழையாள் மேல் கிருபை புரிந்து ஒரு மகனை அருள் செய்ய லாகாதா வென்று வேண்டிக்கொண்டு தன் வீட்டை நோக்கி வந்து சேர்வாள்.

இவ்விதம் அநேக நாள் தன்னையே தஞ்சமாக வடைந்து பக்தி புரியும் குணுபாயின் மேல் பண்டரீ நாதனுக்குப் பரம கிருபை யுண் டாயிற்று. ஒரு நாள் விடியற்காலையில் பண்டரீ நாதன் ஒரு விருத் தப் பிராமண வடிவத்தோடு குணுபாயின் கனவிற் றோன்றி, பெண் கள் சிகாரத்தினமே! நீ கவலை கொள்ளாதே நீ முன்னம் பண்ணிய புண்ணியமிகுதியால் ஒருஆண் மகவைபெறுவாய் என அநுக்கிரகஞ் செய்துமறைந்தார். குணுபாய் கண்விழித்து ஆனந்தமடைந்து தான் கண்ட கனவை கணவனுடன் சொல்லினள். தாம் ஸேஷ்டி பெரு நகை புரிந்து, 'பேதமை என்பது மாதர்க் கணிகலம்' என்பது உன் னிடம் பிரத்தியக்ஷம். இவ்வுலகில் மாதர்கள் பத்து மாதம் சுமந் தல்லவோ குழந்தையைப் பெறுவார்கள். அப்படிக் கல்லாமல், நீ நாளையே ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்ளுவா யெனக்கண்ட கனவு விந்தையே. நீ பகலெல்லாம் நினைத்திருந்த நினைவே உன்னை அவ்வாறு விடுத்தது. இவ்விஷயத்தைப் பிறர் கேட்டால் நகைப்பிற்

_மாகும். நாமிருவரும் விருத்தாப்பியத்தை அடைந்துவிட்டோம். கிட ப(புத்திர பாக்கியத்தைக் குறித்துச் சிந்தித்தல் பிசகே யாகும். நாம் அடைய வேண்டிய நல் மார்க்கத்தை நாடிப் பரமனை வழிபடுதலே சாலச் சிறந்ததாகுமெனத் தன் மனைவிக் குபதேசம் புரிந்து வெளியே சென்றார். குணபாயோ முன் போலவே பாண்டுரங்கர் கோயிலுக்குப் போய் மீண்டும் அவ் வரத்தை விரும்பி யாசித்து வந்தாள். ஆயினும் குணபாயின் மனம் ஒரு நாளுமில்லாத குதூஹல ஸாகரத்தில் அமிழ்ந்தியது. அதன் காரணம் அவளுக்கே புலப்படவில்லை. இது அப்பண்டரீநாதனை புண்டரீகாக்ஷன் செய்யும் புதுமையே என வாளாவிருந்தாள். தாம் ஸேஷ்டியார் மறுநாட் காலையில் படுக்கையை விட்டெழுந்து,

“ உள்ளமறிவாய் உழைப்பறிவாய் நான்ஏழை
தள்ளிவிடின் மெத்த தவிப்பேன் பராபரமே ”

யென்று ஓ அச்சுதா! அகளங்கா! அமலா! அக்ஷரா! அனாத ரக்ஷகா! என் மனதை நிலைநிறுத்தும் மார்க்கம் சொல்லாயோ! வந்தெதிர் நில்லாயோ என்று நினைத்து நாள்தோறும் போவதுபோல் சந்திரபாகாநதிக்கு ஸ்நானஞ்செய்யப் போயினார். அப்போது யோகியர்களுடைய இருதயங்களும் பின்தொடரமாட்டாத பரப்ரம்ஹ ஸ்வரூபனாகும் ஸ்ரீகிருஷ்ணபகவான் ஒரு விருத்தப் பிராமணரூபத்துடனே தாம் ஸேஷ்டியாரின் எதிரிலே வந்து, ஐயா! இந்த பண்டரீபுரத்தில் அநேக பக்தர்கள் இடைவிடாமல் வருகின்றார்களாமே! அவர்கள் அங்கே வருவதனால் அடையும்பயனென்ன? அப்பண்டரீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பரமன் தன்னை நோக்கிப் பக்திசெய்பவர்களின் மனோரதத்தைப் பரிபூர்த்தி செய்வதுண்மைதானா? உள்ளும் புறமும் ஒத்து பஜனை செய்பவர்களுக்கு அப்பரமன் இகலோகவாழ்வைத்தான் தருகின்றாரா? அல்லது பரலோக வாழ்க்கையையும் தருகின்றாரா? நானோ வயது முதிர்ந்த கிழவன். என்மனைவியோ என்னிலும் வயது குறைந்தவளேனும் தள்ளாமை மேலிட்டவளாகவே தென்படுகின்றாள். நாங்களிருவரும் படைத்துள்ள திரவியமோ எவ்வுலகையும் ஆட்கொண்டு வாழலாம். அப்படியிருக்க, எங்களுக்கு ஒருபுத்திரனில்லை என்னுங் குறைவுதான் மிகவும் வருத்திவருகின்றது. என்மனைவி புத்திரனில்லையே எனத் துக்கித்தால், நான் அவள் மனதைச் சாந்திப்

படுத்த, பெண்ணே! நீ வியனமடையாதே! இவ்வுலகிலுள்ள குழந்தைகளெல்லாம் உன் குழந்தையாகவே எண்ணிக்கொள்ளென்று சமாதானம் சொல்லிக்கொண்டு வருவேன். ஆயினும் நேற்றைய தினம் என்மனைவி என்னை நோக்கி, விருத்தாப்பியர்களுக்குப் புத்திர ஸந்தானம் பலியாதென்கின்றீரே! அதை நான் நம்பவேமாட்டேன். பண்டரீபுரத்தில் பரமவிருத்தாப்பியரான தாம் ஸேஷ்டியாருக்கும் அவரது மனைவியான குணுபாயிக்கும், முன்னம் நந்தகோபாலச் சிறுவர்கள் கண்ணும்பூச்சியாட்டத்தில் கிருஷ்ணனைப் பின்தொடர்ந்து பிடித்துக்கொள்ள யத்தனிக்க, மஹாவிருத்தனுகியும் கண்ணொளி யிழந்தவனுகியுமிருந்த ததிபாண்டனை ஸ்ரீதாமோதரன் நோக்கி என்னை இந்தப் பிள்ளைகள் தீண்டாதிருக்கும்படிப் பசுக்கூடத்தின் நடுவில் உனது குடையினுல் மூடுவாயானுல் இக்கண்ணும்பூச்சி கலைந்த தக்ஷணமே உனக்குக் கண்ணொளியுண்டாகும்படி கிருபை செய்வதுமன்றிச் சிறந்த ரூபலாவண்ணியமுள்ள பெண்களோடு கூடிச் சர்வபோகங்களையும் அனுபவிப்பதற்குத் தக்க வுத்தமயௌவனமுமுண்டாகச் செய்கிறேன் அல்லது ரம்பை முதலியவர்களுடன் கூடி ஸ்வர்க்க சுகாநுபவம் அடையவிரும்பினும் அதையுந் தந்தருளுவேன் அல்லது தேவர்கள் முனிவர்கள் யோகிகள் முதலியவர்களாலும் அடைதற்கரிதாயும், பிரகிருதிபந்த ஜனிகு துக்கஸம்பந்தமேயில்லாததாயும், மகாஸுகரூபமானதாயும்மற்றெந்தசுகத்திலும் அதிசயம் தோன்றுதிருக்கும்படியான திவ்யமங்கள ஸ்வபாவத்தை யுடையதாயும், நித்தியமாயுமுள்ள என்னுடைய பரமபதம் வேண்டினும் தந்தருவேனென்று திருவாய்மலர்ந்தவர் அருளால், அந்த தாம் ஸேஷ்டியாருக்கு ஓரே தினத்தில் குழந்தை பிறந்தவாமே? அது உண்மைதானேவென்று கேட்டாள் என்றனர்.

அதுகேட்ட தாம் ஸேஷ்டியாருக்கு நாணம்மேலிட்டுப் பதில் சொல்ல நாவெழாமல் சற்றுநேரம் வாயைமூடிக்கொண் டிருந்து, இந்தப்பிராமணன் ஏதோ ஒரு கள்ளமனதுடனே நம்மை பரிகாசம் செய்கின்றுன்போலத் தோன்றுகின்றது. இவனோ துவாரகையிலிருந்து வந்தவனுகவும் புகலுகின்றுன். ஒருகால் நமது மனைவி நம்முடன் இரவு பேசிய மொழிகளை அறிந்திருப்பானோ என்று சந்தேகிக்கவும் இடமில்லை. இதென்ன விந்தையோவெனச் சிந்தித்துக்கொண் டிருந்தார்.

அதற்குள் அம்மாயா மறையோன் நீர் டகவைப்பெற்றெடுந்த பெருமையோ என்னைப் பொருட்படுத்தாது வாயைமூடிக்கொண்டிருக்கின்றீரென அவரது கையைப் பிடித்துககொண்டு, ஐயா! அரிபக்தரே! நீர்பெற்ற அப்பாக்கியத்தை நாங்கள் பெறக்கூடாதோ? பிராம்மணர்கள் தான் பேராசைபிடித்தவர்களெனப் பேதைகள் சொல்லுகின்றனர். நீயுமா என்னிடம் பொறுமை கொள்ளவேண்டும். நான்சொன்ன வார்த்தை உமது செவிக்கேறவில்லையோ? அல்லது உமது செவிகள் தான் செவிடா? இப்படிக் காதுகேட்காத செவிடனுகியும் என்னினும் வயது சாய்ந்த வுமக்குப் பிள்ளையாசைமட்டும் விடவில்லையே? என்று அங்கே போய்க்கொண்டிருந்தவர்களெல்லாம் கேட்டு நகைக்கும்படி உறக்கக்கத்தினர். அங்கே போய்க்கொண்டிருந்த சிலர் அவ்விருவிருத்தாப்பியர்களின் வாய்ச்சண்டை விநோதத்தைக் கண்டு நகையாடினூர்கள். தாம் ஸேஷ்டியாருக்கோ அப்போது கோபம் அதிகரித்தது. விருத்தப்பிராமணரை அடிக்கவும் மனம் நாடிற்று. ஆயினும் இவர் நம்மினும் வயது தளர்ந்தவராகவும், ஸர்வலக்ஷணராகவும், வைதிகராகவும், ஆசானுபாகுவாகவும் பொலிகின்ருர். இவரைக் கைநீண்டுவது மிகவும் பாவமாகுமென நினைத்து, சுவாமி! இனி என்னைப் பரிகாசஞ்செய்ய வேண்டாம். வயது சாய்ந்தவெனக்குப் பிள்ளை எண்ணமிருக்குமா? உமது வந்த காரியத்தைப் பார்த்துக்கொண்டு கௌரவமாக அப்பாற்சென்றுவிடும். நீர் வயதிலே பெரியவராக விருந்தும் சிறுபிள்ளைகளைப்போல ஒழுகுகின்றீரே! இது உமது வயதிற்குத் தகுதியான காரியமல்ல. பிரயோசனமற்றவார்த்தைகளைப் பேசிக் காலத்தைப் போக்குவதைக் காட்டிலும் பண்டரீநாதன் பாதம்பணிந்துய்யச் செல்லுமென்று சொல்லிச் சிறிது அப்பால் சென்றனர். மீண்டும் தாம் ஸேஷ்டியை விடாமல் பின்தொடர்ந்த விருத்தவேதியன், ஐயா! நான் ஒருவரிடமும் பொய்வார்த்தை பேசுவதில்லை. உன் மனையாள் இப்போது தான் ஒரு ஆண்மகவை பெற்றெடுக்க நான் பார்த்து வந்தேன். இது நிச்சயம். என் வார்த்தை பொய் என்று தோன்றினல் நீரே வீட்டில் போய் பார்க்கலாம் என்றனர். உடனே தாம்ஸேஷ்டியார் என்ன புத்தியில்லாமல் கத்திக் குவிக்கின்றீர்? விருத்தாப்பியம் மேலிட்டவர்கள் விரும்பினும் புத்திரனுண்டாகுமோ? கேவலம் உம்மைப்போல, முழுபூஷிணிக்காயைச் சோற்றில் மறைத்துப்பேசும் மதியிலியை இதுவரையில் கண்டதே கிடை

யாதெனக் கோபித்துப் பேசினர். தாம்ஸேஷ்டியாரே! நான் பொய்யனு? நீர் பொய்யனு? ஒவ்வொரு நாளும் நீர் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தும் இன்றுபாராதவர்போல் பேசுகின்றீர். நான் உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைப்பவனன்று. ஒருநாள் சினேகித்தவரைக் கைகழுவவிடுபவனுமன்று. உமக்குத்தான் காது செவிடாகியதென்று முதலில் நினைத்தேன். இப்போது கண்ணுங் குருடெனத் தோன்றிற்று. இப்படிக் காதுங்கண்ணு மிழந்தவருக்குப் பிள்ளையாசைமட்டும் விடவில்லையே எனச்சொல்லி நகைக்க, தாம்ஸேஷ்டியார், இவரென்ன மிகவும் துஷ்டராகவிருக்கின்ருர். பார்ப்பாரப் பேயென்று சொல்லுகின்ருர்களே அது இவருக்கே தகுமல்லாமல் வேறொருவருக்குத் தகாதெனவெறுத்து, ஐயா! இச்சகம் பேசிப் பிச்சையெடுத்துண்ணும் அற்பகுணத்தைவிட்டு இக்கணமே உமது இருப்பிடம் போய்ச் சேரும். இனி ஒரு நிமிடமேனும் என் முன் நில்லாதேயும். பின்னர் துன்பமே நேரும் என்று கடூரமாகச் சொன்னுர். அதற்கு வயோதிகர், ஐயா! நீர் கூறியதுண்மையே. நீர்தான் எனது பசியைத் தினம்போக்குபவர். நீர் என்னைப் பொய்யனென்ருலும், நான் இந்த அற்பவிஷத்தில் பொய்சொல்ல இச்சியேன். ஆயினும் நான் கடைசியாக ஒருவார்த்தை சொல்லுகிறேன். அதை மறந்து விடாதேயும். பிறந்தமைந்தனுக்கு என்ன பெயரிடப்போகின்றீர்? அவ்விஷயத்தில் என்னை மறந்து பின்னெருவன் காலைப் பிடித்துப் பிறவிப்பிணியில் தத்தளிக்கப் போகின்றீரென, தாம்ஸேஷ்டி என்ன விபரீதம் காலைச்சுற்றிய பாம்பு கடியாமல் விடாதென்பதைப்போல நம்மை அப்பாற் செல்லவொட்டாமல் மேன்மேலும் அவமானத்தைக் கொடுக்கும் வார்த்தைகளையே அடுக்கடுக்காய் அவதியில்லாமல் பேசிக்கொண்டு வருகின்ருன். இவனைச் சும்மாவிட்டால் வாயை மூடியிருக்கமாட்டான் என்று நினைத்துச் சீ பிராமணப் பேயே! நாயே!! அப்பாற் சடுதியில் அன்றுபோவெனச் சீறினுன்.

அப்போது மாயாமறையோன் அடா கந்தைகளைச்சேர்த்துத் தைக்கும் தையலனே! உனக்கு நன்மை தீமைகள் தெரியுமோ? நீ பிராம்மணரைப் பூஷிக்கிறதை விட்டுத் தூஷிக்கத் தொடங்கினையே? நீ வேதாந்தமும் சித்தாந்தமும் பேசுவதாலடையும் பிரயோசனமென்ன? அந்தணர் புகழும் இச்சந்திர பாகாநதியின் சாட்சியாக உனக்கு மைந்தன் வேண்டுமென்னு மாசையில்லையே என்று கன்னத்

தில் அடிப்பதுபோலப் பேசத்தொடங்கினர். தாம் ஸேஷ்டிக்கோ மேன்மேல் கோபமெழுந்தது அல்லாமல், இந்தப் பிராமணன் வீணாய் வலுவில் வந்து நமது இரகஸியத்தை யெல்லாம் எடுத்துச் சொல்லித்தனது அவமானத்தைப் போக்குவது மன்றிப் பாண்டுரங்கன் நைவைத்திய காலத்தையும் வாயிற்போட்டுக்கொண்டான். இவனைக்காட்டிலும் கொடியவர்கள் நம்வரையில் ஒருவருமே இல்லை எனப்பற்களைக்கடித்து மரக்கிளை யொடித்து ஓங்கியடித்தான் அப்போது ஸ்ரீபக்தவத்ஸலன், அங்கிருப்பவர்களை யெல்லாம் பார்த்து, சுவாமிகாள்! நீங்களெல்லாம் இத்தியனுகிய தையற்காரன் செய்யும் கொடுமைக்கு நீ சாட்சியம் சொல்லவேண்டும். அத்தியன் என்னை அனுதையென மதித்தான். நீங்கள் காண இப்போது அவன் வலிமையையும் எனதெளிமையையும் தெரிவிக்கின்றேன் பாருமென விளம்பிசிங்கம் போலச்சீறியெழுந்து தாம்ஸேஷ்டியைத் தரையின்மேல் தள்ளிக்கிள்ளிப் புரட்டினன். தாம்ஸேஷ்டியும் இவ்வளவு நேரமாகத் தான் வைத்திருந்த கோபம் நீங்கும்படி அம்மாயாப் பிராம்மணன் மனது புண்ணுகும்படிப் பூமியின்பேரில் புரட்டி வெருட்டினன். இப்படி இரண்டு பேரும் வெகுநேரம் வரையில் மல்லயுத்தம்செய்து கொண்டிருக்கையில், தாம்ஸேஷ்டி தன் முழு பலத்தையுங் காட்டி அவ்விப்பிரன் கையிலிருந்து வெளிப்பட்டு, போதும் போதும் இன்று காலை நல்ல முகத்தில் தான் விழித்தோம். நல்ல வேளையாய் இம்முரட்டுக்கிழவன் கையிலிருந்து பிழைத்தோமெனச்சந்தோஷத்துடன் இனி இவன் கண்களுக்குப் புலப்படாவண்ணம் சென்று ஸ்நாநஞ் செய்வதே நன்மை என, அவன் கண்ணிற்குப் புலப்படாமல் அந்நதியின் ஒரு மூலையிலிருந்துஸ்நாநஞ் செய்யத்தொடங்கினர். அவ்வாறு ஸ்நாநஞ்செய்யும்போதும் தாம் ஸேஷ்டியின் மனம் விப்பிரர்மேலேயே இருந்தது. எங்கேவந்து விடுகின்றுரோ? எவ்வாறு தண்ணீரில் இழுத்து விட்டுப்பரிபவப் படுத்துகின்றுனோவென்று நினைத்திருந்தான்.

இவ்வித மிருக்கையில் பகவான் தாம் ஸேஷ்டியின் புத்திர வாஞ்சையைப் போக்கியருள உத்தவரை மனதிலே நினைக்க அவ்வுத்தவர் அப்பிராகிருத திவ்யலோகத்திலிருந்து எம்பெருமான் திருமுன்னே வந்து பணிந்து நிற்க, பகவான் உத்தவரே! நீர் இதோ நமக்கு முன்னே ஸ்நாநஞ்செய்யும் தாம்ஸேஷ்டியார் வீடு போவதற்

குள் அவரது மனைவியின் திருவுதரத்தில் குழந்தையாகப் பிறக்க வேண்டுமென ஆக்கினைசெய்தனர். உத்தவர் அவ்வார்த்தை கேட்டுத் திடுக்கிட்டு, சுவாமி! தேவரீர் திருப்பணியே சாலச்சிறந்ததெனக் கொண்டிருந்த வென்னை மீண்டும் ஸர்வ துக்கஸாகரமான குழியி லேபோய் ஜனிக்கும்படி அனுக்கிரகஞ் செய்வதழகோ? வென்று சொல்லி மறுக்க, பகவான், அடா என் அன்பனே! உன்னைப் போன்ற சிலர்களினுலல்லவா? எனது திருநாமம் உலகினில் சிறக்க வேண்டும். மற்றையவர்களுக்கு என் திருநாமத்தைப் பற்றிய மகிமை விளங்குமோ? ஆகையால், நீ இக்கணமே குழந்தையாகச் செல்லுதி என, உத்தவர், சரணுகத வத்ஸலா! சார்ந்தவரைக் காக்குந் தயா நிதே! நான் தேவரீர் கட்டளையின்படியே குழந்தையாகித் தண்ணீ ரில் நீந்திக்கொண்டு போய்த் தாம்ஸேஷ்டியின் தனயனுவேன். ஆபி னும், தேவரீர் அடியேன் மேல் கிருபைபுரிந்து, நான் இவ்வாக்கையை விட்டுப் பரமபதம் அடையும் வரையில் உமது பக்தி மறவாமலிருக்க வேண்டும். நான் வறுமையால் வருந்தி வாடாம லிருக்க வேண்டும். நாடோறும் தேவரீர் என்னுடனிருந்துண்ண வேண்டும். நான் பிறர் பொருளை இச்சியர் பெரு நெறியை யருள வேண்டும். புல்லர்களின் சேர்க்கை அணுகாம லிருக்க வேண்டும். நான் நினைத்தபோதெல் லாம் தேவரீர் காட்சி கொடுக்க வேண்டும் என்று வேண்டினன். பக வான் அவ்விதமே உத்தவருக்கு அருள் பாலித்ததுமன்றி, உனக்குத் தோழனுகவும், பணியாளனுகவும் வருகின்றேனெனக் கூவியவளவில் உத்தவர் மகா சந்தோஷத்தை அடைந்து உடனே ஒரு திவ்ய தேஜோமயமான ஆண் பிள்ளையாகி அழுதுகொண்டே தாம்ஸேஷ்டி ஸ்நாநம் செய்யும் இடத்தே வந்தார்.

தாம்ஸேஷ்டியாரோ மிகவும் ஆனந்தமடைந்து, ஹா இதென்ன விந்தை! நம் சிந்தை மகிழ இச் சிறுவனைக் கண்டோமே என அதனை வாரி யெடுத்துக்கொண்டு, அப்பா குழந்தாய்! இத் தண்ணீ ரில் எப்படி மிதந்து வந்தாய். நீ என் கையில் கிடைத்தது நான் முன் செய்த பாக்கியமே ஆகு மென்று சொல்லிக் குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓடத் தொடங்கினர். அங்கே யிருந்த விருத்தப் பிராமணரும் தாம்ஸேஷ்டியை விடாமல் தொடர் ந்து, அடா தையற்காரா! உன் வார்த்தையும், பக்தியும் வெளி வேஷ மேயாகும். இக் குழந்தை நதியில் கிடைத்தமையால் அது எனக்

கும் சொந்தமே யாகும். உனக்கே சொந்த மென நினைத்துவிட்ட னையோவெனக் கடிந்து அக் குழந்தையைப் பிடுங்கத் தொடங்கினர். தாம்ஸேஷ்டி அக் குழந்தையின் மேற்கொண்டவாசையால், சுவாமி! தேவரீர் தருமாதர்ம வுணர்ச்சியுள்ளவர். ஆதி வருணத்தவர். அருந் தவத்தவர். தாம் ஸேஷ்டி தேவரீர் இச்சித்தவற்றை யெல்லாம் தருகின்றேன். இந்தச் சமயம் அருள் புரிந்து காருமெனப் பணிந் தான் அதற்கு மாயா மறையோன் சிறிதும் கருணை வையாமல் தாம்ஸேஷடியை பிடித்துக்கொண்டு, நீ கோபத்தால் என்னைக் கொன்றுபோட்டாலும் போடு. நான் வெகு நாழிகையாக இங்கே காத்திருக்க, நீ இக் குழந்தையை என்ன பாத்தியமென்று எடுத்துப் போகின்ருய்? இதுதானே நீ பண்டரீ நாதனைப் பூஜை செய்ததின் பலன். நான் மாத்திரம் அப் பண்டரீ காதனைப் பூஜை செய்யாத வனு? ஆகையால் அக் குழந்தை எனக்கும் சம பாத்தியமே யாகு மென்று விசையாக விழுக்கக் குழந்தை ஓவென்று அழத் தொடங்கி யது. அப்போதுதாம்ஸேஷ்டியின்கோபத்திற்கோ ஓர் அளவேயில்லை. இனி இவருடன் சண்டை செய்தால் குழந்தைக்குத் துன்ப முண் டாகுமென நினைத்து, சுவாமி! தேவரீர் வாயை மூடிக்கொண்டு என் வீட்டிற்கு வாரும். அங்கே நீர் வேண்டுவதைத் தடை செய்யாமல் தருகின்றேன் என்று சொல்லவும், அதற்கு வயோதிகர் எனக்கென்ன தேவை. ஒன்றும் வேண்டாம். பொன்னும், பொருளும் இருந்தா லும் புதல்வரில்லாவிடில் என்ன பிரயோசனம்? நான் முன் சொன் னதைப் போல இக் குழந்தையைத்தான் வேண்டுகிறேன் என்ருர்.

தாம்ஸேஷ்டியாருக்கோ இதுதான் செய்வ தெனத்தோன்ற வில்லை. வெகு காலமாகத் தவங் கிடந்ததின் பலனுக நம் பண்டரீ நாதன் நமக்குச் செல்வனை அளித்தா னென்று மகிழ்ந்த வென் மனதில் மண்ணைப் போட இம் மறையோன் பகைவனுக வந்தானே. இந்த தௌர்பாக்கியத்திற் கென்ன செய்ப வல்லேன். ஹே அரி பரந்தாமா! அனுதரக்ஷகா! ஆபத்பாந்தவா! அடியானுகூலா! நான் விபீஷணுதியரைப் போலும், தேவர்களைப் போலும், இந்திரனைப் போலும் பேராசை கொண்டு வரங்களை வேண்ட வில்லையே. நான் இச்சித்தது இக் குழந்தையைத்தானே என்று மனம் நொந்து கண் களில் தண்ணீர் அருவி போற்பெருகியோட எம்பெருமான் பக்தர்க ளின் பிரார்த்தனைக் குகந்து நடத்திக் காட்டிய லீலா விநோதங்களை

யெல்லாம் ஒவ்வொன்ருகச் சொல்லிக் கரைந்தழுதான். இவ் வண்ணம் தனது புகழை யெல்லாம் தரணி மகிழ வெடுத்துச் சொல்லுவதைக் கேட்ட மாயா மறையோன் தன்னை மறந்து படிவமாகத் துலங்கிகின்ருன். இதுதான் நல்ல சமயமென்று தாம்ஸேஷ்டி ஓடோடியும் தன் வீட்டின் வாய லருகில் வந்துவிட்டான். மாயா மறையோன் கண்ணைத் திறந்து பார்க்கத் தாம்ஸேஷ்டி தன் வீட்டில் நுழையும் தருவாயாக விருப்ப துணர்ந்து, அவன் கையிலிருந்த குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு, அடா பாவி! அனேக நாளாகத் தவஞ் செய்து நான் பெற்ற குமாரனை நீ வஞ்சனையாகக் களவாடி வந்தனையே இது நியாயமாகுமா? கிழப் பிணங்களான உங்களுக்கு இத்திவ்ய ஸௌந்தரியமுள்ள குழந்தைதான் பிறக்குமா? என்னுடன் வீணே வாதாட வேண்டாமெனக் கறுத்துப் பேசினன்.

அந்தக் குரலைக்கேட்ட குணபாய் வெளியே வந்து தன் கணவன் மொழிந்தவை கேட்டு, அந்தணர்மேல் சீறிவிழுந்து, இது தக்ஷிணை கொடுக்குமிடமன்று. நேற்றைபதினம் பகவான் எனக்கருளியபடி இக்குழந்தை எங்களிடம் வந்தது. அதனைக் குறித்து நீர் வீண்வழக்கிடுவது தகாதென அக்குழந்தையை மாயா மறையோன் கையிலிருந்து பிடுங்கிக்கொள்ள, அவரும் அதனைவிடாம லிழுக்க, குழந்தை துடிக்க, குணபாய் மனம் பெற்றவளினும் பதின்மடங்கதிகமாக அக்குழந்தையின்மேல் அன்புண்டாய் அகம்நொந்து அலறி அழத்தொடங்கினள். இவ்விதம் ஒருவரோடொருவர் மாறுபட்டுச் சண்டை இடுவதைக் கண்டவர்கள், இடையிலே புகுந்து ஸமாதானஞ் செய்யமுயன்றும் பயன்படாமற் போயிற்று. அப்போது தன்னுடைய திவ்யமங்கள சரித்திரங்களையும் கீர்த்திகளையும் மகத்துவங்களையும் தனியே யிருக்கும்போது சிந்தித்துக்கொண்டும், இதராளுடன் கூடியிருக்கும்போது போதிக்கத்தக்கவர்களுக்குப் போதித்துக்கொண்டும் இருப்பதனலே ஸதா ஆனந்தஸ்வரூபாளாய்ப் பிரகாசிக்கும் பக்தர்களை ஸமஸ்த பாபங்களிலிருந்து பாவனஞ்செய்து பரிசுத்தமாக்கும் திருவடியால் குணபாயை உதைத்து விட்டுத் தாம்ஸேஷ்டியை உதறித்தள்ளிக் குழந்தையை எடுத்துக்கொண்டு பண்டரீநாதன் கோவிலின் வாயற்படிபண்டையிற்போய் நிற்க, தாம்ஸேஷ்டி தன் மனையாளோடு பின்னே படர்ந்து குழந்தையைப்பற்றிப் போராடத் தொடங்குகையில், பண்டரீநாதன் அக்

குழந்தைக்குப் பூர்வக்கியானம் மறையும்படியாய்ச் செய்து வீசி யெறிந்து மறைந்தார். குழந்தையோ கீழே விழுந்தவுடனே அழத் தொடங்கியது. குணபாய் குழந்தை அழுவதுகண்டு வாரியெடுத்து முத்தமிட்டு முலைகொடுத்துச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்தாள். பின்னர் தம்பதிகளிருவரும் இக்குழந்தை நம் பண்டரீநாதன் அளித்த பாக்கியமென்று, அதற்குச் செய்வன செய்து மகிழ்ந்து பட்சத்தோடு வளர்த்துவந்தார்கள். குழந்தையோ நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வருவந்தக் கண்ட தாம் ஸேஷ்டியார் மிகவும் மகிழ்ச்சியடைந்து தன் பந்துவர்க்கத்தினவர்கள் சந்தோஷமடைந்து போற்ற அறுசுவையுண்டியளித்து அகங்களித்திருந்தான் கேட்டீர்களோ சித்தர்களே என நாபாஜி சித்தர் பின்னும் விளம்பத் தொடங்கினர்.

நாமதேவர் பகவானுக்கு அன்னமளித்தல்

எண்ணிச் சொல்லமுடியாத கண்ணியவான்களே! புண்ணிய சித்தர்களே! அந்ருத ஜடதுக்க மலின கண்டரூபமரன தேகபேதம் நிஜமான உருவமென்று நினைத்து, அத்தேகவியோக விஷயத்தில் சிந்தித்து நிஸ்ஸாரமான ஸம்ஸாரஸாகரத்தில் சேதனர்கள் இனி வீழாமல் ஸத்து சித்து ஆனந்த நிர்மல அகண்டரூப பிரத்யகாத்மாவினிடமே சதா ரமித்துச் சுகிக்கும்படிப் போதித்துப் பரிபூர்ண நிரதிசய ஸௌந்தரிய ஸௌகுமார்யாத்திய பரிமித உதாரகுண கண திவ்விய மங்கள விக்கிரக விசிஷ்டபரம சுகஸ்வரூபனான பரமாத்துமாவை வேதாந்தங்கள்நிர்ணயிக்கும்வாறும்தன் அனுபவத்தில்கண்டவாறும் எடுத்துப்புகலும் தன்மையுள்ள நாபாஜியார், சித்தர்களே! இந்தப்பிரகாரம்தாம்ஸேஷ்டியாரும் அவரதுமனைவியாரும் உள்ளமுவந்து நாமதேவரை வளர்த்து வருநாளையில், ஒருநாள் தாம்ஸேஷ்டியார் தன்னுடன் பிறந்த பிராதாவைக் கண்டு வரவேண்டிய நிமித்தம் பண்டரீபுரத்தை விட்டுப்புறப்பட நேரிட்டது. அன்று பண்டரீநாதன் பூஜையை யாரைக்கொண்டு செய்விக்கலாமென நினைத்த தாம்ஸேஷ்டியார், தன் மனையாளை நோக்கி, அடி பெண்ணரசே!

இன்று நான் எனதுடன் பிறந்தவனைக் கண்டுவரச் செல்லுகின்றேன். அதனால் நான் நியதமாகச் செய்துவரும் நம்பண்டரீநாதன் பூஜை நிற்கக்கூடாது. நமது அருமைச் செல்வனாகிய நாமதேவனைக் கொண்டு அந்நைவேத்தியங்களைச் செய்விக்க நினைத்துள்ளேனாகை யால், நீ நைவேத்தியத்திற்கு வேண்டுவனவற்றைத் தயார்செய்து வைப்பையாகவெனக் கட்டளையிட்டு, தனது மைந்தனை அழைத் துக் குழந்தாய்! இன்றுநான் உன் சிற்றப்பன் வாழுமூருக்குக்குச் சென்றுவரவேண்டியிருப்பதால், நீ உன் தாயாரால் கொடுக்கப்பட் டவைகளை மிகவும் ஜாக்கிரதையுடன் எடுத்துக்கொண்டுபோய் நம் குலதெய்வமான நிலதெய்வத்திற்கு மாலை முதலிய சாந்தி நைவேத் தியாதிகளைப் பக்தியுடனே செய்துவரல்வேண்டுமென்றுவிளம்பினர். அதுகேட்ட நாமதேவ் மிகவும் சந்தோஷத்துடனே, 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என நினைத்து ஒப்புக்கொண்டான். பின்பு மகா சந்தோஷத்துடனே தாஸஸேஷ்டியார் தன் பிராதாவின் இருப் பிடத்தை நோக்கிப் பிரயாணப்பட்டுப் போயினர். நாமதேவன் விளையாட்டுப் பருவம் நீங்காத இளைஞராகையால் தன்னேடொத்த மாணவர்களோடு தெருவிலே சென்று விளையாடிக் கொண்டிருந் தான்.

குணபாயியோ பகவானுக்காகத்தினம் தினம் அமைத்து வைத் தனுப்பும் நியமப்படியே ஸர்வபதார்த்தங்களையும் தயார்செய்து வைத்து விட்டுத்தன் அருமை மகனின் வரவை எதிர் நோக்கிக் கொண்டிருந்தாள். நாமதேவன் வாலிபபருவமும் வராதபச்சைப் பசுங்குழவியாயினமையால், தன் தந்தையார் இட்ட கட்டளையை யும் மறந்து தன்னேடோத்த பிள்ளைகளுடன் வீதியில் விளையாடிக் கொண்டே யிருந்தான். நைவேத்தியஞ்செய்ய வேண்டிய காலம் நெருங்கியும் தன் குமாரன் வராமைகண்ட குணபாய் வாயலில் வந்து மகனைத்தேடி அழைத்துச்சென்று, அப்பா குழந்தாய்! உனது தந்தையார் இன்றுனக்கு நியமித்துப்போன பகவத்கைங்கரியத்தை மறந்து விட்டனையே! அப்படி மறக்கலாமா? எதனை மறந்தாலும் மறக்கலாம். எம்பெருமானுக்குச் செய்யும் பூஜையை மறந்தால் பின்பு நமக்கு நலமுண்டாமோவென்று வீட்டிற்கழைத்து வந்து நைவேத்தித்திற்கு வேண்டியவைகளை எல்லாம் ஒரு தட்டில்வைத்து நாமதேவுக்கு மங்கள ஸ்நானஞ்செய்துவித்துப் பட்டுடுத்திப் பாண்டு ரங்கர் பூஜைக்கு அனுப்பினுள். அப்போது நாம்தேவ் ஒன்றுந்தெரி

யாதவனைப்போல் தாயே! நானோ மிகவும் அறியாதவன். தெய்வத்தின் மகிமை தெரியாதவன். தந்தையாரோ குள்ளனைக்கொண்டு ஆழம்பார்ப்பதைப்போல் என்னைப்பூஜை செய்யும்படி நியமித்துப் போனார். எனக்கோ நித்திய நைமித்தியங்கள் இன்னதெனப்பேதந் தெரியாதென்றான். அதற்குக் குணபாய் அப்பா குழந்தாய்! நீ பண்டரீநாதன் திவ்ய சந்நிதானத்துக்குப்போய் உன் தந்தையின் கட்டளைப்படி நைவேத்தியஞ்செய்வாய். ஆனால் நீ போகும் மார்க்கத்தில் ஒருவருடனும் பேசுதல் கூடாது. ஒருவர் மேலும் தீண்டிக்கொள்ளுதல் கூடாது. நீ போகும் மார்க்கத்தில் ஹே பாண்டுரங்கா! பரந்தாமா! பரமபதநாதா! என்று அவ்வெம்பெருமான் திருநாமத்தைத் தியானஞ்செய்துகொண்டு போதல்வேண்டும். அவரது ஸன்னிதானத்திற்குச் சென்று, அங்கே எழுந்தருளியிருக்கும் எம்பிரானுக்கு, ஆவாகனம், ஆசனம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனம், அபிஷேகம், ஆடைசாற்றல், உபவீதம், ஆபரணமணிதல், கந்தம்பூசல், அர்ச்சனை, அட்சதை, தூபம், தீபம், நைவேத்தியம், தாம்பூலமளித்தல், மலர்மாலை சாற்றல், கர்ப்பூரவாரத்தி, நீராஞ்சனம், வலம்வரல், வணங்குதல், வழுத்தல், திப்பனம், புஷ்பாஞ்சலி முதலியவைகளைச் செய்து சீக்கிரம் வருதல்வேண்டுமெனச் சொன்னாள்.

நாமதேவன் தன் தாயின் சொற்படியே நைவேத்திய தட்டைத் தலையின்மேலே பரிசுத்தமாகத் தாங்கிக்கொண்டு பகவன் நாமத்தை இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டே வீதியில் போயினான். அப்போதுவீதியின் கடைசியில் தன் நண்பர்களான மாணாக்கர்கள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு வேடிக்கையாகப் பந்துவிளையாடல் ஆடிக்கொண்டிருந்தார்கள். நாமதேவ் அறிவற்ற இளமையானமையால் ஊசியைக் காந்தம் கிரகித்தல்போல அவனது மனதைப் பாலர்கள் ஆடும் விளையாடல் கிரகித்துக்கொண்டது. அதனால் நாமதேவனின் மனம் அப்புறம் போக இடந் தரவில்லை. நாமதேவுக்குக் காலாதீதமாகின்றதே எனத் தோன்றவு மில்லை. தாய் தந்தையர் கோபிப்பாரே என்று மனதில் அச்சங்கொடுக்கவுமில்லை. இப்படி யிருக்கையில் அங்கே பாலர்கள் ஆடிக்கொண் டிருந்த பந்தானது துள்ளி எழும்பி நாமதேவ் வைத்துக்கொண் டிருந்த நைவேத்தியத் தட்டின் மேல் விழுந்தது. அது கண்ட நாமதேவர் மனச் சீற்ற மடைந்து,

அடே மூடாத்துமாக்களே! நான் வைத்திருப்பது நைவேத்தியத் தட்டென்பதை அறியாமல் பந்தை எறிந்தீர்களே என்று கடிந்து சொன்னான்.

அவ் வசனத்தைக் கேட்ட வாலிபர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு சிங்கத்தின் மேல் சீறி விழும் யானையைப் போலச் சீறி விழுந்து, அடா கந்தை தைத்துண்ணும் கசடனுக்குப் பிறந்த மொக்கையே! நைவேத்தியம் செய்யத்தான் உனக்குத் தெரியுமோ? நைவேத்தியம் என்னும் பதத்தின் பொருளை நீ அறிவையோ? நைவேத்தியங் கொண்டு போகும் உனக்கு இங்கென்ன வேலை? உன்னை நாங்கள் அழைத்தோமா? இங்கே உன்னை யார் நிற்கச் சொன்னார்கள்? நீ நைவேத்தியத்தட்டுடன் பரிசுத்தமாகப் போவையேல், நாங்கள் போட்ட பந்து அத் தட்டில் விழ ஞாய முண்டா? என்று அந்த நைவேத்தியத் தட்டைத் தீண்டி பந்தை எடுத்துக் கொண்டார்கள். அதன் மேல் நாமதேவுக்கு அடங்காக் கோபம் பிறந்தது. அடே மூடர்காள்! நீங்கள் செய்த குற்றத்தை மனதில் வையாமல் என்னைப் பரிகாசஞ்செய்யத் தொடங்கினீர்களே. உம்மை மானிடரென்றுசொல்லுவதோ? மிருகங்களென்று சொல்லுவதோ? வென, அதற்குப் பிள்ளைகள், அடே தையற்காரன் மகனே! உன் பக்தியை என்னவென்பது? கந்தை தைத்துக் காலம் போக்கும் உங்கள் நைவேத்தியத்தையா உத்தமர்களுக்கு உறவினரான உம்பர் தம்பிரான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறார்? நீங்கள் பண்டரீ நாதனை விட்டொரு நாளும் உண்டதில்லையோ? ஏதோ உன் தகப்பன் மாய வேஷம் போட்டுத் திரிகின்றானென்றால், அவனுக்குப் பிறவாமல் யாரோ தகப்பன் பெயரும், தாயார் பெயரும் சொல்லத் தெரியாத பிள்ளையான நீயும் எங்களுடன் வாதாடத் தொடங்குகின்றாய். இன்னும் சற்று நிற்பையேல் உன் கையிலிருக்கும் தட்டும் தடுமாறும். உன் தலையும் பள்ளமாகிவிடும். வீணே கஷ்டப்படுதல் வேண்டாமெனச் சொல்லித் தொந்தரை செய்யத் தலைப்பட்டனர். நாமதேவுக்கோ கண்களில் தண்ணீர் பெருகத்தொடங்கியதுமல்லாமல் கோபமும் தானாகவே யெழுந்தது. இன்னதுதான் செய்யலாமெனத் தோன்றவில்லை. நைவேத்தியத்தை கீழே வைத்தால் அபரிசுத்தமாகி விடுமே என அவன் மனதிலுதிக்கவில்லை. ஆயினும் இப் பாலர்கள் தன்னை அவமதித்துப் பேசினார்களே என்ற கோபமட்டும் தன்னை அப்பாற் போகவிடாமையினாலே, அவன் தலையின்மேல்

வைத்திருந்த நைவேத்தியத் தட்டை ஒரு திண்ணையின்மீது இறக்கி வைத்து, அப்பாலர்களுடன் சண்டைசெய்து அவர்களை எல்லாம் பறந்தோடும்படியாகச் செய்தான். அந்தத் பாலர்கள் சிங்கத்தின் எதிர்ப்பட்ட மான்போலப் பறந்தோடுகையில் அந்நாமதேவின் வீட்டின் முன்னே அழுதுகொண்டே சென்று, தாயே குணுபாய் அம்மையே! உங்கள் குலத்தில் வந்து புகுந்த நாமதேவன் நைவேத்தியத்தை நாசம்பண்ணினன். எங்களையும் சிறிதும் கருணைபாராட்டாமல் நையப்புடைத்தான். இப்படிப்பட்ட துஷ்டப்பிள்ளையைக் குறித்துத் தவஞ்செய்துகொண்டு வந்தீர்களே என்று சொல்லிக்கொண்டே பாலர்கள் ஓடினர்கள்.

அவ்வாலிபர்களின் வார்த்தையானது குணுபாயின் காதிலே நாராசம்போற் பாய்ந்தது. உடனே அவள் கோபக்கடலிலாழ்ந்தவளாகி நாமதேவ் இருக்குமிடத்தே சென்று, அடே மூடா! என்ன செய்தனை? பகவானுக்கு நைவேத்தியம் செய்துவரச் சொன்னல், அதனைச் செய்யாமல் வீண்சண்டை செய்துகொண்டிருக்கின்றனை? அந்தோ! உன் தந்தையார் உன்னை அறியாதவன் என்று தெரிந்தும் இப்பணியைச் செய்யும்படி நியமித்தேகினரே! இந்நைவேத்தியம் அபரிசுத்தப்பட்டமையால் பகவானுக் கேற்குமோ? என்று மனங்கசிந்து சொல்லிக்கொண்டிருக்கையில், நாமதேவ் மிகவும் வேகத்துடன் அத்தட்டை எடுத்துக்கொண்டு ஆலயத்துள்ளே புகுந்து செய்யவேண்டிய முறை தப்பிச் சந்தனபுஷ்பங்களினுலே பூஜித்து, பாண்டுரங்கா! பக்தப்பிரியா! பிரக்கிலாதனுக்கிரங்கிய பிரபுவே! என வாயாரவாழ்த்தி நைவேத்தியத்தைக் காட்டிப் பகவான் திருவடிகளில் தன் மனதை நாட்டி நின்றான். பகவான் தான் கொண்டு சென்றதை யுண்ணுமல் சும்மாவிருப்பதைக் கண்டவுடன், நாமதேவ் தன் கரத்தால் ஒரு கவள மெடுத்து அவ் வெம்பிரான் வாயி லூட்டினன். பகவான் அதனை உண்ணுததது கண்டு உள்ளமுருகினன். ஓ பாண்டுரங்கா! இதுவும் சோதனையா? எளியேன் மேல் வாதனையா? அல்லது இந்த நைவேத்தியம் அசுத்தமாயிற்றென்று தேவரீர் மனம் இதன் மேற் செல்ல வில்லையா? ஹே பாண்டுரங்கா! நீர் இந்த நைவேத்தியத்தையுண்ணுவிடில் என் தாயார் என்னை நையப்புடைப்பாளே! நானிந்த துன்பத்திற்கு எவ்வண்ணம் சகிப்பேன் எனப் பன்முறை வேண்டிக்கொண்டும் பண்டரீநாதரீர் அசைவற்றிருக்கலா

குமோ? சிறுவனுகிய அடியேன்மீது கிருபைசெய்தருளல் கூடாதோ வெனக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அப்போதும் பண்டரீநாதர் அசைவற்றிருந்தமையால், நாமதேவன் கண்களில் தண்ணீர் தத்தளிக்க, ஐயனே! அடியார்களுகுந்த துப்பனே! நீர் சகல சாதியாருக்கும் பொதுவல்லவோ? நீர், யார் நைவேத்தியத்தைப் பத்தியோடு கொண்டு வந்தாலும் அதை யுண்ண வேண்டாமா? வேளை தப்பிப் போய்விட்டதா? உன்னுல் படைக்கப்பட்ட ஜீவன்க ளன்ரு இந்த நைவேத்தியத்தைத் தீண்டிற்று. அதனுல் அபரிசுத்த முண்டாகுமா? உமக்கும் சாதி பேத மத பேத முண்டோ? என்று நாமதேவன் வேண்டிக்கொண்ட காலத்தும் பண்டரீநாதன் ஒன்றும் சொல்லாமல் அசைவற்றிருக்க, நாமதேவனுக்குக் கோபம் பிறந்தமையால், நாழியோ அதிகரித்துவிட்டது. எனக்கோ பசி அதிகமாய்விட்டது. நீ ஸர்வ ரக்ஷகனு யிருந்தும் சிறியவனுகிய என்னை இப்படிப் பரிசோதிக்கலாமா? உனக்குக் கண் ணில்லையா? கருணையில்லையா? சிறியவனென்னுந் தொல்லையா? இனி என்னுல் அரைக் கணமேனும் சகித்துக்கொண் டிருக்க முடியா தென்று சொல்லி, இந்த நைவேத்தியத்தை நீ உண்டா லாச்சுது இல்லையேல் என் உயிர் போச்சு தென விளம்பிக் கையினைத் தலையின் மேல் குவித்துக் கொண்டு ஆலிங்கனஞ் செய்து கடவுளே எனத் தொழுது பகவான் திருவடிகளில் தன் சிரத்தை விசையோடு மோதத் தொடங்கினுன்.

பண்டரீநாதன் உடனே நிஜரூபத்தை அடைந்து, அடா என் குழந்தாய்! எனத் தனது இரண்டு கரங்களினுலேயும் அவன் சிரத்தைத் தாங்கிக்கொண்டு, என்னருமை பக்த சிகாமணியே! நீ நைவேத்தியம் கொண்டு வந்ததாலுன் நளின பாதங்கள் நொந்தனவோ? உன் வயிறு காலாதீதத்தால் பசிக்கின்றதோ வென அமுதூட்டி, அப் பாலன் மேனியிற் படிந்திருந்த புழுதியைப் போக்கி, நண்பர் அடித்த அடியால் அங்க மெல்லாம் வலி யுண்டாயிற்ருே வெனத் தன திரு கரங்களினுலே அவனைத் தழுவித் தன் பீதாம்பரத்தை அவனுக்குடுத்தி, தான் அவன் அணிந்திருந்த சிதிலமான பட்டையணிந்துகொண்டார். அப்பால், குழந்தாய் நீ உனது மெல்லிய கைகளால் எனக்கு அமுதமூட்டுவாய் என்று நைவேத்தியத்தை யுண்டனர்.

அதன்மேல் நாமதேவன் மிகுந்த திருப்தி அடைந்தவனுப் இனி நாம் காலத்தைக் கடத்தினுல் தாயார் கோபித்துக் கொள்ளுவா

ளென நினைத்து வீட்டிற்குத் திரும்பி வந்து, தன் தாயாரை நோக்கி, அம்மணீ! இதோ பார்த்தனையோ தட்டுகாலியாகிவிட்டது. கடவுள் நான் கொண்டு சென்ற வுணவை முதலில் உண்ணமாட்டேனென்று பிடிவாதம் செய்தார். அப்பால் நான் பலவாறு வற்புறுத்திவேண்டவும் அவர் ஸகல பதார்த்தங்களையுமுண்டார். என்மேல் ஆனந்தங் கொண்டு நல்ல வார்த்தைகளையும் திருவாய்மலர்ந்தருளினர். அவர் அணிந்திருந்த பட்டாடையினையும் எனக்களித்து,நான் தரித்திருந்த பட்டு வஸ்திரத்தை அவரே யெடுத்துச் சாத்திக்கொண்டார் என்று சொன்னர். குணபாயின் மனம் தன் குமாரன் சொன்ன வார்த்தையில் நம்பிக்கைத் தோன்றவில்லையாகையால், இதென்ன விபரீதமாகவிருக்கின்றதே! இச் சிறியன் பண்டரீநாதரின் பான்மை அறியாமல் அவரணிந்துள்ள பீதாம்பரத்தைத் தான் அணிந்துகொண்டும், அவர் சாத்திபிருந்த மாலையைத் தான் சாத்திக்கொண்டு மிருக்கிறுன். இவன் பால்ப ஞகையாலே அறியாமையால் கடவுளிடம் அபசாரப்பட்டானே என்னவோவென்று தன் தனயன் மீது கோபமடைந்து, அடா நாமதேவ்! நீ கொண்டுபோன பழங்களெங்கே? நைவேத்திய மெங்கே? உண்மையை ஒளியாமற் சொல்லிவிடு. நீ உன் அறியாமையால் நண்பர்களிடம் அவைகளைக் கொடுத்துவிட்டாயா? அல்லது பயந்து யாவற்றையும் அப்பால் எறிந்து வந்துவிட்டாயாவென்று அதட்டிக் கேட்டாள்.

நாமதேவ், தாயே என்மேல் கோபம்கொள்ளுவதனுல் பயனில்லை. நான்கொண்டுபோன யாவற்றையும்அந்தப்பண்டரீநாதனே உட்கொண்டார். எனக்கும் அச்சமயம் பசி அதிகரித்தமையால் நானும்அவர் கையால் எடுத்துக்கொடுக்க வுண்டேனென்றுன். அதனுலே எனக்குப் பசியில்லை. என்வயிறு மேடெடுத்திருப்பது தெரியவில்லையாவென்று நகைத்துகொண்டே அப்பால் ஓடினன். குணபாய்! அடே துஷ்டா! என்ன பொய் பேசுகின்றுயே கடவுள் எங்கேனும் நைவேத்தியத்தை யுண்ணுவரா? இப்போது உனது காரியத்தை அறிந்தேன். நீயே வயிறு நிரம்பப் புசித்து வீணுகக் கடவுள் மேலே பழியைச் சாத்திவிட்டனை? இது மிகவும் தீயகாரியம். ஸர்வலோக சரண்யன்மேல் பழிசொல்லலாமோ? இளமையிலேயே இவ்விதமாக அடாதவார்த்தைகளை அஞ்சாமல் பேசத்தொடங்கினையே என்று கோபித்துப் பக்கத்திலிருந்த தடியை வீசினள். நாமதேவ் குழங்

தையாகையால் இனி இங்கே இருந்தால் இடுப்பு நகர்ந்துபோகும் போலிருக்கிறது. எங்ஙனமாயினும் வெளியிலோடித் தப்பித்துக் கொள்ளுவதே சாலவும் சிறந்ததென்று நினைத்து வெளியிலே வந்து தாயின் காதிற் படும்படியாக உறக்க, அந்தோ முரட்டுத் தெய்வமே! நீ என்னை வெகுநேரம் வரையில் அழச்செய்து நைவேத்தியமுண்டதும்போதும், நான் என்தாயின் வாயால் அசத்தியவாதியெனச் சாற்றியதும்போதும். நீ கொடுக்க நானுண்டேனேயல்லாமல் நானே நைவேத்தியத்தில் துணிந்தெடுதுண்ணவில்லையே. நீ என்னிட நைவேத்தியத்தை உண்டது உண்மையானால் இப்போது வீட்டினுள் வைத்திருக்கும் பதார்த்தங்களையும் என்தாயார் அறியவுண்ண வேண்டுமெனப் பிரார்த்தித்தான்.

அச்சிறுவன் செய்த பிரார்த்தனைக்கேட்ட குணபாய் மீண்டும் கோபமடைந்து, அடே குலநாசகா! உன் தந்தையார்வருங் காலங் குறுகிற்று. அவர் வந்தவுடன் உன்னை என்ன செய்யச் சொல்லுகிறேன் பாரெனப் பதைப்பதைத்துக்கூறினள். அதுகேட்ட நாமதேவ் நடுநடுங்கி, அந்தோ இன்று நாம் பண்டரீநாதனுக்கு நைவேத்தியங் கொண்டு போனதும்போதும். இத்தாயின் பரிபவத்தில் அகப்பட்டுத் தவிப்பதுமன்றி, இனித் தகப்பன் பரிபவத்தில் அகப்படவும் நேர்ந்ததே என ஒன்றுந்தோன்றாமல் புறத்தேசென்று அசைவற்று நின்றுகொண்டிருந்தான். அவ்வமயத்தில் தம்பியைக் காணச்சென்றிருந்த தாம்ஸேஷ்டியார் வந்து, குழந்தாய்! என்ன முகவாட்டத்துடனே நின்றுகொண்டிருக்கின்றாய். இன்று பண்டரீநாதனுக்கு உனது மெல்லிய கரங்களால் நைவேத்தியங் கொடுத்தாயா வென்று வினவிக்கொண் டிருக்கையில் குணபாய் வீட்டி லிருந்து வெளியே வந்து நடந்தவற்றை யெல்லாம விஸ்தாரமாகத் தாம்ஸேஷ்டியினிடமுரைத்தாள்.

அவ் வசனத்தைக் கேட்ட தாம்ஸேஷ்டியார் மிகவும் கோபமடைந்து நாமதேவை அடிக்கவோடினார். நாமதேவ் மிகவும் பயந்து இனி இவர் முன்னே நின்றால் அனர்த்தமே விளையுமென வெண்ணி வெளியே ஓடத்தொடங்கினான். தாம்ஸேஷ்டியாரும் அவனை விடாமலே பின் தொடர்ந்தோடத் தொடங்கினர். இங்ஙனம் இருவரும் ஓடி வருகையில், நாமதேவ் இளையவனாகையால் சிறிது இளைத்து நிற்கும்படி நேர்ந்தது. அப்போது பகவான் தானே ஒரு வயோதிகப்

பிராமணனைப் போல் தாம்ஸேஷ்டியின் எதிரில் நின்று, ஐயா தாம் ஸேஷ்டியாரே! என்ன இவ்வளவு வேகமாய் ஒரு இளமையான குழந்தையை அதிக கோபத்துடன் துரத்திச் செல்கின்றீர். நீரோ பார்வைக்கு வெகு தள்ளாதவராக விருக்கின்றீர்? அப் பாலகனோ பால் மணமாறாதவனாகவிருக்கின்றான். அவன் உண்மையாகத் தேவரீர் கர்ப்பத்தில் தோய்ந்து பிறந்தவனாக இருக்கும்பக்ஷத்தில் இப்படி இளைஞன் வாடி வதங்கிக் களைத்து இளைத்துப் போகும்படியாகத் துரத்துவீரோ? அகப்பட்ட குதிரைக்குப் பழுதைக் கயிறு கடிவாளம் என்பதுபோல அக் குழந்தை யாருடைய மகனோ? தயையற்ற உம்முடைய கையில் வந்து அகப்பட்டு விழிக்கின்றான் என்றனர். தாம்ஸேஷ்டியார், ஓய் பிராமணரே! நீர் விஷய மறியாமல் என்னைத் தூஷித்தல் தரும மன்று. தகப்பன் தனயனைப் பரிசுத்தனாக்குவது தர்ம மல்லவோ? அப் பாலன் இளமையிலேயே அடாத பொய்யை பேசத் தலைப்பட்டுவிட்டானே. இன்னும் சில நாள் போனால் வீணே கெடுவானன்றோவென்றனர். இவ்விஷயத்தில் நான் சிறிதும் தயை வைக்கவே மாட்டேன். அவனை இன்று சும்மா விடவும் போவதில்லை என முன்னிலும் பதின் மடங்கு கோபத்துடன் துரத்தியோடினர். நாமதேவ் எவ்வளவு வேகமாகவோடியும் தன்னை ஆதரிப்பார் காணாமையால், பண்டரீ நாதன் ஆலயத்துள் பிரவேசித்து அப் பரந்தாமனைப் பரிவுடன் சேர்த்து அணைந்துகொண்டான். தாம்ஸேஷ்டியார் அங்கே சென்று நாமதேவைப் பற்றி இழுக்கத் தொடங்கியது, எமன் நேராக வந்து பரமசிவனைப் பற்றிக்கொண் டிருந்த மார்க்கண்டேயனை யொத் திருந்தது. அப்போது தாம்ஸேஷ்டி அடா நாமதேவ் உண்மையைத் தெரிவித்துவிடு. பகவத் ஸந்நிதானத்தில் வந்தும் பொய் சொல்லாதே யென்று வைதார். அதற்கு நாமதேவ்! தந்தையே இப்பண்டரீநாதனே நான் கொண்டு வந்த நைவேத்தியத்தை எனக்குக் கொடுத்துத் தானு முண்டதுமல்லாமல், தான் தரித்திருந்த பீதாம்பரத்தையும் என்னை யுடுத்திக் கொள்ளச் சொல்லித் தான் உடுத்தி யிருந்த பட்டைத் தானணிந்து கொண்டாரெனத் திடமாய்ச் சொல்லினான்.

அது கேட்ட தாம்ஸேஷ்டி, அடா அதுண்மையாயின் மீண்டும் நான் நைவேத்தியம் கொண்டு வருகிறேன். அதையும் உண்ணும்

படியாகச் செய். இல்லையேல் உன்னை இரண்டு துண்டாகச் செய்து விடுவேனென்று பயமுறுத்த, அப்போதும் நாமதேவ் பயப்படாமல் அவ்வாறே கொண்டு வாருமெனச் சொல்ல, அதற்குத் தாம்ஸேஷ்டியார் நீயும் என்னுடனே வாவென்ன, நாமதேவ் வருகிறேன். ஆனால் நீரென்னை இப் பண்டரீ நாதன் முன்பாக அடிக்க வில்லை என்று சொல்லுமென, தாம்ஸேஷ்டியார் நீ சொல்லியது பொய்யா யிருந்தால் அப்போது சிட்சிப்பே னென்று சொல்லி மகனைத் தன்னுடன் வீட்டிற்கு அழைத்து வந்து, குணுபாயால் இரண்டாவதாகச் சமைத்து வைத்த நைவேத்தியத்தை நாமதேவிடங் கொடுத்துத் தானும் அவன் பின்னே போயினன்.

இரண்டாம் முறையாக நைவேத்தியங் கொண்டு சென்ற நாமதேவ் பண்டரீ நாதன் எழுந்தருளி யிருக்கும் கர்ப்பக் கிருகத்துள் சென்று நைவேத்திய தட்டைக் கீழே வைக்கவும், தாம்ஸேஷ்டியார் முதன்வாயற்படியிலேயே நின்றார். உள்ளே சென்ற நாமதேவ் பண்டரீநாதனுக்கு மாலை முதலியன சாத்தித் தூபதீபங்காட்டி, சுவாமி! இது முன் போல் பிறரால் அபரிசுத்தமானதன்று. ஆதலால் முன் செய்த ஜாலத்தை விடுத்து இதனைத் திருவுள்ளம் பற்றுதல் வேண்டும். நான் பொய்ய னென்று என் மேல் கடுங்கோபங் கொண்டு கொல்ல வந்து நிற்கின்றார் என் தந்தையார். ஆகையால் தேவரீர் முன்போல் தாமதஞ் செய்யாமல் இதனை உண்ண வேண்டுமென ஒரு கவளத்தை அப் பாண்டுரங்கப் பெருமான் வாயில் வைக்க, பெருமான் முன்போல் கல் லுருவாகவே அசையாமல் சிறுவன் மொழிக்கிசையாமலுமிருந்தார். அது கண்ட நாமதேவ் நான் முன்னரே உன் முரட்டுத்தனத்தை அறிந்தேன். நீ பொய்த் தெய்வமாகையால் என்னையும் பொய்யனாக்கிப் புலம்பச் செய்கிறாய். பொய்யர்க்கே பொய்யனாகியும், மெய்யர்க்கே மெய்யனாகியு முள்ள நீ ஸர்வ வஞ்சகனென்பதை அறிந்தேன். உனது திருக்கூத்தெல்லாம் பாரதத்திலும், பாகவதத்திலும் வெளிப்படை யென்பதை அறியாயோ? நீ பாரத வமரில் பொய் சொல்லாத தர்மபுத்திரன் வாயால் ஒரு பொய்யைச் சொல்ல வைத்தமையைப் போல என்னையும் பொய்யனாக்கிவிட்டாயே எனப் பகவானைத் தூஷிப்பதைக் கேட்ட தாம் ஸேஷ்டியார், அவன்மேல் கோபங்கொண்டு அடே பரம சண்டாளா பொய் யில்லாத் தெய்வத்தைப் பொய் யென்று உனது ஊத்தை

வாயால் சொல்லத் தகுமோ வென முனிந்து, ஒரு தண்டத்தால் அடிக்க வந்தார். அது கண்ட நாமதேவ் நடுங்கியொடுங்கி மயங்கித் தியங்கித் தன் தலையைப் பண்டரீநாதன் பாதகமலத்தில் மோதிக் கொண்டான். இவ் வமயம் தேவரீர் மாத்திரம் முன் போலவே வெளிப்பட்டு நைவேத்தியத்தை யுண்ணுமற்போவீரானுல், நான் என தாவியை இங்கேயே மடித்துக்கொள்ளுகின்றே னென்று தாம் ஸேஷ்டியார் கேட்கச் சொல்லித் தலையை மீண்டும் அவர் திருவடிக ளின் மேல் தேங்காய் உடைப்பது போல மோதினுன். . அப்போது,

“ நித்யம் விபும் ஸர்வகதஸ்ச ஸுஸூக்ஷமம்
ஆகாஸவத் ஸர்வ கதஸ்ச நித்ய: ”

என்கிற ஸ்மிருதியின்படியும் தேசகால வஸ்து கிருத் திரிவித பரிச் சேதகமில்லாமல் ஸர்வபூதாந்தர்யாமியாய் ஸர்வஸாக்ஷியான பண்டரீ நாதன் நிஜரூபமாய் நின்று, நாமதேவரின் தலையைத் தன்கையாற் பிடித்துக்கொண்டு, என் அருமை பக்தனே! முத்தனே ! உனது தாய் தந்தையரிருவரும் உனது மேன்மையான பக்தியையும் சித்தி யையும் அறியாமல் உன்னைத் தொந்தரைபுரிந்ததைச் சகித்தாயோ? காப்பாரில்லாமல் கால்நோவ கல்லும் முள்ளும் நிரைந்த நிலத்தில் தத்தித்தத்தி என்னிடம் வந்தனையோவென்று பரிந்து உபசரணை செய்து, சீலனே ! எனக்கனுகூலனே ! என்னைவிட்டகலாப்பாலனே ! இப்போது உன் இஷ்டப்படியே உன்கரத்தால் நைவேத்தியத்தை அளிப்பாயெனச் சொல்லி அமுதுண்டு நாவதேவரின் மகிமையைத் தாம்ஸேஷ்டி அறியும் வண்ணம் பிரத்தியக்ஷமாய்க் காட்டி மீண்டும் முன்போலவே சிலாவுருவமாயினர்.

அந்த வைபவக் காக்ஷியைக் கண்ட தாம்ஸேஷிடியார் ஒன்றுந் தோன்ருமல் கொஞ்சநேரம் நின்று தன்னிருகரங்களைத் தலைமேலேற் றிப் பண்டரீநாதனை நோக்கி,

“அத்திகோனன் ருதிமூல மென்றேதகண்
டபய மீந்தாட் கொண்டனை
யமலகமலப் பாதரேணுவா லருவையா
மகலிமைக் கருள் செய்தனை
கத்திய துரோபதையினிட ரகற்றினை துருவர்
கனகவரை யுறச் செய்தனை

கர்த்தனே யுனைநம்பிக்க டனிலும்பிணியிலும்
கஷ்டமெய்திடல் ஞாயமாமோ
நித்தியநிர்மல நிராமய நிரஞ்சனவரத
நிரத மங்கள குணகணு
நீலகந்தர சாபகண்ட ணும்புதிசபன
நிர்வாண பத தாயகா
ஸத்யஸ்வரூப நிஷ்பாப ப்ரதாபசீ
தரவ்தன வனஜ மித்ரா
சரணுகதத்ராண பாராசணும் போஜ
சரண கருணு பரணனே"

என்று தோத்திரம்புரிந்து, மாயா! செங்கனிவாயா!! ஆயா!!! உன்னை இப்பாவியேன் கண்ணுரக்கண்டு என்ன அபரிமிதமான புண்ணியத்தைச் செய்திருந்தேனே? இந்த நாமதேவரை உனது உண்மையான பத்தனென்று நினையாமல் மனம்போனவாறே பொய்யனென்று பிதற்றியபசாரப்பட்டேனே! அநியாயமாய்க் கெட்டேனே! என்று ஓவெனக் கூக்குரலிட்டு அழத்தொடங்கினர். பூமியிலே விழுந்து புரளுவார்; மீண்டுமெழுவார்; இருகரங்களைக் குவித்துத் தொழுவார்; பகவதபசாரப்பட்டாலும் படலாம்; பாகவதபசாரப்படக்கூடா தென்று பெரியோர்கள் சொல்லுவ தறிந்தும் அறிவு கெட்டேனே என்று மனம் நொந்து துடிக்கையில், பகவான் அசரீரியாக, அடா தாம்ஸேஷ்டி! உனக்கு இந்நாமதேவின் பெருமை அறிய முடியாது. அவன் என் உண்மை பக்தன். அவன் வேறு நான் வேறென்று இனி எண்ணுதிருப்பையாக, அவனுக்குப் பூஜை செய்தாலும் எனக்குப் பூஜைபுரிந்ததேயாகும். அவனைத் தொழுதாலும் என்னைத் தொழுததேயாகும் எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

அவ்வசனத்தை அமைதியுடனே கேட்ட தாம்ஸேஷ்டி, ஹே பாண்டுரங்கா! ஸ்ரீரங்கா! நரசிங்கா! காளிங்கா! வென்று தோத்திரஞ்செய்து உள்மாயையைத் தெரிந்துகொள்ள எம்போன்ற அஞ்ஞானிகளுக்கு முடியுமோ! இனி எளியனைக் கைவிடலாகாதெனத் தன்னிருகரங்களைத் தலையின்மேலெடுத்து நாமதேவரைத் துதித்து, அப்பா நாமதேவ் உனது மகிமை அறியாமல் தவறு செய்துவிட்டேனெனத் தவித்துப் புழுங்கி அவனை மார்புடன் அணைத்துத் தோளின்மே லேற்றிக்கொண்டு வீடுநோக்கி வந்தார். முன்னம் நாம

தேவைத் தாம்ஸேஷ்டியார் கோபத்துடன் துரத்திப் போனதையும் இப்போது அவனைத்தோளின்மேலேற்றிக்கொண்டுவருவதையுங் கண்டவர்கள் கண்டு ஆச்சரியமடைந்து, இது உலகதர்மந்தானே என்று சும்மாவிருந்தார்கள். தாம்ஸேஷ்டியார் நாமதேவுடன் உள்ளே வந்ததைக் கண்ட குணுபாய்! சுவாமி! இக் கழுதைக்கும் வாகனம் வேண்டுமோவென, தாம்ஸேஷ்டியார் மனையாளின் அபசாரவார்த்தையைத் தாளாமல், அடிபேதாய்! நிறுத்துன் வார்த்தையை என்று நடந்தவைகள் யாவற்றையும் நடுக்கத்துடனே புகல, அவள் மிகவும் நடுங்கித் துடித்துத் தன்னை மன்னிக்கும்படியாக வேண்டிக்கொண்டனள். அன்றுமுதல் ஒவ்வொரு நாளும் நைவேத்தியத்தை நாமதேவரிடமே கொடுத்தனுப்பிக் குதூஹலத்தோடிருந்தார்கள் கேட்டீர்களோ சித்தர்களே! என்று நாபாஜி பின்னுஞ்சொல்லத்தொடங்கினர்.

நாமதேவின் விவாஹம்

நித்தியக்கியானமுள்ள சித்தர்களே! அதன்மேல் தாய் தந்தையர்களிருவரும் நாமதேவை மிகவும் பக்திச்சிரத்தையோடு பொன்னைக்காப்பதுபோலக் காத்து வந்தனர். இவ்வண்ணம் பாதுகாத்து வருகையில் ஒருநாள் விடியற்காலையில் பகவான் ஸர்வ வைலக்ஷிண்ணிய பிரம்ம மூர்த்தியின் உருவத்துடன் ஊர்த்துவபுண்டரம் பொலிய கனவிலே தோன்றி, அடே தாமஸேஷ்டி! உனது அருமைக் குமாரனுகிய நாமதேவன் பதினாறு பிராயமடைந்தும் இன்னுங் கலியாணஞ் செய்யாமலிருப்பது தர்மமோ? எதெதையும் காலமறிந்து செய்தால் தானே கோலமாக விருக்கும். ஞாலத்தோரும் அதுகண்டு நனிவியப்பர். நீர் நமது குலத்தில் பெண்ணில்லையே எனச்சிந்தனை செய்யவேண்டுவதில்லை. இவ்வூரினிலே தனச்சேஷ்டன் மகளான ராஜாபாயைக் கடிமணஞ்செய்க வெனத்திருவாய் மலர்ந்து மறைந்தனர்.

உடனே தாம்ஸேஷ்டியார் ஆனந்த கடலில் அமிழ்ந்தி தன் மனைவியை எழுப்பி, பெண்ணே! இன்றென் கனவில் பகவானே பிராமண வேஷத்துடனே வந்து, நமது குழந்தையான நாமதேவுக்

குத் தனஷ்டியாரின் மகள் ராஜாபாயைக் கலியாணஞ் செய்துவிக் கும்படியாகச் சொல்லிமறைந்தனரென்றுர். அதற்குக் குணபாய், சுவாமி! இதென்ன விந்தையாக விருக்கின்றது. நமது ஏழ்மை யென்ன? அந்தத் தனஷ்டியாரின் செல்வமென்ன? அவர் நம்மை மதிப்பரோ? இக்காலத்தியற்கையினை அறியீரோ?

“பொன்னெடு மணியுண்டானுற் புலையனுங் கிளைஞரென்று
தன்னையும் புகழ்ந்துகொண்டு சாதியில் மணமுஞ்செய்வார்
மன்னரா யிருந்தபேர்கள் வகைகெட்டுப் போவராயின்
பின்னையு மாரோவென்று பேசுவா ரேசுவாரே”

என்பதுபோல நாம் அவர் வீட்டுப் பெண்ணைப் போய்க் கேட்டால் அவமானமல்லவோ நேரிடும். பிரவேசித்து அவமானம் அடைவதைக் காட்டிலும் எல்லாம் கடவுள் செயலெனக் கௌரவமாக விருப்பதே மேன்மையாகும். நீர் எவ்வளவு நாள் சம்பாதித்தால் அவரைப் போலத் தனவந்தராக இருக்கமுடியும் என்றனள். அதற்குத் தாம் ஸேஷ்டியார், அடிபெண்ணே! சாவித்திரியாரின் கலியாணந் தெரி யாதோ? விதியைக் கண்டவர்கள் யாரிருக்கின்றனர். கடவுளின் நிய மனப்படி நடந்தால் பின்னர் எவ்வாருயினும் அதனுல் ஒரு குறைவு மில்லை.

“நஹிதை வேந ஸித்யந்தி
கார்யாண்யே கேந ஸ்த்தம
நசாபி கர்மணை கேந
த்வாப்யாம் ஸித்திஸ்த்து யோகத:”

என்கிறபடி ஒரு காரியம் கேவலம் தெய்வத்தினுலேயாவது மனிதப் பிரயத்தினுலேயாவது நிறைவேற முடியாது. இரண்டு மொத்து சேர்ந்தால்தான் காரிய முடியுமென்று ஸௌப்திக பர்வம் சொல்லு கிறது. ஆகையால் மனிதயத்தினம் வயலைப்போன்றது. தெய்வா னுக்கிரகம் விதையைப் போன்றது. வயலும் விதையும் சேர்ந்தால் தானியமுண்டாகிறது. அதுபோல எக்காரியமும் இரண்டுவித யத் தினங்களினுல்தான் நிறைவேறும். இதில் கொஞ்சமேனும் சந் தேகம் வேண்டாமெனத் தாம்ஸேஷ்டிசொல்ல, அதற்குக் குண பாயும் சம்மதித்தாள். தாம்ஸேஷ்டிக்கும் நித்தியகர்மானுஷ்டான காலம் வந்துவிட்டபடியால் அவர் உடனே நீராடிப்பூஜையை முடித்

துக்கொண்டு தனச்சேஷ்டியாரின் வீட்டிற்குச் சென்றார். அங்கே இவரது வருகையை ஒருவரும் அன்புடன் ஆதரிக்கவில்லையாயினும், பரம பாகவத ராகையால் தெய்வத் திரு வாக்கே பெரு வாக்காய்க்கொண்டு அந்த ராஜாபாயின் தந்தையாரைக் கண்டு தன்னபிப்பிராயத்தை அவரிடம் எடுத்துச் சொன்னார். தனச்சேஷ்டியார் அதற்குப் பரிகாஸஞ் செய்வதுபோல நகைத்து, தாம்ஸேஷ்டியாரே உம்மிடம் ஆயிரம் பொன்னிருந்தால் நிச்சய தாம்பூலம் நடக்கும் என்றார். அதுகேட்ட தாம்ஸேஷ்டியாருக்கோ ஒன்றுந்தோன்றவில்லை. மனச்சோர்வு அடைந்தவராய் வீட்டை நோக்கி வந்தார். அங்கே தன் கணவரது வரவை எதிர்நோக்கியிருந்த குணாபாய் தன் கணவரது முகக்குறிப்பினாலேயே விஷயத்தை அறிந்துகொண்டாள். பிறகு தம்பதிகள் ஒருவரோடொருவர்கூடி, மகனுக்கு மணமெப்படிச் செய்யலாம்? திரவியத்திற்கு எவரைப்போய் யாசிக்கலாம். இவ்வளவு செல்வத்தை நம்மை நம்பிக்கொடுப்பவர்கள் யார்? என்று மனவாதையுடன் பாண்டுரங்கன் ஆலயத்துள்ளே பிரவேசித்து, சுவாமி! தேவரீர் கிருபையாலே கிடைத்த மைந்தனுக்குக் கனவிற் கூறிய பெண் கிடைப்பதில் சிறிதுந் தடை கிடையாது. ஆனால் அதனை நடத்திவைக்க அடியேனிடம் செல்வந்தான் கிடைக்கவில்லையெனப் பிரார்த்தித்து, இதற்கு நானென்ன செய்யவல்லேன் என்றனர். இதற்குள் கதிரவன் மேலைக் கடலில் மூழ்கினார். உலகமெங்கும் இருள்பரவியது. தாம்ஸேஷ்டியாரும் கோவிலைவிட்டுத் தமது வீட்டிற்கு வந்து, தூக்கம் பிடியாமல் மனக்கலக்கத்தோடு இரவெல்லாம் தன் பத்தினியாரோடு மேல் நடக்கும் வழியைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நள்ளிரவாகியும் தம்பதிகளின் சம்பாஷணையோ ஓயவில்லை பகவான் தன் அந்தரங்க பக்தனாகிய நாமதேவின் கலியாணத்தை நடத்திவைக்கவேண்டி தானே ஒரு தோட்டியைப்போல் வேடமெடுத்துத் தலையின்மீது ஒரு கூடை நிரையப்பொன் செங்கலையெடுத்து வந்தும், வாயற் கதவு தாளிட்டும் சம்பாஷணைகள் இடைவிடாமலுமிருந்தபடியால், அவைகளை உள்ளே சென்று கொட்ட முடியாமல் வெகு நேரம் வரையில் காத்தும் பார்த்தும் சமயம் நேராமையால், இழிவான காரியத்தில் புகுந்தாயினும் தன் அடிமையானவனுக்கு மங்களஞ் செய்துவிக்க முயன்று, தலையிலிருந்த கூடையைக் கீழே இறக்கிவைத்துக்கொண்டு, வெளியிலே இரு

ந்தபடி முதன்முதல் ஒருபொன் செங்கலை வாயலிலே வீசியெறிந்தார். அக்கல் மிகவும் விசையுடன் விழுந்தமையால், விழித்துக் கொண் டிருந்த தாம்ஸேஷ்டியார் அறிந்து, ஆரடா கள்ளப் பயலே! இவ்வேழையின் முற்றத்திலே கல்லை வீசியெறிபவன்? என்று வைதார்.

அப்போது பகவான் நம்மைத் தாம்ஸேஷ்டி சொன்னது உண்மை தான். என்னைக்கள்ளமாயன் என்றல்லவோ சொல்லுகின்றனர். இதனால் நாமடைந்த இழிவென்னவென்று மீண்டும் ஒரு கல்லை வீட்டின்மேல் எறிந்தார். அதுகண்ட தாம்ஸேஷ்டியாரின் கோபம் அதிகரித்து பிறர் வீட்டிற் கல்லெறியும் கமலக்கையனை நான் இதுவரையிலுங்கண்டதே கிடையாது என்று கத்தினர். அப்போது புருஷோத்தமன் தாம் ஸேஷ்டியின் நல்வார்த்தைக்கு மெச்சி மீண்டும் ஒரு செங்கலை எடுத்து, அவர் குடியிருக்கும் வீட்டுவாயலின் கதவு பிளவுபடும்படியாக விசையாகப்போட்டார். பகவான் செய்கையென்றுணராத தாம் ஸேஷ்டியார் ஓவென்று கத்திக் கொண்டு கையிலே வலியதொரு தண்டத்தை எடுத்து வெளிப்பட்டு, அந்த கல்போட்ட காருத்தனைக் கண்டவாறுவைது, அடே பயலே! ஓடாதே நில். நீ எனக்கொரு புல். எதிரே வந்து காரணத்தைச்சொல். இல்லையேல் உன்னைக்கண்டு மண்டையைப் பிளப்பேனென்று வாய்திறந்து கத்திக்கொண்டு வெளியே வர, தன்பதியின் பெருங்குரலைக்கேட்ட குணபாயும் பின்னே கூக்குரலிட்டு வரவும், இப்படியிருவர்களும் வெளியே வந்தவக்கால் எம்பெருமான் புன்னகை புரிந்து, இரண்டு கல்லை எடுத்து மிகவும் வேகத்துடனே எடுத்து வீசினர். இப்படிச்சொல்லச் சொல்ல மிக்கப்பிடிவாதத்துடன் இரண்டுகல்வந்து விழுந்தமைகண்டு வெகுளி பொங்கி அந்தக்கல் வீசும் துஷ்டனைக்கண்டு பிடித்துப்பண்டரீநாதன் சாக்ஷியாக இரு துண்டமாகக் கொலைசெய்து போடுகின்றேனெனத் துடித்து வெடித்த முகத்துடன் வாயற்கதவைத்திறந்து கொண்டு வெளியே வந்தார்.

அப்போது தாம்ஸேஷ்டிக்குப் பயத்தைக் காட்டிய பெருமானும், இனி இங்கே யிருந்தால் நமது பெருமைக்கே ஒரு இழிவு வரும். தாம்ஸேஷ்டி இப்போது அடைந்துள்ள கோபத்தால் நமக்கு

ஒரு பெரிய தீங்கை விளைவிக்கவுங் கூடுமென நினைந்து மறைந்தனர். கதிரவனும் கீழைக் கடலில் மெல்லத் தன் செவ்விய கிரணங்களைப் பரப்பத் தொடங்கினன். குணுபாய் தினம் போல் தன் நாயகன் பள்ளி விட்டெழுவதன் முன்னம் தானெழுந்து முற்றந்துலக்க வாசலில் வந்தனள். அக்காலையில் அம் முற்றத்தில் மிகவும் பளபளப்பான தங்கக் கற்கள் ஒளி வீசுவதைக் கண்டவளாகி, ஓடோடியுஞ் சென்று தாம்ஸேஷ்டியாரிடந் தெரிவிக்கவும், அவர் வெளியே வந்து பார்க்கையில் விழுந்த கற்கள் யாவும் பொன் கற்களாயிருக்கக் கண்டு ஆனந்தங்கொண்டு இதுவும் ஸர்வலோக தயாபரனுகவிருக்கும் பண்டரீநாதன் செய்த பேருளே யாகுமென்று எண்ணிப் பகவானைப் பலவாறு தோத்திரம் புரிந்தார். தாம்ஸேஷ்டியார் பின்னர் கண்டவக் கனகக் கற்களையெல்லாம் மிகவும் பத்திரமாக வெடுத்துத் தன் வீட்டின் ஒரு புறத்தில் சேமித்து வைத்தார்.

பகவான் பிராட்டியோடு வேற்றுருவமெடுத்தல்

வேழம் மூலமென்று அழைத்திட விரைவினில் வந்தவனும், மாவின் வாய் பிளந்த மாதவனும், மூவ ராகியே முளைத் தெழுந்த முராரி யாகிய பகவான் பஞ்சின் மெல்லடிப் பரபுர மிலங்கும் பைந் தொடியா ளாகிய ருக்மணி தேவியைக் கூவி யழைத்து, அடி வண்டு மல்கிய மலர் குழலாய்! நீ இப்போது உனது நிஜ வுருவத்தை மாற்றிக்கொண்டு குணுபாயின் உருவத்தை யெடுத்துக்கொள்ளுதல் வேண்டும். நான் தாம்ஸேஷ்டியின் உருவத்தை யெடுத்துக்கொள்ளப் போகிறேனெனத் தான் பிராட்டி கண் குளிரத் தாம்ஸேஷ்டியாகத் தோன்றினன். உருக்குமணி தேவியாரும் தன் கணவர் கொண்ட திருக்கோலத்திற் கேற்ப, குணுபாயின் உருவ மெடுத்து நின்றாள். பின்னர் இருவரும் ஆயிரம் பொன்னைத் தட்டி லெடுத்துக்கொண்டு புன்னகையுடனே ராஜாபாயின் வீட்டிற்கு வந்தார்கள். அவர்களின் வரவைக் கண்ட ராஜாபாயின் தந்தையார் முன்போல இல்லாமல், தாமே மரியாதையோடு அவர்கள் முன்னே வந்து வீட்டினுள்ளே அழைத்துக்கொண்டு சென்று ஆஸனமளித்து அன்புடன் பரவி இன்புடனேற்று நின்றார். அப்போது பகவான் தாம்

கொண்டுவந்த ஆயிரம் பொன்னையும் தாம்சேஷ்டியின் முன்னர் வைத்தார். அதனைக் கண்ட தனச்சேஷ்டியார், தாம்ஸேஷ்டியாரே! இவ்வாயிரம் பொன்னை எவ்வளவு கஷ்டப்பட்டுச் சம்பாதித்தீரோ? இதனை நீர் கலியாணத்தில் செலவு செய்துவிட்டீரானால் பின்னர் மிகுந்த கஷ்டத்தை அடைய நேருமென்று நகை செய்தார். அதனைக் கண்ட தாம்ஸேஷ்டியார், தனச்சேஷ்டியாரே உமது எண்ணத்தை அறிந்தேன். நீர் என்னைப் பற்றிச் சஞ்சலப்படல் வேண்டுவதில்லை. உமது பெண்ணுக்குப் பணிகள் வேண்டுமாயின் இன்னும் பதினாயிரம் பொன்னைப் பரிவுடன் தருகின்றோம். தருமத்தை நோக்கி நீர் கலியாணஞ் செய்து கொடுத்தல் நலம். உமது திரவியத்தில் இம்மி செலவு செய்ய உமக்கிஷ்டமில்லாமற்போனாலும், நாங்களே கலியாணச் செலவிற்கே இருபதினாயிரம் பொன்னையுந் தருகின்றேம். நாளைய தினமே நன்னாளாக விருக்கின்றபடியால் கலியாணத்தை முடித்தல் வேண்டும் என்றார். இவற்றை யெல்லாங் கேட்ட தனச்சேஷ்டியார் மன மகிழ்ந்து, அப்படியே செய்வதற்குத் தடை கிடையாதென்றியம்பினர். உடனே பகவான் வெளியில் வந்து ஒரு ஆளின் வசம் முப்பதினாயிரங் கொடுத்துத் தனச்சேஷ்டியாரிடமனுப்பவும், அதனைப் பெற்றுக்கொண்டவுடன் தனச்சேஷ்டியார் பெண்ணைக் கொடுக்க இயைந்தனர். அதனை யறிந்த பகவான் மீண்டும் ஒரு பிராமண வுருவுடன் இராஜாபாயின் வீட்டிற்குப் போய், தனச்சேஷ்டியாரே உம்மைத் தாம்ஸேஷ்டியார் கையுடன் அழைத்து வரச் சொல்லினரென அவரை உடனழைத்துக்கொண்டு தாம்ஸேஷ்டியாரின் வீட்டில் புகுந்தார். அவர்கள் வரவைத் தெரிந்த தாம்ஸேஷ்டியாரும், மனைவியும் குதூஹலத்தால் மெய் மறந்து நின்றிருந்தார்கள். அப்போது பகவான் சம்மந்திகளின் மனம் பூரிக்க முன்னம் தாம்ஸேஷ்டியார் புதைத்து வைத்திருந்த பொற்கல்லுகளை எடுத்துக் காட்டினர். அவைகளைப் பிரத்தியக்ஷமாகப் பார்த்த சம்பந்தியாரின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. உடனே தனச்சேஷ்டியார் தாம்ஸேஷ்டியாரை நோக்கி, நிறைவுற்றவரே! அறிவீனர் தாம் பெற்ற பொருள் கொஞ்சமேயாயினும் திரண்ட செல்வவானைப்போல வெளியினுள்ளாரை மயக்கமுறச் செய்து வாழ்வார். அறிவுள்ள பெரியோர்கள் தாம் அகண்டை சுவரியத்தைப் பெற்றிருந்தனரேயாயினும் பூனைபோல் அடக்க முடையாகவே இருந்து வாழ்வார். இவ் வுபமானம் உமக்கும் எனக்குமே தக்கன

வாகும். நான் உம்முடைய பெருமையைக் கனவிலும் கருதாதவன். இப்போது தேவரீர் சம்மந்தம் எனக்குக் கிடைத்தது எம்பெருமான் கடாக்ஷமே யாகும். இனி நான் சொல்லுவதென்ன விருக்கின்றது. எதோ உமது மகனுகிய நாமதேவன் என வினவவும், தாம்ஸேஷ்டி யார் அதோ வருகின்றனென, தனச்சேஷ்டியார் அப்படியா வென்று எதிரே சென்று பார்க்கையில், நாமதேவின் பேரழகு தனச்சேஷ்டி யின் கண்களைக் கவர்ந்து கொண்டது. இவ்வாறு தன் மகனின் வடி வழகான ஸாகரத்திலே வீழ்ந்து கிடப்பதை தாம்ஸேஷ்டிப் பிறரா லறிந்து இதுவும் பகவான்செய்த உபகாரமேயாகுமெனவுன்னித் தன் மகனையும் தனத்தையும் தூதுபோன பிராமணனையும் விசித்திரமான சகடத்தின்மேலேற்றிக்கொண்டு சம்மந்தியாரின் வீட்டிற்குப் போய் மணமக்களை அலங்கரித்து அக்கினி சான்றுகத் தம் குலப்பெரியோர் ஆசீர்வதிக்க மங்கலச் சடங்கை மகிமையாய்ச் செய்து முடித்தன ரென்று சித்தர்களின் மனம் மகிழ, நாபாஜிபார் எடுத்துச் சொல்லி மீளவும் புகலத் தொடங்கினர்.

பகவான் பொன் வழங்கியது

> "மாயவன் துவராபதி வயங்கிய வாயர்
> நாயகன் திருக்கரங்களாற் சூட்டுநற் றெரியல்
> வேயிருந் தடந்தோளினு மார்பினும் விளங்கத்
> தூயசெந்திரு மகிழ்ந்தனள் துனியெலா மகல"

என்பதுபோல் தர்மஸ்வரூபரான ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவால் பொலி ந்தோங்கிய மாலையுடன் தோன்றிய ருக்மணி பிராட்டியாரைப் போல இராஜாபாயும் நாமதேவரால் சூட்டப்பட்ட மாலையோடு விளங்கி னுள். பிறகு வெண்மைநிறம், மேகநிறம், பச்சைநிறம், பவளநிறம் முதலிய நிறங்களோடுகூடிப் பிரகாசிக்கும் பரமாத்மா நாமதேவரைப் பார்த்து, பாகவதசிரனே! இம்மையின்பம், மறுமையின்பம், வீட் டின்பம் ஆகிய இம்மூவகை இன்பங்களையும் ஆன்மாக்களுக்கு அளிக் கக்கூடியது அறமேயாகும். அறஞ்செய்தவர் பொருளின்ப வீடு களை அடைவர். அறஞ்செய்யாதவர் ஒருபோதும் அவற்றை அடை யார். இதனை,

"அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை"

"அறந்திறம் பாது நாளு மரும் பொருள் காமந்துய்ப்போர்
சிறந்தவிவ் வுலகந் தன்னி லளப்பருஞ் செல்வ மெய்தி
மறங்கிளர் வடிவே லுண்கண் வானவர் மகளிரோடு
முறங்கிடா தின்பந் துய்க்கு முலகினி லினிது வாழ்வார்"

"தருமமே யுலகம் போற்றச் சகலகா ரணம தாகும்
தருமமே யழியா தென்றுந் தாபர மாகி நிற்கும்
தருமமே தனைவேட் டோர்க்குச் சவுக்கிய மனைத்துநல்கும்
தருமமே முத்தி சேருஞ் சாதன மென்றுட் கொள்வாய்"

இவ்விதம் பொதுமையாகச் சொல்லியவறத்துள்ளே அன்னதானமே அகிலத்துள்ளே மிகவுஞ் சிறந்தது. மற்றைய அவ்வளவு சிறப்பைத் தருவனவல்ல. எங்ஙனமெனில், அன்னதானம் அந்தணப் பேயர்களே சிலாகிக்கக்கூடியதல்லாமல், அது ஜீரணிக்கக்கூடியதுவுமாகும். வித்தியாதானம் அஜீரணத்தையுடையதாகும். அவ்வித்தியாதானமொன்றே எவ்வாற்றானும் சிறப்பினையுடையதாகும். மேலோர்களினாலே பெருமையாகச் சொல்லப்பட்டதாகும். ஆனால், பாகவதோத்தமர்களுக்குக் கொஞ்சம் அன்னமிட்டால், அவ்வாறு அன்னமிட்டவனுக்கு அப்பிராகிருதமான திவ்யலோகம் சித்திக்குமென்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை. இதனை நீ நன்கு அறியும்படியாக ஒரு இதிகாஸத்தை விளக்குகின்றேன். முன்னம் அத்தினபுரியை ஆண்டு வந்தவர்களான பஞ்சவர்கள் ஐந்துபேரில் அருச்சுனன் கன்னனுடன் எதிர்த்துக் கொடிய போர் செய்து வருகையில், கன்னன் அருச்சுனன் கண்ணனுக்குத் தர்மராஜனைப்போலக் காணப்பட்டான். அதைக்கண்ட வருச்சுனன் நடுங்கிப் பாணமெடுப்பதை நிறுத்திய வளவில், தருமன் கோபிக்கப் பின்னர் அருச்சுனன் முன்போலவே காண்டீப மெடுத்து, கன்னனைத் தேரின்மேல் சாய்க்க, அப்போது கிருஷ்ணன் பிராமண வுருவத்துடனே கன்னனை அணுகி யாசிக்க, அவன் தான் பண்ணிய புண்ணிய மனைத்தையும் தத்தஞ் செய்வேன். ஆயினும், தத்தஞ் செய்யத் தண்ணீரில்லையே என்று தயங்க, கண்ணன் பக்கத்திலுள்ள தண்ணீரைக் கொண்டு வந்து காடுத்த மாத்திரத்தில் அவன் தாரை வார்க்கவும், அக் கண்ணன்

தாரை வார்த்தவை பொன்னுகவும், அதற்குக் கண்ணன் மனக்கு தூஹலத்தோடு அப்பா கன்னு! நீ ஒருநாளும் அன்னதானம் செய்யவில்லை போலும். அதனுல்தான் நீ இப்போது தாக மெடுத்துத் தவிக்கின்றனையென, சுவாமி! நான் என்னிடம் வந்தவர் சிலருக்கு அதோ தர்மபுத்திரன் அன்னதானக் கொடி பறக்கின்றது. அங்கே போனுல் போஜன மகப்படுமென்று என் சுட்டு விரலால் அவர்களுக்குச் சுட்டிக் காட்டினே னென்று சொல்ல, அப்படியாயின் அச்சுட்டு விரலால் இப்போதுன் வேட்கையைத் தீர்த்துக் கொள்ளென்று சொன்ன மாத்திரத்தில், கன்னன் அவ்வாறே தீர்த்துக் கொண்டு களிப்புடனே கண்ணனுக்குத் தானமளித்து, அவை உண்மைவுருவத்மூதச் சேவித்து மனத் தெளிவடைந்தான். ஆகையால் இவ்வுலகில் எத்தானத்திலும் மேலான தானம் அன்னதானமே

“ தேய மார்த்த ஸ்ய சயநம்
ஸ்தித ச்ராந்த ஸ்ய சாஸநம்
த்ரிஷி தஸ்யச பாநீயம் .
க்ஷுதி தஸ்யச போஜனம் ”

யாம். எனப்பாரதம் ஆரணிய பருவத்தில் விசேஷித்திருக்கின்றது. இதுவுமல்லாமல் பாரதப்போரில் பாண்டியன் படைஞருக்குச் சோறிட்டுவீடு புகுந்த செய்தியை அறியாயாவென்று இயம்பினர். அதன் மேலும், பகவான் நாமதேவரை நோக்கி, பாகவதோத்தமரே! ஸாக்ஷாத் ஸ்ரீராமபிரானின் பிரிவாற்றுத சீதாபிராட்டியார், தன்னைப் பிரிந்தமையாலே தன் தலைவர் வருந்தி நிற்கும் நிலையினை நினைந்து, அவ்வெம்பிராட்டியார் வருந்துதலைக் கூறுமிடத்து,

“ அருந்து மெல்லட காரிட வருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோவென்று விம்மும்
மருந்து மூண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென மயங்கும்
இருந்த மாநிலஞ் செல்லரித் திடவுமாண் டெழாதாள் ”

எனவும், ஸீதாபிராட்டியார் ஸர்வேசுவரன் பாலித்தனுப்பிய கணையாழியை அனுமாரிடமிருந்து பெற்றவுடனே மகிழ்ந்ததைச் சொல்லும்போது,

" இருந்துபசி யாலிட ருழந்தவர்க ளெய்தும்
அருந்துமமு தாகிய தறத்தவரை யண்மும்
விருந்துமென லாகியது வீயுமுயிர் மீளும்
மருந்துமென லாகியது வாழிமணி யாழி "

எனக்கவிச் சக்கர வர்த்தியாகிய கம்பரும் எடுத்துதகரித்தார். ஆகை யால் தன்னிலே மறந்த பிரம்மஞானியர்களும் பக்தி வைராக்கியாதி களினாலே பொலியும் பரம பாகவதர்களும் அன்னதானத்தையே பெரிதாகக்கொண்டாடுவாரே யல்லாமல் பொருட்டானத்தைப் போற்றவே மாட்டார்களென நாமதேவரின் மனதிலே பசுமரத் தாணி பதிவதைப்போலப்பதியவைத்து அப்பால் அந்தர்த் தானமாயினர்.

நாமதேவர் அந்தணரின் வாக்கியத்தை வேதமெனவெண்ணி, பகவத் பக்தர்களைத் தூரத்திலே கண்டவுடனே, அவர்களுடைய சாதியையும் குணத்தையும் ஆராயாமல் அவர்கள் ஊர்த்துவ புண் ராதிகள் முதலிய தரித்து விளங்குகின்றார்களாவெனக் கொண்டு, அவர்களை மனிதரெனக் கருதாது பண்டரீநாத னெனவே நினைத்து, இருக்கை விட்டெழுந்து அகமகிழ்ச்சியோடும் முகமலர்ச்சியோடும் குவித்த கைகளையுடையவராய் விரைந்து எதிர் கொண்டு, அவர்களு டைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, இன் சொற்களைச் சொல்லி, வீட்டுக்கு அழைத்துக் கொண்டுவந்து, காகநீர் கொண்டு அவர்கள் திருவடிகளை விளக்கி, அத்தீரத்தத்தைச் சிரமேற் றெளி த்து உள்ளும் பருகி, அத்திருவடிகளை மெல்லிய வஸ்திரத்தினால் ஒற்றி, அவர்களை ஆஸனத்திலே இருத்தி, பத்திர புஷ்பங்களினாலே பூசித்து, தூபதீபங்காட்டி, பூமியில் விழுந்து நமஸ்கரித்து, கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உலர்ப்பு என்னும் அறுவகைச் சுவையை உடையனவாய் உண்ணப்படுவது தின்னப்படுவது நக் கப்படுவது பருகப்படுவது என நால் வகைப்படும் உணவுகளை அவர வர் பிரீதிப்படி அமுது செய்வித்து, சரீரத்தினாலாய பயனை இன் றன்றோ பெற்றேன் என்று நல்வசனங்களை விளம்பி வழி விடுவர்.

" மறமலியுலக வாழ்க்கையே வேண்டும் வந்துநின் னன்பர்தம் பணியா — மறமது கிடைக்கின்." என்னும், பெரியாரின் திருவாக் கின்படியே இல்வாழ்க்கையின் பயன் பாகவதோத்தமரின் ததியார

தனமே யாகுமென்று நினைப்பார். இங்ஙனம் செய்து வருகையில் இவர் செல்வமெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தலைப் பட்டது. இவர் வறுமை வந்தபொழுதும் மனம் சிறிதும் சுருங்குத லன்றி முன்போலவே எல்லாம் பண்டரீநாதன் திருவிளையாடலே யாகுமென விருந்தார். இந் நாமதேவருக்கு வந்த வறுமையின் கொடுமையோ மிகப் பெரியது. நாமதேவர் புண்ணியம் செய்த நமக்குக் கடவுள் இவ்வளவு இவர் செய்தாரே என்று பண்டரீநாத னைச் சிறிதும் நோவாமை மிகவும் ஆச்சரியம். ஆயினும் இவர் கோயில் வந்து அங்கே எம்பெருமான் பெருமையைப் பேசிக்கொண் டே பொழுதைப் போக்குவாரேயன்றிக் கொஞ்சமேனும் கவனிப்பது வும் வீட்டிற்குப் போவதுவுமில்லை.

நாமதேவர் இங்ஙன மிருக்கையிலே அவரது தாய் தந்தையர் களிருவரும் தாங்கள் வெகு நாளாகச் செய்து வந்த தையல் வேலை செய்து பகவானுக்குத் தினம்போல் நைவேத்தியத்தை நிறுத்தாமற் செய்து வந்தார்கள். இப்படி நடந்து வரும் தையல் வேலையும் தடு மாற, ஒருநாள் பகவானுக்கே நைவேத்தியம் செய்யவும் வழியில்லா மல் போயிற்று. அன்று தாய் தந்தையர்களிருவரும் மிகவும் துக்க மடைந்து பண்டரீநாதன் ஆலயத்துள்ளே புகுந்து, ஸர்வலோக தயாபரா! நாங்கள் வறுமைக் கடலிற் படிந்து வருந்திவாட விட்ட னையே? அந்தோ! நாங்கள்தான் பசிப் பிணியைத் தாங்கிக்கொண்டி ருப்போம். உமது பக்தனுகியும் எங்கள் குழந்தையுமான நாமதே வன் பசிப்பிணி தாங்குவனோ வென்று புலம்பிக் கொண்டே கோவி லுள்ளே வந்தனர். நாமதேவர் தன் தாய் தந்தையர்களின் மனக் கொதிப்பை முகத்தாலறிந்து, பெற்றோரே! நீவிர் வயது முதிர்ந்த வராக விருந்து பட்டினி கிடைக்கையில், எனக்ரும் எம்பெருமா னுக்கும் அதிக பசி வந்து விட்டதோ வென்று சொல்ல, அது கேட்ட தாயாரும் தந்தையாரும், பண்டரீநாதா! எல்லாம் உனது திருவிளையாடலே யாகுமென வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்.

பண்டரீநாதன் திருவிளையாடல்

தாம் ஸேஷ்டியும் குணபாயும் வீட்டிற்கு வந்தும், அவர்கள் மைந்தன் பசியோடிருப்பதை நினைந்து நினைந்து, எந்தையாகிய கடவுளே! இந்த மைந்தன் பட்டிணியால் நைந்திருக்கலாமோ வென்றும்

" நோதேச கால நியமஃ சௌசாசௌச விநிர்ணயஃ
பரம் சங்கீர்த்தனு தேவ, ராமராமேதி முச்யதே "

என்றும், பகவானின் தியானத்திற்குத் தேசகால நியமங்களில்லை. பகவானைத் தியானிப்பதற்கும் தத்துவ உணர்ச்சியில்லாத வைதிக வேஷம்பூண்ட பிராமணப்பேயர்கள்தான் காலதேசங்களுண்டென்று புலம்புவார்கள். அவர்கள் புலம்பல் பயனில்லாத பேச்சேயாகும். பகவானை அசுத்தமானவிடத்திலும், மலின பூமியிலும் இருந்தும், உதயாஸ்தமனதி ஸமயத்திலும், ருதுகாலம், சூதககாலம் முதலிய காலபேதங்களினும் தியானஞ் செய்பலாம். ஆகையால், விருந்தாப்பியர்களிருவரும் பரம அசுத்தராகியே தியானஞ் செய்துவாடியிருந்தார்கள். அப்போது,

" விமலகமல நேத்திரம் வித்யதோ தாரகாத்ரம்
ஸரஸமதுர பாஷம் ஸாது மார்க்க ப்ரகாரம்
பரனபரவிபேதம் தாஸலோக ப்ரஸாதம்
ப்ரணமிதபத பத்மம் யோகிராட்திவ்ய மூர்த்திம் "

என்று பக்தி பூர்வகமாகத் துதிக்கும் பக்தர்களுக்குத் துணை புரிபவனுகிய எம்பெருமான் தானுன தன்மையை மறந்து, அருச்சுனனுக்குத் தேர்வலவனுக வமைந்தது போலும், ஆனை மடுக்கரைக் கழைக்க ஓடிச் சென்றது போலும், பொறுமையே பூஷணமாகத் துலங்கிய தர்ம புத்திரன் கட்டளையின்மேல் தூதுவனுகச் சென்றது போலும், பத்திராசல ராமதாஸருக்குத் துணைபுரிய சேவகவேஷம் தரித்துத் தவியதுபோலும் குணபூஷண பவசோஷண மிருது பாஷணரான வெம்பெருமான் ஒரு சேவகனைப்போல் வேடந்தரித்து எருதாண்டி மாட்டுக் காரனைப்போல ஒரு மாட்டின்மேல் இலக்ஷம் விராகனை ஏற்றிக்கொண்டு தாம்ஸேஷ்டியின் வீட்டின் முன்னே நிறுத்தி, ஓய் நாமதேவரே! என்று மூன்று தரம் கூப்பிட்டனர். பகவான் கூப்பிட்ட சப்தம் குணபாயின் காதிற் பட்டது. உடனே அவள் நீர்

யாரென வினவ, அவர், நான் வெகுதூரத்திற் கப்பாலிருப்பவன். நான் நாமதேவரைக்காண வேண்டுமென்றே மிக்க ஆவலுடன் வந்தேன் என்று சொன்னார்.

தரித்திரம் ஸர்வ பாவங்களுக்கும் காரணமாக நிற்கும் வன்மையுடைய தென்று பெரியோர்களின் திருவாக்கின் பிரகாரம் நற்குணக் கடலான குணபாயும் வறுமையால், அந்தோ! இவர் யாரோ விருந்தினராகத் தோன்றுகின்றது. இனி இவரிடம் பேசுவோமானால் மாட்டுக்கும் தனக்கும் உணவு கேட்பார். நமது வீட்டிலோ ஒன்றுமில்லாமலிருக்கின்றது என்று தனக்கிருக்கும் வறுமையாலும் பட்டினியா யிருக்கும் சிறுமையாலும் இங்கே நாமதேவரில்லை யென்றாள். அவ்வார்த்தையைக் கேட்டும் அவர் அங்கேயே நிற்பது கண்ட குணபாய், சுவாமி நீரோ நல்லவராக விருக்கின்றீர். நாமதேவ் எவ்விடம் போயிருக்கின்றாரோ? அவன் எப்போது வருவானோ? அவனுடனுமக் கென்ன காரியம்? அவன் பயித்தியக்காரன். இல்லதும் பொல்லதும் உணராதவனாகையால், நீர் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு செல்லுவதே நலமென்றுரைத்தாள். ஸ்ரீ பக்தவத்ஸலன், அம்மணீ! நான் வெகு தூரத்திலிருந்து வந்தேனெனச் சொல்லியும் என்மீது கருணை வைத்துத் தாகத்திற்குத் தண்ணீர் கொடாமல் தெருத்துதல் இல்லற வாழ்க்கைக்கு ஏற்றது தானோ! நான் விருந்தாக வந்தவனென்றுன்னாதே. நான் உங்கள் வறுமை, 'கொடுமை' என்பதைத் தெரிவேன். வறுமையினும் கொடுமையான விபாதியே கிடையாது. ஆகையால் தரித்திரத்துடனே இவ்வுலக வாழ்க்கையில் இருப்பதினும், இவ்வினிய வுயிரை விடுவதே சாலவும் சிறந்த தென்பதையும் உண்மையாகத் தெரிந்தவன். இதுவுமல்லாமல் தாரித்திரக் கடலில் விழுந்து கிடக்கும் சேதனர்களைப் பார்க்கக் கூடாதென்னும் தர்மமிருந்தாலும், என் எஜமானன் ஆணையை நிராகரித்துவிட முடியாமல் இவ்விடம் வரலாயினேன். எனக்கு இந்த வேலையினும் வேறொரு வேலையே கிடையாது. எந்தவிடத்தில் என் எஜமானனைச் சேர்ந்தவர்களிருக்கின்றார்களோ அங்கங்கே நான் இவ்வாறே தான் போய் அவதிப்படவேண்டியிருக்கிறது. என்ன செய்யலாம்? அந்த நாமனைக் கண்டு பின்பு சென்றுவிடுகிறேனென்றுஅவர் வீட்டின் வாயற்படியிலுட்கார்ந்திருந்தார். வெகு நேரமாகியும் நாமதேவன் வீட்டுக்குத் திரும்பிவர

வில்லை. வந்த சேவர்கள் இருவரும் வாயற்படியை விட்டு அப்புறம் போகவுமில்லை. அவ்வூரினுள்ளவர்கள் என்ன இந்தச் சேவகன் நாமதேவனிடம் வந்தானும். நமது நாமதேவன் பரம பக்தன். அவன் இப்படிக் கொத்த சேவர்களிடம் ஒருகாலும் உறவு செய்யவே மாட்டான். ஒருக்கால் பிண்டத்திற்காக அவரிடம் வந்திருக்கலாமென்று பேசிப் போனார்கள். அவ்வசனங்களைக் கேட்ட குணபாய் மிகவும் கோபத்துடனே அச் சேவகர்களை நோக்கி, என்ன நீங்கள் செய்வதும் பேசுவதும் அநுசிதமாகவே யிருக்கிறது. நீங்கள் நாமதேவனுக்குப் பங்காளியா ? அல்லது அவன் உங்களுக்குக் கடன்தரவேண்டுமா ? ஏன் பிடிவாதமாய் வாயற்படியின் வாயிலே வந்தபடி பேசிக்கொண்டு கிடக்கின்றீர்கள். மரியாதையாய்ச் சீக்கிரம் அப்பால் போய் விடுங்கள். வீண் பிடிவாதஞ் செய்ய வேண்டா மென்றனள்.

ஸர்வ லோக சரண்ணிய னாகிய பகவான் இதென்ன துன்பம் ? தாகத்திற்குத் தண்ணீர் கொடுக்காதவளுக்குக் கங்காதேவியென்று பெய ரிட்டுக் கூப்பிடுவது போலும், செவ்வாய்க் கிழமைக்கு மங்கள வாரம் எனச் சொல்வது போலும் இவ் வயது சென்றவளுக்குக் குணபாய் என்று பெயரிட்டு அழைக்கின்றீரே ? நேரில் காணுமிடத்து இவளது குணங்களெல்லாம் அவகுணங்களாகவே பொலிகின்றனவே எனக் கடுகடுத்துச்சொல்ல, அச் சேவகனைப் பார்த்த குணபாய்க்கோ முன்னிலும் அதிக கோபம் பிறந்து, அடா மூட சேவகனே ! அப்படித் தாகம் அதிகமாக விருந்தால் கழனிகளில் நிறைந்து கிடக்கும் தண்ணீரைக் குடித்துத் தாகசாந்தி செய்து கொள். இனி ஒரு கணமேனும் வாயற்படியில் உட்கார்ந்து வாயில் வந்தபடியெல்லாம் பிதற்றித் திரியாதே என்றாள்.

அது கேட்ட பகவான், இவள் வயது சாய்ந்த படுநீலி. பிள்ளையில்லாப் பெரும் பாவி. இவளுடன் இருந்து இல்வற தருமஞ் செய்கிறானே ஒரு பெரும் பாவி. அவன் இவளைக்காட்டிலும் அசேதனனாக வேண்டும். செந்நாயும், சிறுத்தையும் செறிந்து இருக்கும் வீட்டில் மனிதர்கள் மன வமைதியுடன் நிற்க முடியுமோ ? வென்று உறக்கக் கத்தினன். அது கேட்ட தாம்ஸேஷ்டி மிகவும் வாட்டத்தோடு வெகுண்டு புலி போற்சீறி, அடே துன்மார்க்கா ! துடுக்கான வார்த்தைகளைப் பேசுகின்றனை ? மட்டுமரியாதை யற்ற வார்த்தைகளைப் பொழிகின்றனை ? வேண்டாம். அப்பாற் போய்விடென

அதட்டி யுருட்டினர். அதற்குப் பகவான், அடா நரை திரை கொண்ட கிழவா? அக் கிழவிக்குத்தான் புத்தியில்லை என்று எண்ணினேன்; உனக்குமா புத்தியில்லை. இதுதானு நேயம்? இதுதானு ஜீவகாருண்ணியம்? உங்களையும் மனிதராகப் பிறப்பித்தானே அப் பிரமன்? பன்றியோடு சேர்ந்த கன்றும் மல முண்ணும் என்னும் பழமொழி பழுதாமோ? அந்தோ! என்ன விபரீதம். இப்பேர்ப் பட்ட பரம சண்டாளரின் பொருட்டாகவா அந்த மாதவ சாவுக் கார் என்னை அனுப்பி, இப்பொன்னைக் கொடுத்துதவச் சொன்னான். நல்லது நாம் இந்த அற்பர்களைக் கவனித்தல் தகாது. இராவணன் இராஜதானியில் விபீஷணன் பிறந்தமை போல இவ் வயோக்கிய ரிடம் நாமதேவன் வந்து பிறந்தானே. அவனைக் கண்டு சும்மா விருக்க நேரிட்டது. ஆபினும், இப் பாவிகள் முன்னிலையில் இந்த லக்ஷம் விராகனைத் தருவது மிகவும் அநீதம். நல்லவர்களுக்கு நாற் பதாயிரம் விராகன் கொடுத்தாலும் சரி அல்லது நாலு தம்பிடி கொடுத்தாலும் சரி நன்மை யுண்டு. வெளிக்கு மாத்திரம் பூச்சாண்டி வேஷம் போல் நாமத்தைப் போட்டுக்கொண்டு நிரக்ஷாகுக்ஷியாகி, அவன் அனுஷ்டான மற்றவன்; இவன் குலத்திலும், சீலத்திலும் தவறியவன் என்று பேசித் திரியும் அதம பிராமணனைப் போல் பக் தியும், ஜீவகாருண்ணியமு மற்றவர்களுக்கா நாம் உபகாரம் பண்ணு வேன். எனக்கென்ன ஜாதியாப் பிரதானம்? என் எஜமானன்,

"சண்டாள தேஹே பஶ்வாதி ஸ்தாவரே பிரம்ம விக்ரஹே
அன்யேஷு தாரதம்யேன ஸ்திதேஷு ததாம் யஹம்"

எனச் சண்டாளன்முதல் ஸர்வதேகங்களிலும் ஸமமாக இருப்பவ னென்றல்லவோதெரிவித்திருக்கின்றார். இத்தையற்காரனும், அவன் மனைவியும் தம்மைப் பிராமணர்க ளென்று மதித்து என்னை இழித் துப் பழித்துப் போகச் சொல்லினரே! இவர்கள்,

"நயோ நிர்ணுபி ஸம்ஸ்காரோ நசுருதம் நசஸந்ததி
காரணாநிது விஜத்வஸ்ய விருத்தமேவது காரணம்"

என்கிறபடி, பிராமணத் தன்மைக்குக் காரணம் புத்தி கெட்டப் பிராணர்கள் சொல்லும் காரணமல்லாக் காரணங்கள், காரணமாக மாட்டாது. பிராம்மண ஸ்திரீயினிடத்தில் பிறப்பதுங் காரணமாக மாட்டாது. உபனயனுதி ஸம்ஸ்காரணங்களுங் காரணமாக மாட்

டாது. வேதாத்யயனமும் காரணமாக மாட்டாது. பிராமண சந்ததியுமல்ல. காரணம் வேறேயா மென்பதையும், அது ஸத்தியம், தர்மம், பக்தி, ஞானம் இவைகளினடியாகவே உண்டாகிற தென்பதையும் அறியாத மூடர்கள். இவ்விரண்டு கிழக் குரங்குகளே அதற்கு உதாரணம். இனி இவர்களின் முன்னே நிற்றலே பாவமென நினைத்துத் தான் ஓட்டிவந்த வண்டியைத் திருப்பி யோட்டத் தொடங்கினர். அவ் வண்டி அசைந்து போகையில் பகவான் சில பொற்காசுகளைக் கீழே சிந்தும்படியாகச் செய்தார்.

அச் செல்வச் சிதறலைக்கண்ட விருத்தாப்பியர்கள் இருவரும் ஓடோடியுஞ் சென்று, அவ்வண்டியை அப்பாற் போக வொட்டா மற்றடுத்து, இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பிறருதவி கொண்டு சுகவாழ்க்கை அடையவேண்டுமே யன்றிப் பிறருதவியில்லாமல் வாழ முடியாது. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியவற்றையே செய்து பிறருக்கு உதவி செய்யாதிருந்தால், உலகமே நடைபெறாது. சேவகரே! நாங்கள் பசியின் கொடுமையாலும் வயதின் முதிர்ச்சியாலும் தரித்திரத்தின் மிகுதியாலும் ஒன்றுந் தோன்றாமல் ஏதேதோ பேசி விட்டோம். ஐயா! நீர் எங்களை மன்னித்துத் திரவியத்தைக் கொடுத்துப் போமெனப் பிரார்த்தித்தார்கள். அப்போது சாந்தமே திருவுருவங்கொண்ட ஸாதுவான எம்பெருமான், அந்த விருத்தாப்பியர்களை நோக்கி உங்கள் செல்வத்தைக் கொள்ளை கொண்டவர்கள் யாரோ? என, அதற்கவர்கள், எல்லாம் பாகவத ததியாராதனையாலே வற்றாத குளமும் வற்றிப்போயிற் றென்றனர். அதற்குச் சேவகர், வயோதிகரே! நீங்கள் பேராசையுள்ளவர்களென்பதை இப்போதுதான் அறிந்து கொண்டேன்.

“ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும் அவ்வாறு ஊற்றுப் பெருக்கால் உலகு” ஊட்டல் போல, பணம் வருவதற்கு வழியில்லாத காலத்திலும், மிகவும் தரித்திரத்தாலே வருந்தற்குரிய காலத்தும் மேன்மக்கள் பிறர்க்குபகாரஞ் செய்வதில் பின்னிடையவேமாட்டார்கள். இதன்றியும் சோழநாட்டிலுள்ள இளையான்குடி என்னும் ஊரில் மாறனர் என்னும் பெயரையுடைய மகா னொருவர் சிவபக்திச் செல்வராய்த் தமது இல்வாழ்க்கைத் துணையான மனைவியாரோடு இல்லறம் நடத்தி வருபவர் அன்னதானஞ் செய்து அடியாரைப் பூஜித்தலில் தமது பொருள் முழுவதையும் செலவிட்டுத் தரித்

திராகியும் வீடுவீடாகச் சென்று பெற்ற பொருளினைக் கொண்டு பெரியோரை ஆதரவுடன் ஆதரித்து வந்தனர். இவ்விதம் செய்து வருகையில், ஒருநாள் இரந்த விடத்திலும் ஏதும் அகப்படாமலி ருக்க, இந்நாள் அடியாரைப் பூஜிக்கப் பெற்றிலோமே' என்றிரங்கி மெலிந்து நலிந்து வீட்டிலேயே இருப்ப, அன்றிரவில் இறைவனே அவரது பக்தியின் மிகுதியை உலகிற்குக் காட்டவேண்டி என்னைப் போல் வராமல் ஒரு விருத்த வடிவங்கொண்டு மழையால் நனைந்து குளிரால் நடுங்கி அவருடைய இல்லத்தை அடைந்தபோது அம் மாறன் பெருமகிழ்ச்சியோடு அவரை உபசரித்து, 'அன்று விதைத்த விதை கொணர்ந்து உமி போக்கி அரிசியாக்கி அன்னஞ் சமைக்க, அம்மாறனாரும் அவர் தம் மனைவியாரும் வந்த அம்மாதவர்க்கு உண வளித்தலும், மானிடவுருக் கொடுவந்த அப்பெருமான் தமது திவ்ய ரூபத்தைக்காட்டி அவர்க்குத் தமது பதத்தையும் நல்வாழ்வையும் அளித்தனர் என்னும் சரிதத்தை நீங்கள் கேட்டதில்லையோ? நீங் கள் செய்யும் மரியாதைகள் எல்லாம் எனக்காகவா அல்லது இப் பண்டியில் போட்டிருக்கும் பணத்திற்காகவா? இதோ நிற்கும் ஜனங்களே சொல்லட்டும். தரித்திரம் வந்த காலத்தில் அல்லவோ தாழ்மையும் தைரியமும் சந்தோஷமும் இருத்தல் வேண்டும். அவை களை எவனொருவன் விடாமல் கைப்பற்றுகின்றானோ அவனே புருஷ சிகாமணி. அதுபோலவே தரித்திரத்தால் தயங்கித் தியங்கி மயங்கி மனந்தளர்ந்து தன் கணவன் நிற்குங் காலையில், அவன் இடத்தில் அளவுகடந்த பத்தியும், காவலில்லாத காலத்திலே கற்பைக்கண்ணை இமைகாத்தல் போன்ற காவலும், தன் கணவன் வறுமையால் தன் னைக் கடிந்த காலத்தில் சாந்தமும், விருந்தோம்புவதிலும் சாகஸமும் உள்ள பெண்டிர்களே யல்லவோ பதிவிருதைகளெனச் சொல்லலாம். இவ்வூராராகிய நீங்களெல்லாரும் இவர்களை மிகவும் தர்மிஷ்டர்க ளென வாய்கூசாமல் பேசுகின்றீர்களே எனச் சொல்லி மீண்டும் மாட்டை ஓட்டிக்கொண்டு செல்லத் தொடங்கினர். அப்போது வயோதிகர் இரண்டுபேரும் அச்சேவகரைப் பார்த்துத் தரித்திரக் கடலில் விழுந்து தபிக்கும் எங்களுக்குப் புத்தியும் தெளிவாக விருக் குமோ? நாங்கள் உம்மைச் சிறுமையாகப் பேசிய பேச்சுக்களை மறந்து விடும் என அநேகவிதமான மரியாதைகளைச் சொல்லினர். மாயாவிலாஸனாகிய மாதவன், பிரஜைகளே! இந்த விருத்தர்களின் மாயப்பேச்சைக் கேட்டீர்களா? இவர்களுக்கு வயது சாய்ந்தும்

பணவாசை சாய்ந்தொழிய வில்லையே. இவர்கள் முகத்தில் விழித்தாலே பாவம் சூழ்ந்து கொள்ளும். எனத் தன் சகடத்தைத் தட்டினார். உடனே வயோதிகரிருவரும் சேவகனை வாழ்த்தி அடிவணங்கிக் கரத்தைப் பிடித்துத் தம்மை வறுமைக் கடலிலிருந்து காப்பாற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டனர். அவ்வமயத்தில் சேவகனார். ஹே கிழப்பிணங்களே! பணமென்றால் பிணமும் வாய் திறக்கும் என்பதை உங்களிடம் பிரத்தியக்ஷமாக வறிந்தேன். பணத்தின்மேல் இச்சையுள்ள மகா பாவிகளுக்கு மானமேது? ஜீவகாருண்ணியமேது? பக்திவேது? நல்லோரேது? தெய்வமேது? அவர்களையே புண்ணிய மறியாத புல்லர் என்றும், எனப் பேசிக்கொண்டிருப்பர் பெரியோர்.

இதற்குள் தாம்ஸேஷ்டியார் தள்ளாதவராக விருந்தும் பணத்தின்மேல் ஆசை அதிகரித்தவராய் மெல்ல மெல்லத் தள்ளாடித் தடியை யூன்றிக்கொண்டு நிறுத்தியுள்ள சகடத்திற் பிணைக்கப்பட்டிருந்த விருஷபங்களை அவிழ்த்துத்தன் கொட்டகையிலேகொண்டு வந்து கட்டி, சேவகரே!

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்." என

அகில லோகங்களையும் வயிற்றினில் அடக்கி அளித்தருளும் அச்சுதனையும், அரக்கர் குலங்களையும், அடைக்கலம் புகுந்த மைந்நாக மலையையும், வடவானலத்தையும் ஆழியானது தன்னுள் அடக்கித் தாங்குகின்றதன்றோ? இதைச்சொல்லுவதேன். உலகசேவகன் ஆமையாகி அனைத்துலகங்களையும் அடியினின்று சுப்பதும், துருவன் எல்லாவற்றினுக்கும் மேல்நின்று ஒளிமண்டலங்கள் எல்லாவற்றையும் நிலை நிறுத்துவதும் பரோபகாரமன்றோ? என்று புகழ்ந்தார். அதைக் கேட்கும் சேவகன் அடங்காக் கோபத்தால் மிகவும் பேசத் தொடங்கினார். தாம் ஸேஷ்டியார், சேவகரே! என்னையும் எனது மனைவியையும் வீணாகவையாதே. மனம் நோவச் செய்யாதேயுமெனக் கடிந்து, நீர் சேவகர்தானே. மாதவச் சாவுகார் எந்தவூர்? எப்படி என்னருமை மைந்தனாகிய நாமதேவருக்கு நண்பராக வேண்டும்? எத்தனைப் பை கொடுத்தாரென்று கேட்டகவும், அதற்குச் சேவகன், அந்த சாவுகாரரின் வாஸஸ்தானம் வைகுந்தபுரம். உமது புத்திரனான நாமதேவன், சிறு குழந்தையிலிருந்து நன்றாகத் தெரி

யும். அவர் அனுப்பிய ஒவ்வொரு பையிலும் பப்பத்து ஆயிரம் விராகன் இருக்கும். இனி உம்முடன் இங்கே பேசிக்கொண்டு இருந்தேனுயின், என் எஜமானன் என்னைக் கோபித்துக் கொள்ளவுங் கூடுமாகையால், நான் நாமதேவரிடம் நேராகப் பேசிவிட்டுச் செல்லுகிறேனென்று சொல்லிவிட்டு மறைந்து விட்டார்.

தாம் ஸேஷ்டியார் அம்மூட்டைகள் ஒவ்வொன்றையும் கீழே கொட்டி எண்ணிப் பார்த்துச் சேவகன் சொன்ன பிரகாரம் இருக்க மிகவும் ஆனந்த மடைந்து தன் மனையாட்டியோடு பேசி வீட்டிற்கு வேண்டிய சாமான்களை யெல்லாம் வாங்கிக்கொண்டு வந்து, இராஜாம்பாளை அழைத்து, திவ்வியமான அணியாடைகளை அணியச் செய்வித்து, உடனே அறுசுவையுண்டியோடு கூடிய நைவேத்தியத்தைக் கொடுத்து அனுப்பினர். இராஜாம்பாள் இந்திராணியைப் போல மிகவும் பிரகாசத்துடனே கையில் நைவேத்தியத்தோடு ஆலயத்துள்ளே செல்லவும், அங்கே பகவத்தியானத்தால் கணவர் ஆடிப்பாடித் தன்னை மறந்து கிடப்பதைத் தெரிந்த இராஜாம்பாள் அவரது திருவடிகளில்நமஸ்கரித்துநிற்க, அவளதுபுதிய உருவத்தைக் கண்ட நாமதேவன், அடிபெண்ணே இவ்வகையவைபவம் உண்டானதற்குக் காரணமென்னையோ? வெனக் கேட்க, இராஜாபாய், சுவாமி! தேவரீர் பால்லியத்திலிருந்து உமக்கு நல்ல நண்பராயும், வைகுந்தபுரவாஸியும், மாதவசாவுகாரர் என்னும் பெயருடையவராயுமுள்ளவர் ஒருவண்டியில் பத்து மூட்டைகள் பொன் நாணயத்தைப் பொட்டுச் சேவகனுடன் அனுப்பினராம். அச்சேவகர் தேவரைக்காணும் வண்ணம் வெகு நேரங் காத்திருந்தும் தேவரீர் வராமையால் மனம் நொந்து போயின ரென்ருள். அது கேட்ட நாமதேவர் இதெல்லாம் எம்பெருமான் செயலே என்று சொல்லிவிட்டு ஒன்றுந் தோன்ருமல் கொஞ்சநேரம் வரையில் பகவானைத் தியானித்தும்பின்னர் தன் மனைவியின்கையில் இருந்தநைவேத்தியத் தட்டை வாங்கிக்கொண்டு, நல்லுடை யணிந்து பண்டரிநாதன் திருக்கோவிலுள்ளே சென்று, அங்கே செய்யவேண்டிய பூஜைகளைச் செய்து நைவேத்தியத்தை வைத்துண்ணும்படி இருக்கையில், எம்பெருமான் ஒன்றுந் தெரியாதவர்போல், இன்று நைவேத்தியம் வெகு நேத்தியாக விருப்பதேன்? என்ன? நாமதேவ் ஹே பராத்பரனே! உனது பெருமையைவிட்டு எளியனுகிய என்னைப் பெருமைப்படுத்தச் சேவ

கவேஷமுந் தரித்து வந்தாயோ ? வென்று கண்ணீரைத் தாரைதா ரையாகப் பெருக்கி,

சுந்தர மிருந்த வினதாகமே யென்விழித்
துணை நோக்கவா யுன்னையே
சொல்லநின் காதையே செவிவினவ
நின்பதத் துளபமே நாசிமுகர
மந்தராசல மேந்தி யின்பமுட
னன்பரெனு வானவர்க் கமுதமீந்த
மாயனே கரிவரதராயனே செம்பவள
வாயனே வர மருளுவாய்
இந்திராதி சுரமகுடரஞ்சித பதாம்போஜ
இக்ஷ்வாகு குல நந்தனு
ஈஸலோகேஸ கந்தர்வ சாரணகின்ன
ரேமா ஸம்பூஜ்ய ராம
சந்த்ரமுக சுக்த்ரரவி வம்ஸபாராவார
சந்த்ர தாஸாநு கூலா
ஸரணுகத த்ராணபா ராயணும்போஜ
சரண கருணு பரணனே ''

என்று துதிசெய்தவளவிலே எம்பெருமான் எதிரிலே தோன்றி நாம தேவரே ! நீர் எனக்குத் தினந்தினம் நைவேத்திபப்பணிசெய்து வருகின்றீரே அதற்கு நான் சம்பளம் தரவேண்டிய தில்லையா ? ஒருவர் செய்த கூலியை வைத்துக்கொண்டால் பாவம் வந்து சேருவது மல்லாமல் பின்னர் துன்பத்தாங் தடிக்கவும் நேரிடுமே ! இது வரையில் நீர் செய்து வந்த கைங்கரியத்தை மறந்து நான் சும்மா யிருந்தது எனது பிசகே அல்லாமல் வேறில்லை. அதன் காரணமாக என்மேல் கோபங் கொள்ளாமல் இனி உமக்குச் சேர வேண்டிய தொகையை ஒருக் கணமேனும் விட்டு வைக்காமல் அப்பொழு தப்பொழுதே பெற்றுக்கொள்ளும். இவ் வுலக வாழ்க்கை யெல்லாம் திரவிய மில்லாவிடில் நடைபெருதென்பதை யான் நன்ருக அறிந்த பெரிய ஸம்ஸாரியே. என்னுடைய ஸம்ஸார பாரத்தைத் தாங்க ஆதிசேடனும் வல்லவனுடையனன்று. நான் என்னைச் சேர்ந்த ஸம்ஸாரிகளைக் கை நழுவ விடுவதே இல்லை. ஆனுல் என்னைச் சேர்ந்த ஸம்ஸாரிகளுக்குப் பசி, தாகம், தாரித்திரம் இவைகள் துன்பந் தா மாட்டாது.

இந்த வுண்மை அறிவதுதான் மகா துர்லபம். நீ இவைகளை அறிந்து என் பக்தர்களைத் தெரிந்து அனவரதமும் ஆலயத்துள்ளே இல்லாமல், இரவை வீட்டிலும், பகலைக் கோயி லுள்ளேயுங் கழிப்பாயாகவென்று சொல்லி மறைந்தருளினர். இந்த பாகவோத்தமரின் வைபவங்களை நாபாஜியார் சொல்லக் கேட் டுணர்ந்த சித்தர்கள், மீண்டும் கரங் குவித்து நிற்க, நாபாஜி சித்தர் மேல் நடந்தவைகளையும் விடாமல் சொல்லத் தொடங்கினர்.

பகவான் பணியாளராக வருதல்

" பகிரதி சுதன்மேற் றிகிரியை விடுத்துப்
பகதத்த னெறிபடை யேற்று
நிகரிலாச் சுதாயுவிடு கதைவிலக்கி
நேமிகொண் டிரவியை மறைத்தே
இகல்புரி கன்னன் றொடுபணி பழுதா
யேகவே யிரதத்தட் டமுத்தி
மகபதி சிறுவர்க் குதவிசெய் திருமால்
திருப்பணி செய்தமை விரிப்பாம்."

நிர்மல புத்தியுடைய நிமலர்களே! இவ்வண்ணம் தன் அடியார் திறத்திலே எத்தொழிலையும் புரியும் எம்பெருமான் நாமதேவருக்கு அளவு கடந்த ஐசுவரியங்களைக் கொடுத்துப்போக, அது கண்ட நாமதேவர் ஆனந்தங்கொண்டு இனிப் பகவான் அடியார்களுக்கு அன்னமிட்டு அகமகிழ்வதே அருந்தொண்டென வுன்னி, அந்தணர்கள் சாதுக்கள் பாகவதர்கள் முதலியோர்களுக்கு வேண்டுவென கொடுத்து நல்வழியிலே செலவு செய்யாத லோபிகளைப் பழித்து, தன் வீட்டையும் விற்றுச் சமதமமுபரதி சந்தோஷத்தைச் சார்ந்து, முன்போலவே ஆலயத்துள்ளே பிரவேசித்து ஸ்ரீமந்நாராயணனுடைய நித்திய மங்கள குணங்களையும், ஸர்வலோகாதார நிலைகளையும், பரமபதத்திலேற்றுகின்ற உபாயங்களையும் வாயாரச் சொல்லி, அனலிலிட்ட மெழுகுபோல் உள்ளங்கரைந்து, கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரிந்து, ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருந்தார். அந்நாமதேவரின்

அகத்தெழுந்த பக்திப் பிரவாகத்தைக்கண்ட சேவகார்த்திகளெல்லாம், இவர் பண்டரீநாதன் புகழைப் பரப்பவந்த பரமபாகவதனோ அல்லது, அப்பண்டரீநாதனே இவ்வந்தணவுருவத்துடனே அகிலத்திலே வந்து அஞ்ஞானிகளின் மனதைத் திருத்திபாட்கொள்ள வந்தனனோ வென்று கொண்டாடினார்கள். வேறு சிலர் இந்நாமதேவர் முன்னம் பாகவ தோத்தமர்களுக்குத் ததியாராதன கைங்கரியமே ஸர்வசிலாக்கியமான தென்று நாளுஞ்செய்து எம்பெருமான் அநுக்கிரகம் பெற்று மனமுருகி யுருகி எம்பெருமான் ஸேவை ஸாதித்தருளிய அழகிய திருமேனியை இனி எங்கே காண்பது என்று எண்ணி எண்ணி ஏக்கங்கொண்டு கைங்கரியங்களில் குறைவு வாராமல் நடத்திக்கொண்டு வேதார்த்தங்களை அமைத்து,

“வாடினேன்வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயரிடும்பையிற் பிறந்து
கூடினேன்கூடி இளையவர்தம் மோடு
அவர்தருங்கல்வியே கருதி
ஓடினேன்ஓடி உய்வதோர் பொருளால்வுணர்வெனும்
பெரும்பதந் தெரிந்து
நாடினேன்நாடி நான் கண்டுகொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்”

என்றுந் தொடங்கியவரேபோல இவரும் இப்பாண்டுரங்கன் சேவை கண்டு பொழுதைக் கழிக்கின்றார்போலு மென்றதிசய மடைந்தார்கள்.

இவ்விதம் தன்னை மறந்து தியானத்தில் துளைந்து கிடக்கும் நாமதேவரைச் சோதிக்க வேண்டி பண்டரீ நான் ஒரு விருத்த சூத்திரராய் முந்நூலின்றிப் புண்டரந் தரித்துக்கொண்டு நாமதேவரின் எதிரிலே வந்து நின்றார். அப்பாகவதரைக்கண்ட நாமதேவர் அடியற்ற மரம்போல் அவரிணையடியிலே விழுந்து நமஸ்கரித்தார். அது கண்ட சில பிராம்மணர்கள், நாமதேவரே! நீர் நல்ல பக்திமார்க்கத்தை அனுசரித்துவரேயன்றித் தர்மானுஷ்டானந் தெரியாதவரென்று அறிந்து கொண்டோம்என இழிவாகப் பேசினர். அதற்கு நாமதேவர், சுவாமிகாள்! நீங்கள் ஸர்வசாஸ்திர பண்டிதர்களாக விருந்தும் மூர்க்கத்தன்மை வைத்துக்கொண்டே பேசுகின்றீர்களே யல்லாமல் வேறில்லை. தேஜோபித்து உபநிஷத்தில் ஸர்வ பூதங்களி

லிருக்கும் ஆத்மாவிற்குச் சாதிபேதமில்லை. சாதியென்பது விபவ கார சாதாரணத்திற்குக் கற்பிக்கப்பட்டதேயன்றி வேறில்லை. இன்னும் மகாபாரதத்தில் அங்கியஜாதியில் இருப்பவர்களும், மோக்ஷத்தையடையலா மென்று சொல்லி, முக்தர்களானவர்களின் பெயர்களை வித்தியாஸ மில்லாமல் ஸமரஸமாகச் சொல்லப்பட்டதை நீங்கள் அறியீர்களா? முன்னம் ஜைகீஷ னென்னும் பிராம்மணனும், அப்படியே அஸிதாதியரும், ஜனகர் முதலான க்ஷத்திரியர்களும் துலாதாரி முதலான வைசியர்களும், தர்ம்வியாதர் முதலான ஏழு சூத்திரர்களும், ஸ்திரீகளில் மைத்ரேயி, சுலபா, சார்ங்கீ, சாண்டிலீ தயஸ்விநீ முதலிய பெண்களும், இவ்வாறே கடைசாதியாரான பலர் உயர்ஞான நிஷ்டையை அடைந்து முத்தரானார்களென்பது மூவுவ கறியுமே. இஃதல்லாமல் மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லியபடி,

“ருஷ்யர்ருங்கோ மிருகாஜ்ஜாத கௌசிகோ காதிரந்தந
ஜம்புகோ ஜம்புகோத்பத்தி கௌதமோ கௌத ஸம்பவ
வால்மீகோ வல்மிகோத்பத்தி அகஸ்திய கும்பஸம்பவ
வியாஸோ லுப்த கன்யஸம்பூதோ வஸிஷ்டோ ஊர்வசீஸுத
நாரதோ ரஜகீபுத்ரோ கௌண்டிந் யோமுண்டிகீஸுத
மதங்கஸ்ய மதங்கஸ்யாத் மாண்டவ்யோ மண்டூகீஸுத
ஸாங்கியா ஸஸ்பாஸம்பூதோ கார்கேயோ கார்தபீஸுத
ஶுநகீகர்ப்பஸம்பூதோ சௌனகாதி மஹர்ஷய:”

என்றல்லவோ அவதரித்தார்கள். இவர்களெல்லோரும் பரமதபோதனர்களே. பரமபாகவதர்களே, இங்ஙனம் இருக்கையில் ஜாதிபேதம் தேகஸம்பந்தமாய் எவ்வாறிருக்கும். இருக்கவேமாட்டாது. சுவாமிகளே! அடியேன் விண்ணப்பத்தைச் செவி சாய்த்தருளுதல் வேண்டுமெனப் பிரார்த்தித்து,

“ஜன்மநா ஜாயதே ஜந்து ஸம்ஸ்காராத் துவிஜ உச்யதே
வேதபாராயணே விப்ரோ பிரஹ்மஞானேது பிராஹ்மண.”

ஜன்மத்தினால் எல்லோரும் ஜந்துஸமானர்களே. ஆனால், ஸம்ஸ்காரத்தினால் துவிஜர்களெனப் படுகின்றார்கள். வேதபாராயணத்தினால் பிராம்மணத்தன்மை யுண்டாகும். பிரம்மஞான முண்டாகும் பொழுதுதான் பிராம்மணனென்று சொல்லுவதற்குத் தகுந்தவனாவான் எனவும்,

"ஞான விக்ஞான ஸம்பன்ன ஸமஸ்கிருதோவேதபாரக
விப்ரோ பவதி தர்மாத்மா க்ஷத்திரிய சுகர்மணு."

என மனிதப் பிறவியிற் பிறந்தவர்களில் யாவனுயினும்சரி, ஞான விஞ்ஞானங்களோடு கூடினவனும் மலின குணங்களை விட்டவனும் வேதத்தின் முடிவைக் கண்டவன் எவனே, அவனே பிராமணனன்றோ? அன்றியும்,

"அஹம்பிரஹ்மேதி மாம்திபாபே தேகாக்ரம்மனஸாகிருதம்
ஸர்வம்தாதி பாப்மாநம் கல்பகோடி மதை: கிருதம்"

எனப் பகவான், தன்னுடைய மனத்தை ஒருமைப்படுத்திப் பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனைத் தனது ஆத்மாவாகத்தியானிப்பானே, அவன் நூறு கற்பகோடிகளிற் செய்த பாபமனைத்தையும் போக்கடித்து மோக்ஷமடையத்தக்க வனுகின்றனென்னும் வாக்கியாதிகளை விடுத்துப் பேசுகின்றீர்களே என விளம்பவும், அந்தப் பிராம்மணர்களெல்லாம் ஒன்றுந் தோன்றுதவர்களாய், நாமதேவரே! எங்களை மன்னிக்கவேண்டுகின்றோம். நீர் அடியார் பக்தியோடு பகவத் பக்தியுமுடையவரென்பதை அறிந்தோமெனச் சொல்லி அப்புறம் போயினர். அப்பால் வந்த பாகவதர் திடீரென்று மறைந்துபோக, நாமதேவர் இதுவும் எம்பெருமான் திருவிளையாடலென்றே மகிழ்ந்து முன்போலவே எம்பெருமானைத் தோத்திரஞ்செய்து கொண்டிருந்தார்.

இங்ஙனம் நாமதேவர் தமது வாழ்நாளை ஆலயத்தில் ஆழ்ந்த பக்தியிலே கழித்துவருகையில்,

"தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர்
வடவைசாற்று மெண்ணங்கள்வா ழிடமாந்
தரித்திரம் பற்பறுக்கமுந் தோன்றத்
தக்கபேராகர மென்ப
தரித்திர நன்மை சாலொழுந்
தென்னுந்தழைவனந் தனக்கழறழலாந்
தரித்திரங் கொடிய வெவற்றினுங்
கொடிதத்தகையதை யொழித்தனன்றுமே"

என ஸர்வவிதமான ஆனந்தங்களையும் அழிந்துவிடும் தன்மை வாய்ந்த தரித்திரத்தாலே தயங்கித் தியங்கி வாடும்படியான காலம் மீண்

டும் வந்து கிட்டலாயிற்றேயெனச் சிந்தனைகொண்டவர்களான இராஜாபாயும் தாய்தந்தையும் தையல் வேலையால் பகவானுக்கு நைவேத்தியத்தை நிறுத்தாமல் அனுப்பிக்கொண்டு வந்தார்கள். இவர்கள் இவ்வாறு மனக்கஷ்டப்படுவதை நாமதேவர் மனதிலே சிந்திப்பதே கிடையாது. நாமதேவர் தான் குடியிருந்த வீட்டையும் அயலாருக்கு விற்றபடியால், அவர்கள் தங்கியிருப்பதற்கும் இடமில்லாதவர்களாய்த் தத்தளித்தனர். இவ்விதம் அவஸ்தைப்படுவதைக் கண்ட விருத்தாப்பியர்கள் இருவரும் தாங்கள் வசிப்பதற்கென ஒருபந்தல் போட்டுக்கொண்டு அதிலே வசித்துவந்தார்கள். அப்பந்தலோ பரமபக்தரான குசேலர் ஆடைபோலும் அழகாகவிருந்தது. பகலவன் அந்தோ நம்மை ரக்ஷிக்குந் தலைவனாகிய எம்பெருமான் அடியார்களாயிற்றேயெனத் தன் கிரணங்களை உள்ளே அதிகமாகப் புகவிடாமல் அடக்கிக்கொண்டே காய்வான். இங்ஙனம் இராஜாபாயும் தாம்ஸேஷ்டியும் குணாபாயும் அக்குடிசையில் வசித்துவரும் நாளையில், இராஜாபாய் கர்ப்பவதியாய் நல்ல சுபஹோரையிலே ஒரு ஆண்மகவைப் பெற்றாள். அக்குழந்தையோ அழகில் மன்மதனைத் தோற்கச் செய்தது. இப்படியிருக்கையில் எண்டிசையோர் ஏத்தும் பண்டரிநாதன் நாமதேவரின் முன்னே தோன்றி, நாமதேவ் உனக்கு ஒப்பில்லாத புத்திரபாக்கியமுண்டாயிற்றாமே; அதுகேட்ட என்மனம் பூரித்தது. நீ இங்கே இருப்பது தர்மமல்ல; உன்வீடு சென்று பிராமணர்கள் செய்யவேண்டிய காரியங்களைப் பின்னமில்லாமற் செய்வாயாகவென்று நியமித்தனர். கடவுளின் நியமனம்பெற்ற நாமதேவர் உடனே ஆலயத்திலிருந்து வீட்டிற்கு வந்து குழந்தையைக் கண்டானந்தமடைந்து மீண்டும் கோயிலை நோக்கித் திரும்பினார். அப்போது குணாபாய், என்னருமை மைந்தனே! உனக்கு அருமையாகிய மைந்தன் பிறந்தானே. இன்றைக்காவது இங்கே இருத்தலாகாதாவென்றனள். நாமதேவர் தன்தாய் தந்தையர்களின் வார்த்தை மறுத்துரையாவண்ணம் அன்று பந்தலின் ஒருபுறத்தே சயனித்துக் கொண்டார். அப்போது வானத்தில் திடீரென மேகபடலமெழுந்து பொழியத் தலைப்பட்டன. பந்தலோ ஸகஸ்ர பொத்தல்களினாலே போடப்பட்டிருந்தமையால் மழைத்துளிகள் மல்லிகை மலர்போல் எங்கும் விழத்தொடங்கியது. இராஜாபாய் தன்னிளங் குழந்தையுடனே நிற்கவுமிடமில்லாமல் ஏங்கித் தவித்தாள். வயது சென்ற தாம்ஸேஷ்டியாரும் குணாபாயும்

குளிரால் அவதிப்பட்டு மூலையில் தமது தேகத்தை ஒடுக்கிக்கொண்டிருந்தனர். அப்போது தாம்ஸேஷ்டியார் நாமதேவை நோக்கி, அப்பா குழந்தாய்! பின்னுக்கு வேண்டுமென்று ஆலோசியாமல் பகவான் கொடுத்தவற்றில் ஒருகாசும் வையாமல் செலவுசெய்து விட்டனை? அன்றி, இருக்க நிழலுமில்லாமல் வீட்டையும் விற்றுவிட்டனை. இப்போது நமது பிழைப்போ நடுத்தெருவில் வந்துவிட்டது. சம்மந்தியாரிடம் போவோமெனில், அவமானமாகவிருக்கின்றது. ஆகையால். நீ யாரையாவது அழைத்துக் கூலிகொடுத்துப் பந்தலையாயினும் சரிவரப்போடச் செய்யலாகாதாவென, நாமதேவர் மனம் புண்படும்படியாகத் தாம்ஸேஷ்டியார் சொல்லினர். நாமதேவர் அதற்கும் வாய் திறவாமலிருக்க, தாம்ஸேஷ்டியார், அப்பா நாமதேவ்! உனது மனோதைரியத்தை என்னவென்று புகலுவேன். பின்னுக்கென்று ஒரு தம்பிடியும் பிடித்து வையாமற் போய்விட்டாய். நல்ல மழைவந்தால் இளங்குழந்தையும் தாயும் அவதிப்படுவதன்றி எங்கள் கதியும் அப்பண்டரீநாதனே அறியவேண்டுமென்றனர். தந்தையாரின் வார்த்தைக் கேட்ட நாமதேவர், இந்த நள்ளிரவில் மூன்று கால்களால் நின்றுகொண்டிருக்கும் இந்தப் பந்தலை நான் எவரைக்கொண்டு கட்டவல்லேன், கூலியாளை வைத்துக்கட்டுவோமென்றால், அதற்கும் என்கையில் பணமில்லையே என்று மனக்கவலையோடு, தாயை நோக்கி, அம்மணீ! தேவரீர் என்னை இப்பரிபவத்திற்குட்படுத்தவோ இங்கே தங்கியிருக்கும்படி கட்டளையிட்டீர் என்றான்.

தன்மகன் சொற்கேட்ட குணபாய், அப்பா மகனே! நாங்கள் உன்னை எவ்வளவு பரிந்து காப்பாற்றினோமோ அதுபோல் நீயும் உன் மகனைப்பாதுகாக்க வேண்டாமோவென்று சொல்ல, நாமதேவர், தாயே உமது வார்த்தை மிகவும் அழகாகவிருக்கின்றது. எல்லாரையும் காக்க பகவான் துணையாகவிருக்க, ஒருவரை ஒருவர் காப்பதென்னும் உமது வார்த்தை விந்தையினும் விந்தையே. ஈயெறும்பு முதலானவைகளுக்கு சுகதுக்கங்களை அறிந்துகொடுப்பவன்எம்பெருமானன்றோ? அப்படியிருக்க, அவனால் சிருஷ்டித்துள்ள உயிர்களுள் இக்குழந்தை அதீதப்பட்டதோ? இனி நீ இவ்விதமான விசாரத்தை வையாதே என்று சொல்லி, இரவின் அதீதகாலத்தை நோக்கி ஒருபக்கத்திலே படுத்து நித்திரைபுரியத் தொடங்கினர். ஆயினும், நாமதேவரின் மனம் ஒரு நிலைப்படாமல் தூக்கம பிடிக்கவில்லை.

இங்ஙனமிருக்கையில் காற்றும் மழையும் கலந்து பலமாக அடிக்கத் தொடங்கியது. இராஜாபாய் இளங்குழந்தையுடனே நிற்கவுமிடமில்லாமல் அவதிப்படுவதைக் கண்ட மாமியும் மாமனும் காற்று வீசும் திக்கு நோக்கி, படலை எடுத்துப் பிடித்துக்கொண்டு குழந்தையினையும் தாயினையும் காப்பாற்றினார்கள். மழையோ மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே யிருந்தது. அதுகண்டவர்களான குரவர்களிருவரும் கண்களில் நீரைத் தாரை தாரையாய்ப் பெருக்கிக் கொண்டு, ஹே பாண்டுரங்கா! இதுவும் உன்னுடைய சோதனையோ! வயோதிகர்களான நாங்களிருவரும் இந்தச் சிசுவையும் தாயையும் எவ்விதம் காத்துரக்ஷிப்போம். இன்று எங்கள் குடும்பத்தை தேவரே பாதுகாத்தருளுதல் வேண்டுமெனப் பணிந்து துயில் கொண்டனர்.

அப்போது யானையின் இடர்தீர்த்த எம்பிரான் தானே ஒரு எளிய கூலியாளாகக் கையில் ஒரு பந்தர்காலையும், ஒரு சும்மைப் புல்லையும், கட்டுவதற்கு நாரையும் கத்தையாய்ச் சுமந்து கொண்டு, சம்பங்கூடை வேய்ந்துகொண்டு, மிகவும் ஆதுரத்து புறப்பட்டு வந்து, ஓ நாமதேவரே! ஓ நாமதேவரே என்று பலதடவை மிகவும் உரத்த குரலுடனே கூப்பிடத் தொடங்கினர். அப்போது நாமதேவர் பகவத்தியானத்தி லிருந்தமையால், இதென்ன மிகுந்த தொல்லையாக விருக்கின்றது. நல்லவை செய்ய நாற்பதினாயிரம் தொல்லை; அல்லவை செய்ய அருகிடுவாரே கிடையாதென்பதுபோலக் கர்த்தன் பக்திக்குக் கணக்கில்லாத் தொல்லை வந்துகொண்டே இருக்கின்றது. அந்தோ எனது தந்தையும் தாயும் இவ்வளவு நேரம்வரையில் என்னவோ பேசிக்கொண்டிருந்து இப்போது தான் சற்று நித்திரை போனார்கள். இச் சமயத்தில் எவனோவந்து தொந்தரை செய்கின்றானென்று பிரதியுத்தரஞ் சொல்லாமல் பகவத்தியானஞ் செய்து கொண்டிருந்தார்.

அப்போது பண்டரீநாதன் நாமதேவரின் முன்னேபோய் என்னே உனது பெருமிதம், என்னே உனது தயையற்ற மனம், நான் இவ்விரவில் பலதரம் கூப்பிட்டும் வாயைத் திறவாமல் இருக்கின்றாய். உனக்குச் சம்சாரமேன்? உனக்குப் பூததயை இருந்தால் நீ இப்படிக் கொஞ்சமேனும் மனதில் கஷ்டம் வையாமல் குழந்தையும் தாயும் மழையால் நனைந்து மல்லாடிக்கொண்டிருக்கப் பார்ப்பாயா?

நீ பரமசண்டாளன். உன்னைக் காட்டிலும் லக்ஷக்கணக்கான பண த்தை வைத்துக்கொண் டிருக்கிறானே உனது மாமன். அவன்தான் தன்வயிற்றில் பிறந்தபெண் அவதிப்படுகின்றனளே என்று நினைத்து இப்பந்தலுக்கு ஒருகாலைக் கொடுத்துதவலாகாதா? வெகு நேர்மை. நான் ஏழையாகவும் பக்கத்து வீட்டுக்காரகவும் இருப்பதாலும், ஜீவ காருண்ணியத்தில் மேலான தொன்றில்லை என்று என் மனதிற் றேன்றினமையாலும் இப்பந்தலைச் சீர்திருத்த ஒரு காலும் ஒரு சுமைப்புல்லும் கொண்டுவந்தேன். நான் உன்னைத் துணை வேண்டி யழைத்தால் நீ சிறிதும் கவலை வையாமல் கண் திறந்து கொண்டே தூங்குகின்றனை. உன்னைப்போன்ற சோம்பேறிகளை இதுவரையில் நான் பார்த்ததே இல்லையெனச் சொல்லிக் கொண்டே முக்கால் பந் தலை அவன்மேல் விழும்படியாகத் தள்ளினன். பந்தல் மௌனவிர தங் கொண்டிருந்த தன்மேல் விழவும், நாமதேவர் கீழே அகப்பட் டுப் பரிதபித்து, அவளை வாயில் வந்தபடிதிட்ட, அவன் நான் ஒரு வனுகையால் தாங்கிக்கட்ட முடியவில்லையென மொழிய,நாம தேவ், அப்படியாயின் வேறொருகூலியாளைக் கொண்டு வரலாகாதோ வென, கூலியாள் வந்தால் என்னிடம் பணமில்லையேஎன, நாமதேவ் உம்மையார் இவ்விதம் இந்நள்ளிரவில்வந்து கஷ்டமெடுத்துக்கொள் ளச் சொன்னதென, கூலியாள், நான் உன்தாய் தந்தையர் இட்ட சோற்றால் வளர்ந்தவனுகையாலேதான் வலிய வந்தேனென்று காலை நாட்டிப் பந்தலைப் போட்டனர். பின்பு நாமதேவரை அழைத்து இப்போது பந்தலின் அமைப்பு எவ்வண்ண மிருக்கின்றது பார்த் தாயா? இனி ஒருவரும் இதனுள்ளிருந்து வெளிப்பட முடியுமா? பார்த்தாயா நாமதேவ். போதும், போதும், மூடாத்துமாக்களான உங்களோடு இவ்விரவெல்லாம் தூக்கத்தைவிட்டு வேலை செய்தது. இவை யெல்லாம் ஜீவகாருண்ணியத்தை நினைத்துச் செய்ததே யல் லாமல் வேறில்லை. நான் தேகம் விபர்க்க இந்நேரம் வேலை செய் தமைக்குக் கூலியைக் கௌரவமாய்க் கொடுத்துவிடு. இல்லாவிடில் வீண் மனஸ்பத்திற்கு இடம் வைத்துக் கொள்ளாதேஎன, நாம தேவ் உன்னையார் அழைத்தார்கள். என் கையில் அரைக்காசுமில்லை யென, கூலியாள் இப்போது சேமப்பட்டது உன்சம்ஸாரமா? என் ஸம்ஸாரமாவென, கூலியாள் பணங்கொடாவிடில் நீ காணவே இத னைக் கொளுத்திப் போடுவேனென்று கத்த, அதற்கு நாமதேவர் வாய் திறவாமலிருக்க, இராஜாபாய்த் தன் கணவரை நோக்கி, வேலை

செய்தவனுக்குக் கூலியில்லை என்று அவனுடனே வாதாடி நிற்பதுந் தர்மமோ வென்று சொல்லி, தன் மாமன் மாமியாரைத் தூக்கத்திலிருந்து எழுப்பி இக்கணமே வெளிப்படுதல் வேண்டுமென்று நடந்தவைகளை அவர்களோடு சொல்லினள்.

உடனே தாம்ஸேஷ்யார் இறுகப் பிணித்துள்ள அப்பந்தலினின்று வெளிப்போக ஒரு புறம் தட்டியை அவிழ்க்க முயன்றார். பந்தல் கெட்டியாக முடிபிட்டிருந்தமையால் அவிழ்க்க முடியாமற் போயிற்று. நாமஸேஷ்டியார் மனக்கிலேச மடைந்து ஓ வென்று கத்த வாரம்பித்தார். அந்தக் கூக்குரலைக் கேட்டு அக்கம் பக்கத்தார் வந்து சூழ்ந்து கொண்டு அவர்களுக்குப் பலவிதமான தைரியஞ் சொல்லி, நீங்கள் பயப்படல் வேண்டாம். இன்னும் சூரிய உதயமாக ஐந்து நாழிகை தானிருக்கின்றது. அதுவரையில் நாங்கள் காத்து ஒப்பிக்கின்றோம். நெருப்பிடுபவனைப் பார்க்கின்றோமென நவின்று, பந்தலின் ஒரு புறத்தை அவிழ்த்து விட்டனர். அப்போது நாமதேவர் சள்ளை யொழிந்ததென்று நினைத்து நாற்புறமுஞ் சுற்றிப் பார்த்து ஜனகர் பட்டணம் எரிந்தால் நமக்கென்ன என்று சொல்லியது போலச் சொல்லிச் சந்திரபாகா நதிக்கு ஸ்நானஞ் செய்யச் சென்று, அங்கே நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பண்டரீநாதன் ஆலயத்திற்குப்போய் முன்போலவே பகவத்தியானத்தி லாழ்ந்திருந்தனர்.

இதற்குள் ஆதித்தன் ஆழ்கடலிலிருந்து கீழைத்திசையில் உதயமாயினன். தாம்ஸேஷ்டியார் எழுந்து பந்தலின் அமைப்பை நன்றாகப் பார்க்கையில், ஒருகாலும் புல்லும் பொன்மயமாக இருப்பது கண்டு இதுவும் பண்டரீநாதன் திருக்கூத்தேயென்று நினைத்து, அந்தப்புல்லில் சிலவற்றை எடுத்துக்கடைத் தெருவிற்கொண்டு விக்கிரயஞ்செய்து வேண்டுவனவாகிய பண்டங்களை வாங்கி வந்தது மல்லாமல், அவ்வூரிலுள்ளதொரு உன்னதமான மாளிகையினைக் குடிகூலிக்கு வைத்துக்கொண்டார். பிறகு தினம்போலப் பண்டரீநாதனுக்குப் பலவகையான பதார்த்தங்களோடு நைவேத்தியத்தைத் தன் மருமகளான இராஜாபாயினிடம் கொடுத்தனுப்பினர். இராஜாபாய் ஸர்வாபரண பூஷிதையாய் நைவேத்தியத்தட்டுடன் வரக் கண்ட நாமதேவர் வெகு ஆனந்தங்கொண்டு, அந்த நைவேத்தியத் தட்டை வாங்கிக்கொண்டு, பெண்ணே! இன்று நீ இவ்வளவு பெரு

மையோடு வந்ததின் காரணந்தானென்னையோ வென்று வினவ, அவள் விருத்தாந்தத்தை எடுத்தியம்ப, எல்லாம் பண்டரீ நாதன் செயலென எண்ணி நைவேத்தியத்தைப் பகவானிடங்கொண்டு ஸமர்ப்பிக்க, பகவான், நாமதேவ்! இதென்ன வைபவத்துடனே நைவேத்தியம் வந்துள்ளதே என்று கேட்க, நாமதேவர்,

"நீலமணியனைய திருமேனியெழிலுந் திகழு
நிசிநாதபிம்ப முகமும்
நிகரிலாமார்பு மிருமுளரி கரமும்ஜலஜ
நேத்திரக் கடைப்பார்வையும்
ஆலமுண்டவ னன்னவாகனு கண்டலனும்
அறியாத கமல பதமும்
அன்புடனே தரிசனந்தந்து பிணிதீர்த்தெமை
ஆட்கொள்வ துன்பாரமே
பாலபாஸ்கரகோடி ஸமசேல ஸரஜால
பக்தஜன ஸம்ரக்ஷகா
பதிதபாவன நாமபணி பூஷணப்ரேமா
பரம பட்டாபி ராமா
ஸாலபேதன சண்டகோதண்ட சாபதர
ஸனகாதிமுனி ஸந்நுதா
சரணாகத த்ராணபாராயணும் போஜ
சரணகருணு பாராயணு
மித்ரமிகு பார்த்த ஸாரதிக்குகந்த நற்
பாத்ர தோத்திர நேசனே காத்ரனே"

எனப்புகழ்ந்து நைவேத்தியத்தை யூட்டினார். அதனை அன்புடனே யுட்கொண்ட பண்டரீநாதன் பரிவோடு நாமதேவரை நோக்கி, பாகவதோத்தமா! நீ உனது மகனுக்கு விஷ்ணு தாஸன் என நாம கரண மிடுவாயெனத்திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

நாமதேவர் வாடகை வீடுவந்து வைபவங்காணல்

நாமதேவர் கோவிலிலிருந்து தன் தாய் தந்தையர் குடிகூலி யிருக்கும் வீட்டினுள்ளே வெகு குதூஹத்துடனே வந்தார். அங்கே எங்கு பார்த்தாலும் பொன் துண்டுகள் நிரம்பியிருக்கக்கண்டு மனம் பூரித்தார். இனி அடியார்கள் அகம்மகிழ அன்னமிடலாமென நினைத்து உடனே அநேக பாகவதரை வருவித்து, அவர்கள் மனம் திருப்தியடையுமாறு பற்பல தானங்களுஞ்செய்து சாந்தியடைந் தார். அன்றே தம்பந்து வர்க்கத்தவரும் மற்று முள்ளாரும் காணத் தன் அருமைப்பாலகனுக்கு விஷ்ணுதாஸனென நாமகரணஞ் செய்தார்.

இங்ஙனம் நாமதேவர் கிடைத்த திரவியத்தை எல்லாம் திரண மாக நினைத்துத்தானஞ்செய்து வருவதைக்கண்டு சகியாத தாய் தந்தையர்களிருவருங் நாமதேவரை வெறுப்புடன் நோக்கி, அப்பா! உனது அறியாமையைக்குறித்து என்னவென்று சொல்லுவோம். நீயோ இன்று நாளை என்பதைச்சிறிதுங் கவனியாமல் காரியஞ் செய்து வருகின்றாய். நேற்றையதினம் நாம் பந்தலுக்கு ஒருகால் அகப்படாமல் பட்டபாடு அறியாயா? இன்றைக்கு இருக்கும் திர வியத்தை இப்படிவாரி இறைத்து விட்டால் நாளையதினம் யார் வந்துதவப்போகின்றார்கள்? அமாவாசை தினம் வருமா? எம்பெரு மான் தான் எப்போதும் வந்து கொடுப்பாரா? நீ ஒன்றுமறியாத வனா? இனி உன்கையைக் கொஞ்சம் மூடிவிட்டு மிகுந்தவற்றை ஓரி டத்தில் புதைத்து வைத்தால் பின்னுக்குதவுமென்று வற்புறுத்திக் கூறினர்.

அவ்வசனத்தைக் கேட்ட நாமதேவர் புன்னகைபுரிந்து, தந் தையே என்ன தெரிவித்தீர். நீர் இவ்வளவு காலமாகப் பண்டரீ நாதருக்கு நைவேத்தியம் ஸமர்ப்பித்தும் புண்ணியத்தின் பிரபாவ த்தை உள்ளபடி அறிந்துகொள்ளாதவராக இருக்கின்றீர். உமது அறியாமையை நான் என்னவென்பேன். தேவரீர் என்னுடனே வாதாடவெழுந்த வற்புதத்தை யென்னென்பேன்?

"துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி
பிறந்தவர்கள் காமுற மிருங்கட னியற்றி

யறம்பலவு மாற்றிவிருந் தோம்புமுறை யல்லார்
பிறந்தநெறி யாதுளதோர் பேருதவி யாதோ ''

என ஆன்றோர் உயர்த்துக்கூறிய துணரீரோ? அன்றியும்,

" கேட்டிட வேட்டவை யாவையு முதவுங்
கற்பகத் தருவென அற்பமுங் கருதாது
அடியுடன் முறித்து முடிவுற எறித்துக்
கரிபெற முயன்ற கம்மியன் போல ''

தன் மனையவளிடம் அடைந்து சிற்றின்பம் ஒன்றே சீரிதெனக் கொண்டு உடற்றின வருக்கும் ஆவுறிஞ்ஞிதறியாக்கித் தம் வாழ் நாளை வீணுக்குதல் பெரிதும் பேதை என்பதை அறியீரோ?

" தேங்குவின் போகமுஞ் சிறந்த முத்தியு
மீங்குறு மார்க்கமு மினிது நல்கலா
லோங்கிய வறத்தினை யுளமுன் மூன்றினும்
பாங்குற நித்தலும் பரிந்து செய்தியால் ''

என்பதை மறத்தலுமாமோ? இதன் பெருமையைத் தெரிந்தல்லவா பெரியோர்கள் பாசவறம் செய்தல், பசுவறஞ் செய்தல், பதியறஞ் செய்தலெனச் சொல்லியருளினர். இவைகள் மூன்றும் ஒன்றினை யொன்றுபற்றியே கூறிபன வென்பதைத் தெரியீரோ? தந்தையே! இவ்வுலகில் அசரவஸ்துக்களான கமுகு கதலி மா பலா விளா முதலிய மரங்கள் பிறர் கொள்ளும் பொருட்டுச் சுவையுள்ள பழவர்க்கத்தைச் சுமந்து தாழ்கின்றன. மேகங்கள் தண்ணீரைக் கொண்டு பூவுலகில் பொழியுமாறு பலவிடமும் போய்ப் பரவுகின்றது. இவ்விதமே, மேலோரும் எல்லா நலமும் நிரம்பப் பெற்றும் கடுமை முதலாய தீயகுணங்களை விட்டு யாவர்க்கும் எய்தற்கு எளியராய் இருப்பதல்லாமல் பிறரிடத்துத் தாமே சென்றும் உதவுகின்றனர். அவ்வாறு அவர்செய்வது கைம்மாறு வேண்டியன்று. கை,புகழ் கருதியோ நாவினுக்கு இனிய உணவளிப்பது? மாந்தர் தன்னைவெட்டி வீழ்த்துமளவும் மரம் குளிர் நிழலைக் கொடுத்து உதவுகின்ற தன்றோ? மரங்கள் பழுப்பதும், நதிகள் பெருகுவதும், பசுக்கள் திரிவதும் பரோபகாரத்தின் பொருட்டே யாதல்போல நமது சரீரத்தின் செயலும் பரோபகாரார்த்தமே யிருத்தல் வேண்டாவோ? அறிவும், ஜீவகாருண்ணிய முடைய மேலோரது செவி நல்லநூல் பொருள் கேள்வியினாலும், கை தானத்தினாலும் விளங்குமே யல்லாமல் குண்டலத்

தாலும் கங்கணத்தாலும் பிரகாப்பதல்ல. அதுபோலவே, அவர்களது தேகமும் பரோபகாரார்த்தத்தினுல் ஒளி பெறுமே அல்லாமல் சந்தனம் புனுகு கஸ்தூரி, கர்ப்பூரம், சவ்வாது, திருமண், குங்கும், விபூதி ஆகிய இவற்றின் பூச்சினுல் பிரகாச மடையாது. இவ்வகைய பெருங்குணங்களை யுடையவரையே நாம் துணையாகக்கொள்ளுதல் வேண்டும். பரோபகாரத்தையே ஆபரணமாகக் கொண்ட பெரியோர்கள் தமது தேகத்தையும் பொருள் செய்யவே மாட்டார். இத்தருமத்தில் முதலாகநின்ற சபிசக்கரவர்த்தியின் சரித்திரத்தைக் கேட்டதில்லையோ? எங்கும் நிறைந்துள்ள இருட்டைப்போக்கும்சந்திரனையும் தேவரீர் கண்டதில்லையா? முன்னம் ததீசிமுனிவர், தம்முடை முதுகெலும்பை வச்சிராயுதத்திற்காகஇந்திரனுக்குக்கொடுத்தருளிய வரலாறு தெரியாதா? மற்றும், உண்மை அறிந்த பெரியோர் தேகச்சிரமப்பட்டுப் பற்பல விதமான காரியங்களைச் செய்து பொருளைச் சம்பாதித்தல், தாமே உண்டு உடுத்துக் களித்து வாழ்வதன் காரணமாகவல்ல வென்பதைத் தேவரீர் தெரியாதவரா? பல புஷ்பங்களிலும் பறந்துபோய் ஆங்காரங்குள்ள தேனைக்கொணர்ந்து கூடுகட்டிச் சேமித்துவைக்கும் தேனீயானது கடைசியில் அதனைப் பிறர்கொள்ளத்தான் உண்ணுமல் இழத்தலைப்போலக் கள்வர்முதலியோர் கவர்ந்து போகத் தாம் அப்பொருளை வைத்துக் கடைசியில் இழத்தல் பொருட்டல்ல வென்பதை அறிவீராக வென்று தருமத்தின் மேன்மையைப் பல படியாக வெடுத்துச் சொல்லி, மாதாபிதாக்களின் மனதைக் கரைத்து, இருந்த பொன்னை யெல்லாம் பாகவதோத்தமர்களுக்கு அளித்து ஆனந்த கடலிற்றிளைத்துப் பண்டரீநாதன் திருக்கோயிலே தான் வசிப்பதற்கு நல்ல வாஸஸ்தானமாக வெண்ணி, அங்கேயே அல்லும் பகலும் இடைவிடாமல்,

பல்லவி

ராகவா வெனக்கெதி ராகவா
ரக்ஷணை செய்திடப் பக்ஷமாயிக்ஷணம் (ராக)

அநுபல்லவி

ஏகமனதாக நம்பிய தொண்டனென்
றெண்ணியனுகம்பை பண்ணி முன்னுலே
பாகவத மணியா மிபராஜனைப்
பாலனம் புரிய வந்தது போலே (ராக)

சரணம்

நாகேசன் ஈசனும் நான்முகனுங் கோர
ராக்ஷஸரால் கொண்டலச்சை பயந்தீர
ஸாகேதத்தி லவதரித்தது மார
சத்துரு வில்லை யொடித் தெரிந்தவீர (ராக)

என்று சின்னஸாமி பஜனை செய்து கொண்டிருந்தார் கேட்டீர்களோ முத்தர்களே.யென்று மேலும் விளம்பலானர்.

பகவான் வரிசையிட்ட வைபவம்

ஓ சித்தர்களே ! முத்தர்களே !! முதல்வனடியார்களே !!! பிறர்க்குதவிசெய்வதே உத்தம மென்றும், பலபொருள் வெஃகும் பற்றை அறுத்தலே நன்மை யென்றும், வீணைமனோராஜ்யம் செய்தலை யொழிப்பதே பெருந்தவமென்றும், இவை இருளுலகஞ் சேர்கைக்கு ஏதுவாதலின் மறத்தினிடத்து மனத்தைச் செலுத்தாமல், அதனை அறத்தினிடத்தே அமைத்தல் வேண்டுமெனத் தன் தந்தையர்களுக்குப் போதித்து வாதித்து, தான் கடவுளின் கிருபையாலடைந்த பொருளை யெல்லாம் அன்னதானம் முதலியனவைகளிலே எல்லையில்லாமற் செலவழித்துப் பாண்டுரங்கன் திருக்கோவிலினுள்ளே சென்றுபஜனை புரிந்து கொண்டிருந்தார்.

"தந்தைதாய் பணித்தல் செய்யுந்தவமலால் தவம் வேறில்லை
மைந்தருக்கு ஏதிகளேனும் வணங்குவர் தாபைத்தந்தை
அந்தமைந் தனையே போற்ற வேண்டும் மற்றுதல் தன்னல்
சிந்தையுற் றுணரில் தாயே தந்தையில் சிறந்தாள் மன்னே."

என நாமதேவர் வீட்டைவிட்டுப் போயின பின்னர், தாம்ஸேஷ்டியார் ஒன்றுந் தோன்றுதவராய்த் தன் மனைக்கிழத்தியை நோக்கி, பெண்ணே! நமது குமாரனுகிய நாமதேவனே காலதேசங்களை ஆலோசியாமல் பண்டரீநாதன் பரமகிருபைபாலளித்த திரவியங்களைத் தானமளிக்கத் தொடங்கினுன். நீ வயதில் மூத்தவளும் வாழ்க்கையிலே தெரிந்தவளுமாயிற்றே. நாமதேவன் அறியாமல் ஒரு புல்லாயினும் வைத்திருந்தால், அது இந்த ஆபத்துக் காலத்திற்கு உத

வியாக விருக்ருமே, அப்படி இல்லாமல் போன முன்போலத் தையல் வேலையைச் செய்து காலத்தைக் நடத்தி வந்தார்கள்.

நிற்க, இராஜாபாயின் தந்தையார் தன் மருமகனுக்குச் செல்வன் பிறந்ததும், அவன் குபேரஸம்பத்தை அடைந்து அநேக வாயிரம் பிராம்மணர்களுக்குக்கோதானங்களைச்செய்ததும் கேட்டு ஆனந்தமடைந்து, ஸம்பந்தியின் வீட்டிற்கு வந்து குசலம் வினவி, தாம் ஸேஷ்டியாரின் கட்டளையின் பேரில் தன் மகளைத் தன் வீட்டிற்கு அழைத்தேகினர். அங்கே இராஜாபாய் மிகவும் செல்வாக்குடனே பதின்மர் போற்ற இருந்து வந்தாளேயாயினும் தன் மாமியார் வீட்டிலுள்ள குறைவுகளைப்பற்றி மறந்தும் சொல்லுவதே கிடையாது. இங்ஙனமிருந்து வரும்போது விஷ்ணு தாஸனுக்குப் பதினொருமாதமாயிற்று. இராஜாபாயின் தந்தையாரோ தன் பேரப்பிள்ளைக்குக் காது குத்தி மயிர் வாங்குந் திருக்கலியாணத்தைத் தன்வீட்டிலேயே செய்து முடிக்க வேண்டுமென்று நிச்சயித்து ஒரு வேலைக்காரனைத் தாம் ஸேஷ்டியாரை வரும்படிக் கடிதங் கொடுத்தனுப்பினர்.

ம-ா-ா-ஸ்ரீ, தாம் ஸேஷ்டியார் அவர்கள் திவ்விய சமுகத்திற்குத் தனச்சிஷ்டியார் மிகவும் வணக்கமாய் எழுதிக்கொண்ட லிகிதம். இப்பவும் இவ்விடம் க்ஷேமம். அவ்விடம் க்ஷேமத்தைத் தெரிவிக்கக் கோருகின்றேன். நாளது தைமாதம் 5-தேதி யன்று நமது பௌத்திரன் விஷ்ணு தாஸனுக்கு மாதங்கள் பதினொன்று முடிவதால் காது குத்துஞ் சடங்கிற்கு நீங்களனைவரும் அதிகாலையிலே வந்து சேரவேண்டும்.

இங்ஙனம்,
தனச்சிரேஷ்டி.

லிகிதத்தைத் தாம் ஸேஷ்டியார் பார்த்து மிகவும் சந்தோஷ மடைந்தார். உடனே வேலைக்காரனை அனுப்பிவிட்டு, இருவரும் வெகுநேரம் வரையில் ஒன்றுந் தோன்றாமல், என்ன செய்யலாம். நாளை போகும்போது தகுந்த வரிசைகளுடன் போகாமற்போனால் சம்மந்தி நகைப்பானே? என்ன கஷ்டம் வாய்த்தது. "கொடிது கொடிது வறுமை கொடியது" என்னும் வாக்கியம் நமக்கே பொருத்தமானது நாமே இராஜாபாயும் குழந்தையையும் வருவித்துப் பந்துக்கள்புடை

சூழ அந்தக் கலியாணத்தை நடத்திக் களிப்போமென்றுலோ வறுமை நோயால் வருந்துகின்றோமே எனச் சிந்திக்கொண்டிருந் தனர்.

" அநயாச் சிந்தயந் தோமாம் யெஜநாः பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம் யஹம் "

என்று, பகவத்கீதையில் பகவான் அருச்சுனனை நோக்கி எந்த ஜனங் கள் அந்நிய தேவதைகளை யுபாஸிக்காமல், என்னையே சிந்தித்து இடைவிடாமல் உபாஸிக்கிறார்களோ? எப்போதும் நிஷ்டையுள்ள அவர்களுடைய யோகக்ஷேமத்தை நானே வகித்துக்கொள்ளுகி றேன் என்று சொன்னப்பிரகாரம், தனது திருவடிக்கமலங்களில் ஸதாகாலம் நிச்சலபக்தியை வகித்தும் பரமபாகவதர்களைச் சேவித் தும், அந்த மகான்களுடன் கூடியாடிப்பாடிப் பகவந்நாம கீர்த்தனஞ் செய்துகொண்டு தன் கோயிலை விட்டு நீங்காத நாமதேவரின் குடும்பமானதால் பண்டரீநாதன் ஒரு சாவுகார் வேஷத்தோடு தாம்ஸேஷ்டியாரிடம் போய், ஐயா க்ஷேமமா? உமது புத்திரர் க்ஷேமமா? நாளையதினம் உமது பேரனுக்குக் காது குத்தி மயிர் வாங்கும் சடங்கு நடைபெறப்போகின்றதாமே. இங்கே பார்த்தால் நீர் தலை குனிந்து உட்கார்ந்திருக்கின்றீர். அதற்காக வரிசையெடுக்க வேண்டாவோ? நீரென்ன பரம ஏழையைப்போலச் சும்மாசோகித் திருக்கின்றீர். தேவரீர் கிருபையால் இலக்ஷாதிபதியாக விருக்கி றேன். உங்கள் வீட்டில் ததியாராதனை நடந்தால் என் கடையில் பொன் நிரம்பும். பணமில்லையே என்கிற கவலைப்படவேண்டாம். எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கடன் கொடுக்கத்தயாராக விருக்கின்றேன். நீர் வேண்டும் திரவியத்தை வாங்கிப் போய்க் காரி யத்தை நடத்திவாரும். இப்போதே பதினாயிரம் வராகன் பொன் தருகிறேன். திருப்பிக் கொடுக்கவேண்டுமே என்னும் கவலைவேண் டாம். நான் முன் நாமதேவரிடம் இருபதினாயிரம் வராகன் கடன் வாங்கிப் போயிருக்கிறேன். அச்சிலன் கொடுத்த பணத்தால் என் வியாபாரம் செழித்தது ஒருவர் செய்த நன்றியை மறப்பதுநல மாகுமா? இவர் பத்தாயிரம் பொன் கொண்டு வந்து தருவார் என்று இயம்பி போனார்.

ஸாவுக்கார், தனம் சிறியனாகிய தனக்கு மிக்கவிநயத்துடன் செய்யாமற் செய்த விசேஷ மரியாதைகளை நினைத்து தாம்ஸேஷ்டி

யார் உள்ளம் நெக்குருகி ஆனந்தம் அடைந்தார். பண்டரீநாதன் நாமதேவரைச் சோதிக்கத் திருவுள்ளங்கொண்டு, திருக்கோவிலில் பஜனைசெய்து கொண்டிருக்குபவரை அழைத்து, அப்பா நாமதேவ்! நாளையதினம் காலையில் உனது குமாரனுக்கு மயிர் வாங்கிக் காது குத்தவேண்டுமோம். அவ்விஷபத்தில் செலவுசெய்ய பணமில்லாமல் உன் தாய் தந்தையர் சிந்தைவாடுகிறார்கள். நீ சென்று அவர்கள் மனவாட்டத்தை மாற்று என்ன, நாமதேவர் வீட்டை அடைந்து, இருமுதுகுரவரைத் தெய்வமெனப் பணிந்து, நீங்கள் வருந்தியிருக்கக் காரணமென்னவென, தாம்ஸேஷ்டி அப்பா! நாங்கள் வயது சென்ற காலையும் இக்குடும்பத் தொல்லைவிடவில்லை. நாளைக்கு உன் மைந்தனுக்கு மயிர்வாங்கிக் காது குத்தும் கலியாணம் நடக்கப்போகிறதாம் உன் மாமனுர் தெரிவித்தார். நாளை வரிசைகொண்டு போகாவிடில் நானிலத்தார் பரிகஸிப்பார்கள். ஸம்பந்திகளும் நமது பிழைப்பை ஏசுவார்கள் என்று சொல்லினுர். இப்படி பேசிக்கொண்டிருக்கையில் இரண்டு பரமபாகவதர்கள் சேவக வேஷத்தோடு வியர்வை நீர் வழிய சிரமப்பட்டு இரண்டு மூட்டைப் பொன் சுமந்துகொண்டு வந்து, தாம்ஸேஷ்டியாரே! இதில் பதினுயிரம் பொன் இருக்கின்றது என்று ஒருபுறத்தே போயுட்கார்ந்தார்கள். அப்போது நாமதேவ், தந்தையே இத்திரவியத்தை அநுப்பியது யார்? இவர்கள் யாவர்? எங்கிருந்து வந்தவர்கள்? என்று கேட்கையில் தாம்ஸேஷ்டியார் வாய் திறவாமல் மௌனியாக விருந்தார். அப்போது சேவகர்கள், நாமதேவரே! இப்பணம் உம்மிடம் எங்கள் சாவுகார் சாதுவேஷத்தோடு வந்து முன்னம் உம்மிடம் கடனுக வாங்கிக் கொண்டதாகும். இவ்விஷபத்தில் நீர் கலங்குதல் வேண்டாமெனக் கூறினர்.

அதுகேட்ட நாமதேவர் தனது காதுகளை மூடிக்கொண்டு தானஞ் செய்ததைப் பின்னர் வாங்கிக்கொள்ளுதல் மகாபாதகமாயிற்றே? இது கன்னிகாதான காலத்தில் பூதானஞ் செய்து மீண்டு அதனைப் பறித்துக்கொள்ளும் பாவியின் செயலாக விருக்கின்றதே. இந்தத் திரவியத்தை நாங்கள் தொடோம். இது மிகவும் துச்சமானது. நல்லோர்கள் இதனைத் தொடார்களாகையால் இக்கணமே உமது சாவுகாரிடம் திருப்பிக்கொண்டு போய்ச்சேர்த்து விடுங்களெனப்புகன்றனர். அவ்வமயத்தில் தாம் ஸேஷ்டியார் அன்புடன்

அளித்த ஸாவுகாரின் மனம் நோகும்படித் திருப்பியனுப்புதல் தர்ம மாகுமாவென்று கடிந்து பேசினர். அப்போது நாமதேவர்,

“பிதாதர்ம: பிதாஸ்வர்க்க:
பிதாஹி பரமம் தப:
பிதரி ப்ரீதிமா பந்நே
ஸர்வா: ப்ரீயந்தி தேவதா:”

என்னும் தர்மத்தின்படி தந்தையே புண்ணியம். தந்தையே சுவர்க் கம். பிதாவே மேலான தபசு. தந்தையைச் சந்தோஷப்படுத்தினல் ஸகல தேவதைகளும் சந்தோஷப்படுவார்க ளென்பதையும், மாதா பிதாக்களின் வாக்கியத்தின்படி நடந்து, அவர்களுக்கு நன்மையைச் செய்து, நல்ல வழியில் நடக்கிறானோ அவனே புத்திரனென்னப்படு வானென்பதையும், நான் அறிந்தவனேயாவன். ஆயினும் தேவரீர்,

“ய:புத்ரோகுண ஸம்பந்நோ
மாதாபித்ரோ ர்ஹிதஸ்ஸதா
ஸர்வமர்ஹதி கல்யாணம்
கநீயாநபி ஸத்தம:”

என்கிற வண்ணம் நற்குணமுடையவனும், பெற்றோர்களுக்கு மேன் மையை எப்போதும் தேடுகிறவனுமான குமாரன் மற்றவர்களைக் காட்டிலும் வயதிலே சிறியவனானாலும் சகல நன்மைகளைபு மடையத் தகுந்தவனென்று எண்ணுதல் வேண்டும். நான் எக்காரணத்தா லும் நன்மையையே நாடுகின்றவன். நான் தானஞ்செய்ததை இச் சித்துமீளாநரகத்திற்கு ஆளாகமாட்டேன் தந்தையாரே! முன் தாசரதி இராவணவதானந்தரம் இலங்கையின் சிலையைக்காண, ஜாம்பவான், அமலனே! தத்தாபகாரஞ்செய்ய நினைத்தவனே மாத்திரம் கண்டதே இல்லையென, எம்பெருமான் ஜாம்பவான் தர்ம சூக்ஷ்மத்தை அறி ந்து, அப்பால் இலங்கையுள்ளே பிரவேசிக்க மனம் வையாமல் திரும் பினர். முன்னே, நான் கொடுத்த திரவியத்தை மீண்டும் வாங்கிக் கொள்ளுதல் நலமாமோ. ஆகையால், இவர்கள் இந்தப் பொன்னை எடுத்தேகலே தகுதியெனத் தந்தையின் மனதைக் கரைத்து, தந் தையே! நீர் ஏன் கவலையுறல் வேண்டும். நம்பண்டரிநாதனை உள் ளன்புடன் பஜித்தால் அவர் நம்குறை தீர்த்து நலமளிப்பார். தெய்வ பக்தி உண்மையாக இல்லாதவர்களல்லவோ ஒவ்வொரு காரியத்தி

னும் மனவாதைப்படுதல் வேண்டும். எம்பெருமான் தன்னை நாடின ரைக் கைநழுவ விடாதவனுயிற்றே? அந்த ஸர்வலோக சரணியன் தேவர்களை விட்டானு? முனிவர்களை விட்டானு? பெண்களை விட்டானு? ஆனையை விட்டானு? ததிபாண்டவனை விட்டானு? தாஸர்களை விட்டானு? அப்படியிருக்க நீரேன் வியனமடைதல் வேண்டும். நீர் யாவற்றையும் பாண்டுரங்கன்மேல் சுமத்தித் தெளிவுடன் உறங்கலாம். இப்போது நள்ளிரவாயிற் றென்றூர். பிறகு நாமதேவர் நாளை நடைபெற வேண்டியதைப்பற்றி ஒரு சிறிதும் கலையில்லாதவ ராய்ச் சயனித்துக்கொண்டு,

" எந்தாய் போற்றி இறைவா போற்றி
மன்னு போற்றி மணாளா போற்றி
அஞ்சன வண்ணத் தரியே போற்றி
குஞ்சரங் காத்த கோவே போற்றி
கஞ்சனை யடர்த்த கண்ணு போற்றி
கருங்கடற் றுயின்ற காரே போற்றி
ஆயிரந் தோளுடை யடுபோர் வாணனை
நேமியிற் றுணித்த தேடியாய் போற்றி
பார்த்தன் போற்றும் பரமனே போற்றி
பேருல களந்த மாலே போச்றி
தூப்புல் வேதியன் தூயனே போற்றி
மருதிடைத் தவழ்ந்த மாயா போற்றி
மாக்கடல் கடைந்த மகேசா போற்றி
பெருவரை யெடுத்த பிரானே போற்றி
சங்கொடு சக்கரந் தரித்தாய் போற்றி
தண்டொடு சார்ங்கமுந் தனிநாந் தகமும்
பிண்டி பாலமும் பெருவச் சிரமும்
எண்டிசை நிறைந்த வெம்மான் போற்றி
அண்டமும் விசும்பு மகலிட மெல்லாம்
உண்டுமிழ்ந் தவனே யொருவா போற்றி
திருமறு மார்பத் திருமால் போற்றி

தீவினை கெடுக்குஞ் செல்வா போற்றி
அருமறை தேடு மடியாய் போற்றி
அடியவர் வினைகெட வருவாய் போற்றி
திருவருள் தருவாய் திருவடி போற்றி"

என்று பகவத்குணாநுபவங்களைப் பாடிக்கொண்டிருந்தார். இப்படிப் பகவானது பெருமைகளை யெல்லாம் வாயாரப் புகழ்ந்து போற்றும் நாமதேவரின் பக்தியினைக் கண்டவர்களாகிய தாம்ஸேஷ்டியும் குணபாயும் ஆனந்தக்கடலிலாழ்ந்து அயர்ந்து தூங்கினார்கள். பகவந்நாம சரிதங்கள் பேசுங்காலும் சொல்லுங்காலும் தன்னை மறந்து தூங்குபவர்கள் தாரணியில் தத்தளிக்கும் புழுவாய்ப் பிறந்தும், பல கற்பகோடிகாலம் ஆத்மஞானமற்ற ஆன்மாவாய் அகிலத்தில் பிறந்தும், கண்கெட்ட குருடனாகத் திரிந்தும் பதினேழு கல்பம் பசுவாகத்திரிந்தும் அவதிப்பட்டுப் பின்னர் மானிடவர்க்கத்தில் வந்து தோன்றுகின்றரென நாரதர் சொல்லுகின்றாரே? இவர்கள் எங்ஙனம் பகவந்நாமஸங்கீர்த்தனம் பாடிக்கொண்டிருக்கையில் ஆக்கை மறந்து அயர்ந்து நித்திரை புரிந்தார்களென்னில், பகவத்குணக் கடலில் படிந்து கண் மூடிக்கொண்டாரியில்லை. இரவு மூன்றுஞ்சாமமும் ஆரம்பித்து விட்டபடியால் நாமதேவரும் சிறிது கண்ணுறங்கினார்.

இவர்கள் இப்படி நித்திரை புரிகையில் பொன் கொண்டுவந்து திரும்பிய பாகவதகளிருவரும் பகவான் ஸன்னிதானத்தை அடைந்து பகவானைப் பணிந்து, ஹே! பக்தவஸ்ஸலா! உமது சோதனை எங்களுக்கு வாதனையாகும். நாங்கள் வருந்தி வழிநடந்ததே பலனையிற்றே யல்லாமல் நாமதேவ் எங்கள் மனம் நோக நீர் அனுப்பிய திரவியத்தைத் திருப்பி விட்டான். அவன் தத்தாபகாரஞ் செய்யமாட்டேன். ஆனால், தாசரதி அதனை மனதில் நினைத்தானென்று தேவரீர்மீது குற்றம் சுமத்தினனென்றார். அதனைச் செவியிலேற்ற கருணாநிதி மனமகிழ்ந்து, நாலாஞ் சாமத்தில் அநேக பரமபாகவதர்களும் தேவகன்னிகையர்களும், கண்கொண்டு சகிக்காத நவரத்னங்களும் பழவர்க்கங்களும் நிரைந்த தட்டுகளுடனே வாத்தியங்கள் கோஷிக்க நாமதேவர் திடுக்கிட்டெழுந்து, வாயிலில் பெருங்கோஷமாக விருக்கின்றதேயென வந்து பார்க்கையில்,

" நித்தியம் விபும் ஸர்வகதச்ச ஸுஸூக்ஷ்மம்
ஆகாசவத் ஸர்வ கதச்ச நித்ப:"

என்னும்படிக் காலபரிச்சேதமில்லாது ஸர்வபூதாந்தர்யாமியாய் ஸர்வஸாக்ஷியான ஸ்ரீமந்நாராயணனே ஸர்வ வைபவாதி வரிசைகளுடன் வந்து நிற்பதுகண்டு மனம்விண்டு, இது அடியேன் செய்யும் தொண்டின் நிமித்தமோவென்று ஆனந்தபாஷ்பம் பெருக நின்று போற்றும், நாமதேவரைப் பகவான் அருகிலழைத்து, அப்பா! உனக்கு மாத்திரம் என் நிஜரூபம் தோன்றும். மற்றவர்களுக்கெல்லாம் எனதுருவம் ஒரு வர்த்தகனைப்போலவே காணப்படும். நீ என்னைக் கண்டு அடிக்கடி ஆனந்தங்கொண்டு குட்டை வெளிப்படுத்தி விடாதே. இதோ தட்டில் வைத்துள்ள ஆடையாபரணங்களையெல்லாம் நீ அணிந்துகொண்டு உன் தாய் தந்தையரையும் அணிந்து கொள்ளச் செய்வித்துச் சீக்கிரம்புறப்படுங்கள் என்றறைந்தனர். நாமதேவர் பூரித்துத் தூங்கியிருக்கும் தன் தாய் தந்தையரை எழுப்பி ஆடையாபரணங்களைக் கொடுத்துச் செல்வோம் வாருங்களென, எல்லோரும் எம்பிரான் ஆரோகணித்து வந்த விமானத்தேறிப் புறப்பட்டனர். விமானம் மிகவும் விரைவாக ஸர்வமங்கள கோஷங்களுடனே போவதைக் கண்ட நகரவாஸிகள் அற்புதமடைந்தார்கள். ஒருவர் வர்த்தகனைநோக்கி, ஐயா! உமது வாஸஸ்தான மெதுவோவென்று வினவ, அதற்கவ்வணிகர், நான் இப்போதிருப்பது இவ்வூரேயாகும். நிலையாயிருப்பது வைகுந்தபுரம். நான் பெரிய ஸம்ஸாரி. சிலர் என்னைக் கேசவ ஸாவகாரி என்றழைப்பார். சிலர் நாராயண ஸாவுகாரி யென்றழைப்பர் என, இதற்குள் விமானம் நாமதேவ் மாமனா வீட்டை அடைந்தது.

இவ்விதம் தன் ஸம்பந்தியாரின் வரவினைக் கண்ட தனச்சிரேஷ்டியார் பெருமகிழ்ச்சி கொண்டார். அவ்வூரிலுள்ளாரும் தனச்சேஷ்டி பெற்ற பாக்கியம் பெற்றவர் யார்? பெண் பெற்றாலும் பாக்கியம் வேண்டாமா? இராஜாபாய் செய்ததவப்பயனாலே தான் கல்வி செல்வம் பக்தி கணவனை முதலியனபெற்ற அடைந்தாள். இவர்களோடு வந்திருக்கும் ஸாவுகாரின் அழகும் அவரணிந்துள்ள பீதாம்பரப்பொலிவுங் கண்டால், மானிடவர்க்கத்தவரில் சேர்ந்தவராகவே சொல்ல முடியாது என்றனர்.

தனச்சேஷ்டி முகூர்த்தம் நெருங்க விஷ்ணு தாஸனை மங்கள ஸ்நானஞ்செய்வித்து ஆபரணங்களால் அலங்காரஞ் செய்வித்தார். தாம்ஸேஷ்டியாரும் இவ்வளவென்று சொல்ல முடியாத நவசோபித ஆபரணங்களைப் பூட்டித் தன் மருமகளுக்கும் விலைமதிக்க முடியாத ஆபரணங்களைப் பூட்டினார். எஞ்சியவாபரணங்கள் தசரதமகாராஜன் கொலுமண்டபமாகவே பொலிந்து கொண்டிருந்தது.பின்னர் அதிதிகட்கும் அந்தணர்கட்கும் அகதிகட்கும் அன்னதானம் சொர்ன தானம் வஸ்திரதான்ம் முதலியன வழங்கினர்.

சாவுகார் தனச்சேஷ்டியாரை நோக்கி, ஐயா! நான் உமது மருமகனுக்குச் சிநேகிதன். அவன் என்னை மறந்த நாளுங்கிடையாது. நான் அவனை மறந்த நாளுங்கிடையாது. நான் என் நண்பனைப் பார்க்க வந்தேன். வந்தவிடத்தில் அவர் அருமை மகனுக்கு இன்று காது குத்துஞ் சடக்கெனக் கேட்டேன். உடனே என்னாலான மரியாதைகளைத் தந்தேன். எனக்கு இரவுமில்லை; பகலுமில்லை. யார் என்னைச் சகாயமாக வேண்டுகின்றார்களோ அவர்களிடம் போகும் வேலையே பெரிய தொல்லை என்று, தாம்ஸேஷ்டியாரையும் நாமதேவரையும் நோக்கி, இனி நீங்கள் சந்தோஷத்துடனே இருங்கள். நான் பண்டரீபுரத்திற்குப் போய், பண்டரீநாதனை சேவித்து வைகுந்தபுரம் போகிறேனென மறைந்தார்.

சம்மந்தி வீட்டில் தாம்ஸேஷ்டியும் நாமதேவரும் மிகவும் மரியாதையோடியிருந்து, பின்னர் குடும்பத்துடனே பண்டரீபுரம் வந்து சேர்ந்து முன்போலவே நைவேத்தியம் படைத்துவரும் நாளையில், ஒருநாள் பண்டரீநாதன், நாமதேவ்! நீ கிருபண ஸார்வ பௌமன். உனக்கு வேண்டும்போ தெல்லாம் நான் பணம் கொடுத்தேன். பணி செய்தேன். பந்தல் போட்டேன். அவைகளை நீ மனதில் வைக்கவில்லை. எனக்குச் சேரவேண்டிய கூலிகளைக் கொடுக்கவுமில்லையென நாமதேவர், பகவானைப் பணிந்து, ஹே கருணாகரா! கார்முகில் வண்ணா! எனக்கென ஒரு பொருள் உன்னையன்றி வேறிருந்தால்தானே கொடுக்கவும் எடுக்கவும் உரிமையுடையேன். நீர் பேதப் படுத்தினாலும் நான் பேதமாயிருப்பேனோ, வென்று புலம்ப, பகவான் அலரை அணைத்துத் தேற்றி, உன் எண்ணத்தை அறிந்தேன் என்றார்.

நாமதேவர், வைகுண்டவாசா! விமலர்கள் விசுவாசா! என்று காலையில் விழித்ததுமுதல் மறுபடியும் இரவு நித்திரை புரியுமளவும் ஸர்வாவஸ்தைகளிலும் ஜகத்துக்கெல்லாம் ஆதாரமாகியும் காரணமாகியும் பரமான் மாவாகியும் மோக்ஷரூபனாகியும் விளங்குகின்றவன் நீயொருவனன்றோ? வென்று துதிக்கையில், பகவான் நாமதேவினை மேல் கிருபை புரிந்து கருணை நிறைந்து, நீ குறைவில்லாதிருப்பையாகவெனத் திருவாய்மலர்ந்து மறைந்து முன்போலவே சிலாவுருவம் அடைந்தார், அதன்மேல் நாமதேவ்,

“ ஹரேராம ஹரேராம ராமராம ஹரேஹரே
ஹரேக்ருஷ்ண ஹரேக்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரேஹரே.”

என்று பிரணவ ஸஹித திவ்ப மந்திரத்தைச் சொல்லிக்கொண்டு ஆனந்த பரவசத்துடன் நாளைக்கழித்துக்கொண்டு வரலாயினர்.

‘ கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ’

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றிற்று.

பொருளடக்கம்

பக்கம்

1 நாமதேவர் அவதாரம் 1

2 நாமதேவர் பகவானுக்கு அன்னமளித்தல் 17

3 நாமதேவின் விவாகம் 29

4 பகவான் பொன் வழங்கியது 35

5 பண்டரீநாதன் திருவிளையாடல் 40

6 பகவான் பணியாளராக வருதல் 49

7 நாமதேவர் வாடகை வீடுவந்து வைபவங்காணல் ... 59

8 பகவான் வரிசையிட்ட வைபவம் 62

செல்வரங்கன் பிரஸ், சென்னை.

எமது வெளியீடு

பன்னூலாசிரியரும், உரையாசிரியருமான,

தமிழ்ப்பண்டிதர்,

T. C. பார்த்தஸாரதி அய்யங்கார்

எழுதியது

1	கபீர்தாஸர் சரித்திரம்	0	6	0
2	துளஸிதாஸர் சரித்திரம்	0	4	0
3	இராமதாஸர் சரித்திரம்	0	4	0
4	சக்குபாய் சரித்திரம்	0	4	0
5	துக்காராம் சரித்திரம்	0	4	0
6	குசேலர் சரித்திரம்	0	4	0
7	நாமதேவர் சரித்திரம்	0	4	0
8	டோலாதாஸர் சரித்திரம்	0	5	0
9	பகவானந்ததாஸர் சரித்திரம்	0	4	0
10	மீராபாய் சரித்திரம்	0	4	0
11	ததிபாண்டவர் சரித்திரம்	0	4	0
12	மாதவதாஸர் சரித்திரம்	0	4	0

குறிப்பு:—இன்னும் என்னுல் எழுதப்பட்ட பல நூதன பக்தர்கள் சரித்திரங்கள் வெளியாகும்.

எமது விலாசம்:—

R. இராஜகோபால் நாயுடு,

செல்வரங்கன் பிரஸ்

3/26, கிருஷ்ணப்ப நாய்க்கன் குளத்துத்தெரு, சென்னை.